JL
Y15m2Y1N24CM
N28.5.5
207625

No. M. 1957. WHOLE NUMBER 53. VOL. V, NO. 5.

# சிந்தாமணி

Vol 5 No 5

வருட சந்தா



உள் நாடு 5 ரூபா

வெளிநாடு $4

# CHINTAMANI



டிசம்பர் 1928

பத்திராதிபர், சகோதரி V.பாலம்மாள்

## பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| சுபோத ராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்) | ... 258 |
| பெண்களும் விவாகச் சட்டமும் (பத்திராதிபர்) | ... 259 |
| சந்திரவர்மா (ஓர் நாடகம்) (ஸ்ரீமான் R. நாராயணசாமிராவ், B.A.) | ... 26: |
| நக்ஷத்திரங்கள் (ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள், B.A.) | ... 268 |
| மீராபாய் மகாராணி (சுவாமி அற்புதானந்தர்) | ... 270 |
| "குலமகட்கழகு கொழுநனைப் பேணுதல்" (ஸ்ரீமான் Y. C மணி) | ... 278 |
| பிரஹ்லாத விஜயம் (ஸ்ரீமான் K. நடராஜய்யர்) | ... 279 |
| அன்பு (ஸ்ரீமதி குகப்ரியை) | |
| கதா விநோத மாலை (Pandit M M. N. Aiyar) | |
| மாதர் உயர்வு (ஸ்ரீமான் கா. சி. சிவசங்கர முதலியார்) | ... |
| செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி (ஸ்ரீமான் ஊ. கோவிந்தசாமி பண்டிதர்) | ... |
| ஒற்றுமையின் வெற்றி (சகோதரி வி. பாலம்மாள்) | ... |
| மாயா - ஜோதி (சிறு கதை) (பம்பாய் ஸ்ரீமான் நா கு கோபாலயங்கார்) | ... |


சைகோன்

அன்புள்ள சகோதரியே! 15—6—19

தங்களின் சிந்தாமணி என்னும் பத்திரிகையை வாசித்து மகிழ்வடைந்தேன். தாய்நாட்டில் பெண்மக்களுக்கென்று ஓர் பத்திரிகையில்லாதிருந்து வந்த குறையை நீக்க பெண்களின் உரிமையை எடுத்துக்கூறி முன்னேற்ற மடையும் மார்க்கத்தைக் காண்பிக்கக்கூ தாகவும் உள்ள தங்களின் உயர்ந்த நோக்கத்தைத் தெரிவிக்கும் இப்பத்திரிகையை பொது மேன்மக்கள் யாவரும் அன்புடன் ஆதரிக்கக் கடமைப் பட்டவர்களாயிருக்கிறார்கள். பெண்க க்ஷேமத்தை நாடி அன்னிய தேசங்கள் சென்று சிரமங் கருதாது உழைத்துவரும் உங்க அரிய தேச சேவைக்கு என் மனமார்ந்த வந்தனஞ் செலுத்துகிறேன். சிந்தாமணி என் அருமைப் பெயர்வாய்ந்த தங்கள் பத்திரிகை மேன்மேலும் கீர்த்தி ஓங்கித் தன் சந்தாத மகிழ்விக்கச் செழித்து நீடூழி வாழ்ந்திருக்கவும், இந்த சிரமமான காரியத்தை மேற்போ உழைத்துவரும் தங்களுக்கு நல்ல தேகாரோக்கியத்துடன் கூடிய நீண்ட ஆயுளைத் தந்து க எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

இங்ஙனம்,

மதாம் ஜோஸப் அதிசயம்.


# CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

ol. V.] December 1928. [No


श्री शारदायै नमः ।



श्रीरामचन्द्रपरब्रह्मणे नमः

207625

# சிந்தாமணி

## சுபோத ராம சரிதம்

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.*

*(All Rights reserved by the Authoress)*

**सुबोधरामचरिते**

**॥ सुन्दरकाण्डः ॥**

**अनेकतरुसङ्कीर्णामशोकवनिकां तदा ।**
**बभञ्ज मारुतिस्तूर्णमवधीत्किङ्करान्बहून् ॥ २७ ॥**

**तदा** பிறகு **मारुतिः** ஆஞ்சனேயர் **अनेकतरुसंकीर्णां** பற்பல மரங்களுடன் விளங்கும் **अशोकवनिकां** அசோகவனத்தை **बभंज** அழித்தார் **बहून्** அனேகம் **किंकरान्** கிங்கரர்களை **तूर्णं** விரைவாக **अवधीत्** கொன்றார் ॥ २७ ॥

**जम्बुमालिनमाहत्य सप्त मन्त्रिसुतानपि ।**
**पञ्च सेनापतींश्चाक्षं नीतश्शक्रजिता पुरम् ॥ २८ ॥**

(**सः** அந்த மாருதியானவர்) **जंबुमालिनं** ஜம்புமாலியையும் **सप्त** ஏழு **मन्त्रिसुतान् अपि** மந்திரிகுமாரர்களையும் **पंच** ஐந்து **सेनापतीन्** சேனாதிபதிகளையும் **अक्षंच** அக்ஷனையும் **निहत्य** கொன்று **शक्रजिता** இந்திரஜித்தினால் **पुरं** இலங்கை நகருக்கு **नीतः** அழைத்துச் செல்லப்பட்டார் ॥ २८ ॥

**सोऽब्रवीद्रावणं दृष्ट्वा मुञ्च राक्षस जानकीम् ।**
**न चेद्राघवबाणस्त्वां नयेद्यमपुरीमिति ॥ २९ ॥**

**सः** ஆஞ்சனேயர் **रावणं** ராவணனை **दृष्ट्वा** பார்த்து **राक्षस** ஏ ராக்ஷதனே **जानकीं** சீதையை **मुंच** விட்டுவிடு **नचेत्** இல்லையெனில் **राघवबाणः** ராமபாணம் **त्वां** உன்னை **यमपुरीं** யமனுலகிற்கு **नयेत्** அனுப்பிவிடும் **इति** என்று **अब्रवीत्** உரைத்தார் ॥ २९ ॥

**लङ्केशस्तद्वचः श्रुत्वा क्रुद्धस्स्वान्वीक्ष्य किङ्करान् ।**
**वानरो हन्यतामेष शीघ्रमित्यादिशत्तदा ॥ ३० ॥**

**तदा** அப்பொழுது **लंकेशः** ராவணன் **तद्वचः** அவ்வார்த்தையை **श्रुत्वा** கேட்டு **क्रुद्धः** (**सन्**) கோபமடைந்தவனாக **स्वान्** தனது **किंकरान्** ஏவளாட்களை **वीक्ष्य** நோக்கி **एषः** இந்த **वानरः** குரங்கு **शीघ्रं** துரிதமாக **हन्यतां** கொல்லப்படட்டும் **इति** என்று **आदिशत्** கட்டளையிட்டான் ॥ ३० ॥

*(To be continued)*



# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் — சகோதரி வி. பாலம்மாள்.

லர் V.] விபவ—மார்கழி. [இதழ் 5.

## பெண்களும் விவாக சட்டமும்.

(பத்திராதிபர்.)

நெடுநாட்கள் தன் நிலை மறந்து உறங்கிக் கிடந்த இந்தியாவானது தற்சமயம் உறக்கம் தெளிந்து கண் விழித்ததுடன் நில்லாது தனது ஒப்பற்ற அந்தஸ்தை மீண்டும் பெறுவதற்கான வழியில் ஈடுபட்டு உழைத்து வருகின்றது. இந்தியாவின் உயர் நிலைக்கு என்னென்ன செய்யவேண்டு மென்பதைப்பற்றி பேரறிவாளிகளான மாப்பெருந்தலைவர்கள் முதல் அரைகுறை படித்த கற்றுக்குட்டிகள் வரை தங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாக வெளியிட்டு வருகின்றார்கள். தத்தமது கொள்கைகளை ஸ்தாபிப்பதற்காக ஏராளமான பத்திரிகைகளும் விடாமுயற்சியுடன் வேலைசெய்கின்றன. இதற்கிடையில் இந்தியாவில் ஒருகால் ஒற்றுமையும்சுதந்திரமும் நிலவிவிட்டால் இந்தியர்கள் அனியாயமாய்க் கெட்டுப்போய் விடுவார்களோ என்ற பரிதாபத்துடனும் பிறநாட்டினரின் பொழுது போக்கிற்காகவும், ஒழிந்த நேரத்தில் தோன்றியதை எழுதினால் பணங் கிடைத்தவரை லாபமென்ற புத்தி சூட்சுமத்துடனும் நமது அருமை சகோதரி மிஸ் மேயோவும் இதுவே தக்க நேரமென "இந்தியத் தாய்" என்ற உயர் திரு புத்தகம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். (இவ்வம்மையாரின் புத்தகம் வாங்குவதற்கு நம்மவர்கள் செலவழித்துள்ள தொகையைக் கணக்கிட்டால் அதைக்கொண்டு பல சகோதர சகோதரிகளை வெளி நாடுகளுக்கனுப்பி இந்தியாவின் உயர் நடவடிக்கைகளைப் பிரசாரம் செய்வித்திருக்கலாம்.) இவ்வாறு பலவித நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தியப் பெண் உலகமும் தனக்கேற்ற முன்னேற்றத்தை நாடுவது நியாயமான செய்கை தான். தேச முன்னேற்றத்திற்குத் தாய்மார் என்ற பொறுப்புள்ள அந்த

ஸ்தை வகிக்கும் பெண்மக்கள் திருத்த மடைந்தாலன்றி தேசம் சீர்திருந்தமாட்டாது. பொதுவாக மானிடர்கள் முன்னேற்ற மடைவதும் சீர்திருத்தங் கோருவதும் அறிவின் வளர்ச்சியினாலேயே யன்றி வேறில்லை. தக்க அறிவை யடைந்து தமக்குத் தாமாகவே நன்குணர்ந்து கோரும் திருத்தத்தையே சீர்திருத்த மெனச் சொல்லலாம். மனிதன் அறிவைக் கல்வியினால் பெற்று அவ்வறிவினால் தன் நிலைமையையும் அயலார்களின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தன்னிடத்திலுள்ள குறைகளை நீக்கிக்கொள்ளப் பாடுபடுதலே சீர்திருத்த மெனப் படும். அயல்நாட்டுச் சரித்திரங்களில் மக்களுக்கு அறிவு முன்னும் சீர்திருத்தம் பின்னுமாக இருப்பதைக் காணலாம். இந்தியாவில் உயர் தரக்கூலிகளைத் தயாரிக்கும் கல்வி மேலோங்கி அறிவை வளர்க்கும் கல்வி மறைந்து விட்டதினாலேயே பணச் செருக்கும் அபிப்பிராய பேதமும் ஏழை மக்களின் கண்ணீரும் அனாவசியமான போராட்டங்களும் ஏற்பட ஏதுவாயிருக்கின்றன. மனிதன் என்றிருப்பவன் ஒவ்வொருவனும் அறிவை வளர்க்கும் கல்வியைப் பெறக்கூடிய சாதனம் இன்றளவும் இப்மியளவும் காணமுடியாமலிருக்கின்றது. ஆடவர் கல்விப் பயிற்சி இந்த லட்சணத்தில் இருக்கும் போது இந்தியப் பெண்கள் தக்க அறிவை யடைந்து அவ்வறிவின் மூலமாகச் சீர்திருத்தம் கோருகிறார்களென்று சொல்வதெப்படி? லட்சத்தில் ஒருவர் படித்திருந்த போதிலும் தங்கள் சமூகத்திற்குத் தாங்களே பிரதிநிதிகளென்று தற்காலக் கல்வியைக் கொண்டு நிச்சயித்து விட முடியாது. தற்காலக் கல்வி வேறு, பெண் மக்களின் கோரிக்கை வேறு. இந்தியப்பெண்களில் ஒரு சிறு பகுதி தவிர்த்து மற்றவர்கள் எல்லாம் தற்காலக் கல்விப் பயிற்சிலும் நவீன வாழ்க்கையிலும் ஈடுபடாதவர்கள் என்பது திண்ணம். அன்னார்கள் தற்கால நாகரிக சம்பிரதாயத்திலீடுபட்டுத் தங்கள் கோரிக்கைகளை வெளியிடக் கூடியவர்களல்ல. படித்த பெண்கள் தீவிர சீர்திருத்தங் கோருவார்களாயின் அதை ஜனங்களிடையே பிரசாரம் செய்து தக்க ஆதரவைப் பெற முயற்சித்தல் சிலாக்கியமான வழியாகும். இதைவிட்டு ஆரம்பத்திருத்தத்தையே சட்டமூலமாகக் கட்டுப்படுத்தலென்பது ஒரு காலத்திலும் ஒவ்வாத காரியமாகும்.

ஒரு சிலர் செய்யும் கிளர்ச்சியையும் அவர் தம் வாக்குமூலத்தையும் கொண்டு பெரும் பகுதி கட்டுப்பட்டு நடக்கும்படி சட்டமியற்றல் நீதியன்று. மூடநம்பிக்கையாலோ அல்லது தக்க காரணங்கொண்டோ பூர்வீக வாழ்வைக் கோருபவர்களை காலக்கிரமத்தில் வழிப்படுத்துதல் விடுத்துக் கடுமையான சட்ட மொன்றை இயற்றி மற்றவர்களை நெருக்கிப் பிழிதல் அநீதச்செய்கையாகும். வருவாய்க்கு வழியற்ற படிப்பைப் படித்து விட்டு உத்தியோகம் உத்தியோகமென்று தெருவழி திரியும் வாலிபர்களைப் பெரும் பணமளித்து ஆடுமாடுகளைப்போல் விலைக்கு வாங்கி மகளின் விவாகத்தை முடிக்க வேண்டியவர்களாயிருக்கும் பெற்றோர்களை இச்சட்டம் கொண்டும் துன்புறுத்தல் வேண்டுமோ?

தற்சமயம் இந்தியா கோரும் சுயராச்சிய திட்டம் அதிகாரவர்க்கமியற்றும் சட்டதிட்டங்களை ஜனப்பிரதிநிதிகள் பெயரால் நடத்த வேண்டும் என்ற கொள்கையுடன் கூடியதாக இருக்குமாயின் அத்தகைய சுயராச்சியம் இந்தியாவுக்கு என்றைக்கும் தேவையே இல்லை. ஒவ்வொரு மனிதனும் தன் அறிவைக்கொண்டு தன் வாழ்நாளின் நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலே பூரண சுதந்திர மெனப் படும். மதத்திலும் சமூகத்திலும் சீர்திருத்தப் படவேண்டிய அம்சங்கள் பல என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அவைகளைச் சட்டமூலமாகத்தான் திட்டப்படுத்த வேண்டுமாயின்



அதற்கேற்ற நிலை தற்சமயம் நம்மிடத்தில் இல்லை என்பதே நமது வாதம். உண்ணவும் உடுக்கவும் வழியின்றி லட்சக்கணக்கான ஜனங்கள் அவதிப்படுவதைத் தடுக்கவும் தொழிலாளர்களின் ரத்தக் கண்ணீரைத் துடைக்கவும் ஏழை மக்களுக்கு ஏராளமாகப் பணச் செலவு செய்து இலவசக் கல்வி அளிக்கவும் மாட்டாதவர்களாகக் குடியேற்ற நாட்டின் அந்தஸ்துக் கிடைத்தால் அதுவே ஆனந்தமெனக் கையேந்தி நிற்கும் நாம் மதத்திலும் சமூகத்திலும் தலையிட்டு அவதிப்படவேண்டிய அவசரம் யாது?

நமது அனுபவத்தில் நாளுக்கு நாள் பெண் உலகம் தானாகவே முன்னேறி வருகின்றதைக் காண்கிறோம். பெண் கல்வியைத் திட்டப்படுத்த வேண்டுமென்ற ஊக்கம் ஆங்காங்கு உண்டாகி வருகின்றது. பெண் மக்கட்குரிய கல்வி பரவி விடுமாயின் பெண் சமூகம் தனக்கேற்ற சீர்திருத்தங்களைச் சட்டமூலமாகவோ சம்பிரதாய மூலமாகவோ தேடிக் கொள்ளுமென்பதில் சந்தேகமே இல்லை. இவ்வாறிருக்க இந்தியாவானது சுதந்திரமடைவதற்குத் தகுதியுள்ளதா வென்று 'சைமன் கமிஷன்' பரிசீலனை செய்து கொண்டும், பூரண சுதந்திரத்திற்குத் தாங்கள் அருகர்கள் என்று தேச மகா ஜனங்கள் முறையிட்டுக்கொண்டும், கன்னி மேயோவின் புத்தகம் லட்சக்கணக்காக வெளியிடப்பட்டுக் கோடிக்கணக்காகப் பணம் சேர்த்துக் கொண்டும் இருக்கும் இச்சமயத்தில், இந்திய வாலிபர்களுக்கு அறிவில்லாதிருப்பதால் இந்தியப் பெண்களின் விவாக வயதைத் திட்டப்படுத்திச் சட்டமியற்றிவிட வேண்டுமென்று நாம் மன்றாடுவது இந்தியர்களின் மதிப்பைக் குறைத்து அயலார் எள்ளி நகையாடவும் இடமளிப்பதாகும். தவிர ஆரம்பவேலைகளில் முக்கிய வேலையாகவும், அரசியல் நிர்மாண வேலைக்கு அடிப்படையாகவும் சீர்திருத்தலுக்கு மூலகாரணமாகவும் இருக்கும் கல்விப் பிரசாரத்தில் ஒரே மனதுடன் உழைப்போமாயின் சீர்திருத்தம் தானாகவே பரவி விடாதா? அறிவினால் தமக்குத் தாமாகவே சீர்திருந்தவேண்டிய விஷயங்களில் சட்டங்களின் உதவிகோரி அவதிப்படுவதேன்? அசம்பாவித நாவல்களையும் ஆபாசக்கண்காட்சிகளையும் அனாவசிய சித்திரப் படங்களையும் தடுக்க வழியற்ற நாம் பெண்களின் விவாக வயதையும் சம்மத வயதையும் சட்டமூலமாகக் கட்டுப்படுத்துவதில் யாது பயன்? சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்கலாமென்று பெண்கள் அனுமதிக்கப்பட்டதும் தாங்கள் ஓடி பின்னின்று பெண்களை முன்னேறச் செய்யவேண்டுமென்ற உதார புத்தியற்ற ஆடவர்களை நம்பி இத்தகைய சட்ட மியற்றிக்கொள்வதால் பெண்ணுலகம் பேராபத்திலாழ்ந்து விடுமென்பதில் தடையில்லை. பெண்களின் முன்னேற்றத்தில் செய்யவேண்டிய ஆரம்ப வேலை ஆயிரக்கணக்காக விருக்குங்கால் அன்னாரின் பிறவி லட்சியமும் வாழ்க்கை நிலையுமாகிய விவாக விஷயத்தில் முற்பட்டு வாதாடுவது எதற்கு? இதைக் காட்டிலும் இந்தியா சுயராச்சியமடையும்வரை இந்தியப் பெண்கள் இந்திய ஆடவனை மணம் புரிந்து கொள்ளவும் அடிமை சந்ததியை அபிவிருத்தி செய்யவும் கூடாதென்று சட்டமியற்றல் தேச முன்னேற்றத்திற் கேற்றதாயிருக்குமென்பது நமது அபிப்பிராயம்.

# சந்திரவர்மா.

## ஓர் நாடகம்.

(ஸ்ரீமான் R. நாரயணசாமிராவ், B. A.)

(149-ம் பக்கத் தொடர்ச்சி)

*அங்கம் 3. களம் 3.*
*பவநகர் அரண்மனை.*
*காலம்—காலை.*

(கமலரேகை தனிமையாயிருத்தல்: கார்பாரி பிரவேசித்தல்)

**கார்பாரி:**—அம்மணி! இப்பெட்டியைத் தங்களிடம் கொடுத்து, இதைத் தாங்களே வைத்துக் கொள்ளலாமென்று மகாராஜா சொல்லச் சொன்னார்கள். மகாராஜாவே இன்னும் சற்று நேரத்தில் தங்களைக் காண இங்கு விஜயமாவதாகவும் சொல்லும்படி ஆக்ஞாபித்தார்கள். (தங்கப்பெட்டியைக் கொடுத்தல்)

**கமலரேகை:**—(சந்தோஷத்துடன் பெட்டியைப் பெற்றுக் கொண்டு ஓர் விசையை அமிழ்த்த பெட்டி திறந்துவிடல். உள்ளே இருக்குங் கடிதத்தைக் கண்டு பிரமித்து) ஆ! இதென்ன ஆச்சரியம்! இதில் ஓர் கடிதமிருக்கிறதே! கடிதத்தை யார் எழுதியிருக்கக் கூடும்? கடிதத்...

**கார்பாரி:**—அம்மணி! எப்படியோ பெட்டியைத் திறந்துவிட்டீர்களே! மகாராஜா அதை ஓர் முறை திறந்தும் மறுமுறை திறக்க முடியவில்லையே! நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். (செல்லல்)

**கமலரேகை:**—(தனக்குள்) அடடா! என்ன அசட்டுத்தனம்! என் மாயப் பெட்டியைப் பார்த்தவுடன் மதியை இழந்து விட்டேன். கார்பாரி முன்னிலையில் அதைத் திறந்திருக்கக் கூடாது. ஏதோ இப்பெட்டியை அரசர் திறந்ததாகக் கார்பாரி சொன்னானே. அப்படியெனில் அரசர் இக்கடிதத்தையும் பார்த்திருக்கலாமோ? ஆ! இக்கடிதத்தை நானே இன்னும் படித்துப் பார்க்கவில்லையே! எனக்கு முன் அரசர் அதைப் பார்த்திருக்கலாமோ? (கடிதத்தைப் பரபரப்புடன் படித்தல்.)

இராஜகுமாரி கமலரேகா!

நீ எங்கிருந்தபோதிலும், யார் கையிற் சிக்கிக் கொண்டிருந்தபோதிலும், தைரியத்தைக் கைவிடாதே! மகேந்திர ராஜர் கட்டளைப்படி நான் உன்னையும் இராஜசிம்மனையும் கண்டு பிடிப்பதற்காக ஓர் மகரிஷியைப் போல் வேடம் பூண்டு நகர் நகராய்ச் சென்று தேடிக்கொண்டிருக்கிறேன். நீ இருக்கும் நகருக்கும் நான் தற்செயலாய் வரக்கூடுமாகையால், நீ இருக்கும் நகருக்கு எந்த மகரிஷி வந்தாலும் அவரைக்கண்டு தரிசிப்பாய். அங்ஙனம் செய்தாயானால், ஒருகால் என்னைச் சந்தித்தாலும் சந்திக்கலாம்! உன் மாயப் பெட்டி கட்டாயம் உன்னிடம் வந்து சேருமென்று மகேந்திரராஜர் சொல்லியதால் இக்கடிதத்தை இப் பெட்டிக்குள் வைத்து அனுப்பியுள்ளேன். உன் இருப்பிடத்தையறிய ஆவல் கொண்டு கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

உன் அன்புள்ள,
"சந்திரவர்மா."

**கமலரேகை:**—(தனக்குள்) ஆ! என்கதி அதோகதிதானென்று பயப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு இக்கடிதத்தைக் கண்டவுடன் எவ்வளவு நம்பிக்கை யுண்டாகிறது! ஈச்வரீ! இதுவும் உன் கருணையே! மகரிஷியைப்



போல் வேடந்தரித்து வரும் சந்திரவர்மாவை நான் காண்பேனோ? ஹே சந்திரவர்மா! தங்கள் சாமர்த்தியத்தை எவ்வாறு புகழ்வேன்! இப்பிரதேசத்திலுள்ளோர் ஒருவரேனும் படிக்கக்கூடாதென்று இக்கடிதத்தைக் கிரேக்கிய பாஷையிலெழுதினீர்கள்!

(ஓர் சேவகன் பிரவேசித்தல்)

**சேவகன்:**—அம்மணி! மகாராஜா அவர்கள் வருகிறார்கள். (சேவகன் செல்லல்)

(பீமசிங் பிரவேசித்தல்)

**பீமசிங்:**—ஹே! கமலரேகா! நான் சற்று முன் அனுப்பிய தங்கப் பெட்டி வந்து சேர்ந்ததா?———ஏன் மௌனமாயிருக்கிறாய்? என்னுடன் உரையாட உனக்கு என்ன வெட்கம்?

**கமலரேகை:**—(தாழ்ந்த குரலில்) வந்து——சேர்ந்தது.

**பீமசிங்:**—(பெட்டி திறந்திருப்பதைப் பார்த்து) ஆ! பெட்டியை எப்படித் திறந்தாய்? நான் அதையோர் முறை திறந்தும் மறுபடியும் திறக்க முடியவில்லையே! நீ திறந்துவிட்டாயே!

**கமலரேகை:**—இப்பொழுது நானும் இதை மூடிவிட்டால் மறுபடியும் திறக்கமுடியாதென்றே நினைக்கிறேன்.

**பீமசிங்:**—இப் பெட்டியை இதற்குமுன் நீ பார்த்திருக்கிறாயோ?

**கமலரேகை:**—நான் இதை இதுவரையில் பார்த்ததேயில்லை. ஆற்றொணாத் துயரிலாழ்ந்திருந்த எனக்கு இப்பெட்டியைப் பார்த்தவுடன் அளவிறந்த ஆனந்தம் பெருகுகிறது.

**பீமசிங்:**—கமலரேகா! அது அவ்வளவு அழகான பெட்டியா என்ன? என் அறையில் அது யாதோர் பிரயோசனமுமின்றியிருந்தது. அது உனக்கு உபயோகமாயிருக்குமென்று உன்னிடமனுப்பினேன். ஆனால், கண்மணி! இப்பெட்டியை உன்னிடமனுப்பியதால் இப்பெட்டியைத் தவிர இவ்வாண்மனையிலுள்ள மற்றப் பொருள்கள் யாவும் உன்னுடையவையல்லவென்று எண்ணிக் கொள்ளாதே! மங்கையர்க்கரசி! இவ்வாண்மனையிலுள்ள சகலமும் உன்னுடையவே. இவ்விராஜ்ஜியத்தையாளும் என் ஹிருதயத்தையே கவர்ந்த உனக்குச் சொந்தமில்லாத பொருளும் இவ்வுலகத்திலிருக்கின்றதோ?

**கமலரேகை:**—(தனக்குள்) ஆ! இதுவும் நான் சந்தேகித்தபடியே முடிந்தது. இந்தச் சங்கடத்திற்கென்ன செய்வது? (உரக்க) மகாராஜா! நானோ ஓர் ஏழை அந்தணன் வீட்டில் வளர்ந்த ஓர் அநாதை. தாங்களோ திரிபுவன சக்கரவர்த்தி. அப்படியிருக்க, தாங்கள் என்னைப் பார்த்து இவ்வித வார்த்தைகளைச் சொல்வது தங்களுக்கழகல்ல. மகாராஜ்! நான் தங்களை என் தந்தையாகப் பாவித்திருக்கத் தாங்கள்—

**பீமசிங்:**—கமலரேகா! அப்படி எல்லாம் ஒன்றும் சொல்லாதே! நீ ஓரேழைப் பெண்ணென்பதை நான் நம்பமாட்டேன். நீ ஓரிழிகுலப்பெண்ணல்லவென்பது எனக்கு நன்றாகத் தெரியும். கமலரேகா! உன்னழகை எவ்வாறு விஸ்தரிப்பேன்! ஊர்வசி, மேனகை, திலோத்தமை, ரம்பை எல்லாரும் உன்னெழிலைக்கண்டு நாணித்தலை குனிவார்களே! மன்மதனே உன்னைக் கண்டு மயங்குவானெனில் உன் அழகை நான் எவ்வாறு விஸ்தரிப்பது? என் ஆருயிர்த்தலைவி! என் காதற்கிளியே! என் உயிரினுக்குயிரான உயிரே! உன் இனிய குரலால் என்னை நாதாவென்றழைக்க உனக்கு யாது ஆட்சேபனை? என்னரிய கண்மணி! இதுவரைக் காதலென்பதே யறியாத என் மனம் உன்னைக் கண்ட

தும் உன் அகத்திற்சென்று லயமடைந்து விட்டது. ஹே சுந்தரி! பூமண்டலத்திலுள்ள எல்லா அரசர்களும் என்னைக் கண்டு நடு நடுங்கும்படியான அத்தகைய பராக்கிரமம் பொருந்திய என்னுடைய பட்ட மகிஷியும் இந்நகர் இராணியுமான பிறகு உனக்கு யாது குறையிருக்கக் கூடும்? உனக்காக நான் என்ன செய்யவேண்டுமென்றாலும் செய்வேன். உன்னை யடைவதற்காக என் இராஜ்யத்தையே இழக்க நேரிடினும் சந்தோஷமாய் இழப்பேன்! கமலரேகா! என் காதலை மறுக்காமல் என்னைக் கண்ணெடுத்துப் பார்த்துச் சந்தோஷமாய் உரையாடமாட்டாயா?

கமலரேகை:—(தனக்குள்) இதேது தர்ம சங்கடமாயிருக்கிறது. இப்பொழுது நானோ இந்த அரசன் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். இவனை உதாசீனமாக நடத்தி என் மனதிலுள்ளதைத் தெரிவிக்கலாமென்றாலும், இவன் காமா வேசத்தால் பலாத்காரமாக அணுகினால் என்ன செய்வது? ஆகையால் ஏதாவது சாக்குச் சொல்லி இவனை ஏமாற்றி விடவேண்டியதுதான். கொஞ்சகாலம் ஏதாவது சாக்குச் சொல்லிக் கொண்டிருந்தால், அதற்குள் சந்திரவர்மா வந்து என்னை இங்கிருந்து அழைத்துச் சென்றுவிடக் கூடாதா?—

பீமசிங்:—என் பிரியே! ஏன் மௌனமாயிருக்கிறாய்? என்னுடன் உரையாட—

கமலரேகை:—(தனக்குள்) ஜகதீசுவரீ! நான் வேசையைப் போல் உள்ளத்திலொன்று இருக்க வெளியிலொன்று பேசி நடிக்க வேண்டுமென்பதுவும் உன் திருவருளின் கருத்தோ! (உரக்க) மன்ன! தங்களுடன் பேசவும் முடியாமல் நான் என்ன அவ்வளவு உன்னத பதவியை அடைந்து விட்டது? மேலும், மறுமொழியளிக்க வேண்டுமென்று தாங்கள் கட்டளையிட்டால், நான் அவ்வாறு செய்யக் கடமைப்பட்டவள் தானே!

பீமசிங்:—அதெல்லாமிருக்கட்டும். ஏன் தயங்குகிறாய்? என்னை மணக்கச் சம்மதந்தானே?

கமலரேகை:—மன்ன! நானோ ஓர் அநாதை. ஆகையால் நான் இங்கு வந்தது என் அதிர்ஷ்டந்தான். ஆனால்—அதற்காகச் சொல்லவில்லை—

பீமசிங்:—கண்மணி! என் பிரியே! உன் வார்த்தைகள் என் மனதைக் கவர்கின்றன. ஆனால் உன் மனதிலுள்ளதைத் தாராளமாய்ச் சொல்லாமல் ஏன் இவ்விதம் பாதி மறைத்துப் பேசுகிறாய்? என்னிடம் வேறு யாது சொல்ல வேண்டுமென்கிறாய்?

கமலரேகை:—மகாராஜ்! தங்களை மணக்க யாருக்காவது ஆட்சேபனை இருக்கக் கூடுமா? ஆனால் என் கலியாணத்திற்கு முன் என் குல குருவை நமஸ்கரித்து அவருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் நான் ஒருவருக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று என் அன்னை உயிர் விடுந் தருணத்தில் சொல்லிவிட்டுப் போனாள். அதுதான் அவளுடைய கடைசி வேண்டுகோள். ஆகையால்—

பீமசிங்:—உன் குலகுருவா! அவர் யார்?

கமலரேகை:—அவர் ஓர் பெரிய மகரிஷி. அவர் லோகசஞ்சாரி. நகர் நகராய்ச் சஞ்சாரம் செய்து கொண்டிருப்பதுதான் அவரியல்பு.

பீமசிங்:—அப்படியெனில் அவர் இந்நகருக்கும் வரக் கூடுமோ?

கமலரேகை:—வரக்கூடும். ஆகையால் இந்நகருக்கு எந்த மகரிஷி வந்தாலும், அவரை அரண்மனைக்கழைத்து வரும்படி செய்தால், என் குலகுரு வந்தசமயத்தில் நான் அவரை வணங்கி அவர் அநுக்கிரகத்தைப் பெறுதல் எளிதாகும். ஆனால்—

பீமசிங்:—என்ன! ஆனாலென்று இழுக்கிறாய்?





கமலரேகை:—ஒன்றுமில்லை. என் குலகுரு வரும் வரையில் என் மணவிஷயத்தைப் பற்றி ஒருவரும் ஒரு வார்த்தைகூட பேசக் கூடாது!

பீமசிங்:—கமலரேகா! உன் குலகுருவை அழைத்துவர ஓர் இராஜ்யத்தையாளும் என்னால் முடியாதா? இன்றைய தினமே ஒற்றர்களை யனுப்பி இந்தப் பாதகண்டத்தில் எவ்விடத்தில் எந்த மகரிஷி இருந்தாலும் நமது அரண்மனைக் கழைத்து வரும்படி திட்டம் செய்கிறேன். ஆனால் உன் குலகுரு வரும் வரையில் நான் எவ்விதம் உன்னுடன் காதற் சொற்களை உரையாடாமலிருக்க முடியும்?

கமலரேகை:—மகாராஜ்! என் தாயார் மரிக்குந் தருணத்தில் இவ்விதம் வேண்டி விட்டு இறந்ததினால் அவளுடைய கடைசிக் கட்டளையை நான் எவ்விதம் நிறைவேற்றாமலிருப்பது? ஆகையால்—

பீமசிங்:—கண்மணி! நீ சொல்வதும் சரிதான். ஆனால் உன் குலகுருவின் அநுக்கிரகத்தைப் பெற்றபின் என்னை மணக்க உனக்கு யாதோர் ஆட்சேபமுமிருக்காதே?

கமலரேகை:—மன்ன—தங்களையல்லாமல் வேறு யாரை நான்——(மனத்திற்குள்) வெறுக்கப் போகிறேன்? (உரக்க) ஆனால் மகாராஜா! எனக்காகத் தாங்கள் மற்றோர் காரியமும் செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

பீமசிங்:—கமலரேகா! ஆரம்பித்த வாக்கியத்தை முடிக்காமல் ஏன் நிறுத்திவிட்டாய்? கண்மணி! நீ இடும் கட்டளைகளை நான் செய்யாமலிருப்பேனா? நான் என்ன செய்ய வேண்டும் சொல். எதாயிருந்தாலும் செய்து விடுகிறேன்.

கமலரேகை:—நான் கட்டளையிட எனக்கென்ன யோக்கியதை யிருக்கின்றது? நான் ஓர் விஷயத்தை வேண்டிக் கொள்ளுகிறேன். ஸதாநந்தரென்னும் பிராமணோத்தமருடைய கிரகத்தில் நான் வளர்ந்தபொழுது அவர் என்னை வெகு அருமையாய் நடத்தி வந்தார். ஏதோ குற்றத்திற்காக அவர் இப்பொழுது சிறையிலிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் என்ன குற்றம் செய்திருந்த போதிலும், எனக்காகத் தாங்கள் அவரை மன்னித்துச் சிறையினின்றும் விடுவிக்கக் கூடாதா? தாங்கள் அவரை விடுவிக்காவிட்டால்—பாபம்—அவர் பத்தினி பத்மாக்ஷி தனியே கிடந்து வருந்துவாள்.

பீமசிங்:—கமலரேகா! நீ சொல்வதைச் செய்யாமலிருப்பேனா? ஸதாநந்தர் செய்திருக்கும் குற்றத்தை உனக்காக மறந்து அவரை மன்னித்தேன். அவரைச் சிறையினின்றும் இப்பொழுதே விடுவித்து விடுகின்றேன். (சற்று யோசித்து) கண்மணி! எனக்கு ஒன்று தோன்றுகிறது. தங்கப் பெட்டியிலிருக்கும் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்பது எனக்காவது என் அமைச்சர்களுக்காவது ஒருவருக்கும் விளங்கவில்லை. என் அமைச்சர்களெல்லோரும் கூடிப் பேசி ஓர் முடிவுக்கு வர யத்தனம் பண்ணினார்கள். பாஷ்யதுங்கன் என்னும் மந்திரிக்கு இப்பாதகண்டத்திலிருக்கும் பாஷைகளெல்லாம் தெரியும். ஆனால் அவனால் கூட இக்கடிதத்தைப் படிக்க முடியவில்லை. அவன் சொல்வது யாதெனில், அந்தப் பெட்டி ஓர் தெய்வலோகப் பெட்டியென்றும், அதிலிருக்கும் கடிதமும் ஏதோ ஓர் தெய்வீக பாஷையிலெழுதப்பட்டிருக்கவேண்டுமென்றும், தேவலோக ஸ்திரீகளோ, வேறு ஏதாவது தேவதைகளோ அதை பூமியில் போட்டு விட்டுச் சென்றிருக்க வேண்டுமென்றும்

சொல்லுகிறான். அதை எல்லாரும் நம்ப வேண்டியதாயிருக்கிறது. உன் குலகுரு ஓர் பெரிய மகரிஷி யென்றாயே! அவர் அந்தக் கடிதத்தைப் படிக்கச் சக்தியுள்ளவராயிருப்பாரல்லவா?

கமலரேகை :—இருப்பாரென்று தான் நம்புகிறேன்.

பீமசிங் :—அப்படித்தான் நானும் நினைக்கிறேன். உன் குலகுரு வந்த சமயத்தில் அவரிடம் அதைக் காண்பிக்கலாம். அதுவரை அதை நீயே வைத்துக் கொண்டிரு.

கமலரேகை :—சரி, மகாராஜ்! எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது.

பீமசிங் :—கண்மணி! நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். மாதர்களின் நாயகமே! நான் சென்று வருகிறேன். இதோ இத் தோழிகள் உனக்குச் சிற்றேவல் புரிவார்கள்.

(செல்லல்)

அங்கம் 3. களம் 4.

ஜயசீலனுடைய மாளிகையிலோர் அறை.

காலம்—காலை.

ஜயசீலன் :—என்னுடைய சூழ்ச்சி கைகூடிவிட்டது. என் புதல்வன் பேரில் பொய்யாக ஓர் பழியைச் சாட்டி அவனைச் சிறை செய்வதைப் போல் இராஜசிம்மனுடைய சிறையிலடைத்து விட்டேன். இராஜசிம்மனும் ஸ்ரீதரனும் சிறைச்சாலையினின்று தப்பியோடிவிட்டார்களென்றும் தெரிகிறது. அவர்கள் தப்பியோடி விட்ட சங்கதியைக் கேட்டதும் அரசன் கோபங்கொண்ட நாகம் போல் சீறுவான்! என் பேரில் சந்தேகங் கொண்டாலும் கொள்வான்! ஆகையால் நான் மிகவும் சாக்கிரதையாகவே இருக்கவேண்டும். அரண்மனையில் நடப்பதைத் துப்பாக இருந்து அறிந்து என்னிடம் தெரிவிக்கும்படி நானனுப்பிய சேவகன் ஏன் இன்னும் வரவில்லை?

(சேவகன் பிரவேசித்தல்)

சேவகன் :—(பரபரப்புடன்) மகாராஜ்! அரசர் தங்களை யழைத்து வரச்சொல்லித் தன் மந்திரி வீரசிங்கத்தை அனுப்பி இருக்கிறார். அவர் வருவதற்குள் நான் ஓடோடியும் வந்தேன். அவரும் இதோ வந்து விடுவார்.

ஜயசீலன் :—அரசர் என்னை எதற்காக அழைத்துவரச் சொன்னார்?

சேவகன் :—அது எனக்குத் தெரியாது. ஆனால் அரசரும் வீரசிங்கமும் ரகசியமாக ஏதோ வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு வீரசிங்கரிடம் அரசர் ஓர் உடைவாளை யெடுத்துக் கொடுத்தார். வீரசிங்கர் அதைத் தன் உள்ளாடையில் மறைத்து வைத்துக் கொண்டார்.

ஜயசீலன் :—ஆ! இப்பொழுது உணர்ந்தேன்! என்னை அரசர் அழைத்து வரச்சொன்னதாகச் சொல்லி வீட்டை விட்டு வெளியே யழைத்துச் சென்று என்னைக் கொன்று விடும்படி வீரசிங்கனை ஆக்ஞாபித்திருக்க வேண்டும். ஆனால் வீரசிங்கனுடைய குணம் நமக்குத் தெரியாதா? பணமென்றால் பல்லிளிப்பான். சூரசேனனுடைய இராஜ்யத்தில் லஞ்சத்தால் எது தான் செய்ய முடியாது? வரட்டும் பார்த்துக் கொள்வோம். சேவகா! நீ அறையின் வெளிப்புறத்திலேயேயிரு.

(ஜயசீலன் சில மோகராப் பைகளை யெடுத்துத் தனக்கெதிரில் வைத்துக் கொள்ளல்)

(வீரசிங்கம் பிரவேசித்தல்)

ஜயசீலன் :—வாருங்கள்! வாருங்கள்! வீரசிங்கப் பிரபுவே! இந்த ஆசனத்திலமருங்கள். ஏது விதுரன் வீட்டுக்குக் கிருஷ்ணன் வந்தாற்போல அபூர்வமாக என் வீட்டுக்கு விஜயம் செய்தது? யாது விசேஷம்?



வீரசிங்கம் :—(மோகராப்பைகளைப் பார்த்துக் கொண்டே) என்ன இவ்வளவு திரவியம் வெளியில் வைத்திருக்கிறீர்கள்?

ஜயசீலன் :—நண்பரே! இன்று ஓர் அதிசய சம்பவம் நடந்திருக்கின்றது. அதென்னவென்பதைச் சொல்லுகிறேன். தாங்கள் வியப்படைவீர்களென்பதில் ஐயமில்லை.

வீரசிங்கம் :—(தனக்குள்) இவ்வளவு மோகராப்பைகளும் நம்முடையதாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! (உரக்க) ஐயா. என்ன விசேஷம்! விரிவாய்ச் சொல்லுங்கள்.

ஜயசீலன் :—வீரசிங்கரே! மிதிலாபுரியிலே தர்மராஜனென்று என் உயிர்த்தோழனொருவன் இருக்கின்றான். அவன் ஜோதிடத்தில் கைதேர்ந்தவன். அவனிடமிருந்து ஓர் கடிதமும் இந்த மோகராப்பைகளும் வந்து சேர்ந்தன. அக்கடிதத்தில் அவன் எழுதியிருப்பது தான் விசித்திரமாக இருக்கிறது. அவன் எழுதியிருப்பது யாதெனில், எனக்குச் சமீபத்தில் ஏதோ ஒரு மகத்தான ஆபத்து நேரிடப் போகிறதென்றும், அந்த ஆபத்தினின்றும் எதிர் பாராதவிதமாய் என்னை ஓர் சிநேகிதர் தப்புவிப்பாரென்றும், அந்தச் சிநேகிதருக்கு இந்த மோகராப் பைகளைப் பரிசாகக் கொடுக்கும்படியாகவும் எழுதியிருக்கிறான். எனக்கு அப்படிப் பெரிய ஆபத்து என்ன நேரிடக் கூடுமென்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

வீரசிங்கம் :—(பேராசை பெருக) ஐயா! தங்கள் சிநேகிதர் ஜோதிட சாஸ்திரத்தில் மிகுந்த நிபுணர் என்று தெரிகிறது. தங்களுக்கு இப்பொழுது ஓர் மகத்தான ஆபத்து நேரிட்டிருக்கிறதென்பது உண்மையே. (தாழ்ந்த குரலில்) நேற்றிரவு தங்கள் புத்திரனும் கோசலதேசத்து இராஜகுமாரனும் சிறையிலிருந்து தப்பியோடி விட்டார்கள். அவர்கள் ஓடத் தாங்களே ஒத்தாசையாயிருந்திருக்கிறீர்களென்று அரசர் சந்தேகித்து உம்மைக் கொலைசெய்து விடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்.

ஜயசீலன் :—(திடுக்கிட்டவனைப்போல் பாவித்து) ஆ! அப்படியா! நண்பரே! எனக்கு இந்த விதமான விபத்து நேரிடக்கூடுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. தாங்கள் என்னை முதன் முதலில் எச்சரித்திருக்கிறபடியால், தாங்களே என்னைக் கடைசிவரை இவ்வாபத்தினின்றும் காப்பாற்றவேண்டும். என் நண்பர் அனுப்பி யிருக்கும் மோகராப் பைகளும் தங்களுடையதே!

வீரசிங்கம் :—(ஆனந்தம் பெருக) நண்பரே! நீர் யோசிக்க வேண்டாம். தங்களைக் கொலை செய்ய என்னையே மகாராஜா அனுப்பினார். ஆனால் நான் தங்களைக் காப்பாற்றச் சித்தனாயிருக்கிறேன். நான் சொல்வதைக் கேளுங்கள். தட்சணமே தாங்கள் இவ்வூரை விட்டு ஓடி விடுங்கள். நான் என் வாளை ஆட்டின் இரத்தத்தில் தோய்த்து அரசரிடம் காண்பித்துத் தங்களைக் கொன்று விட்டதாகச் சொல்லிவிடுகிறேன்.

ஜயசீலான் :—நண்பரே! தாங்களே என்னைக் காப்பாற்றியவரானீர். தாங்கள் சொல்லும் வண்ணம் இதோ இக்கணமே நான் இந்நகர் விட்டுச் சென்று விடுகின்றேன். தாங்கள் இம்மோகராப்பைகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

வீரசிங்கம் :—(மோகராப்பைகளை எடுத்துக் கொண்டு) தாங்கள் கொஞ்சமும் தாமதிக்கக் கூடாது. உடனே சென்றுவிட வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந் நகருக்குத் திரும்பிவரக் கூடாது.

ஜயசீலன் :—இப்பிராந்தியத்தைவிட்டே போய் விடுகின்றேன். தாங்கள் சென்று வாருங்கள். அனேகங்கோடி நமஸ்காரம்!

(வீரசிங்கம் செல்லல்)

ஜயசீலன்:—(தனக்குள்) இந்த கொடுங்கோல் மன்னன் அரசு செய்யும் நாட்டில் வாழ்வதைக் காட்டிலும், கொடும்புலி அரசு செய்யும் காட்டில் வாசம் செய்வது நன்று. நானும் ஓர் பிரயாணியைப் போல் மாறு வேடம் பூண்டு புருஷபுரம் சென்று அங்கே ஸ்ரீ தாஸனைச் சந்திக்கிறேன். (செல்லல்)

(காட்சி முடிகிறது.)

(தொடரும்)

# நக்ஷத்திரங்கள்.*

(ஸ்ரீமதி A. லக்ஷ்மி அம்மாள், B.A.)

* ஸ்ரீமதி ஸ்வர்ணம்பாள் அம்மாள் ஆங்கிலத்தில் பேசிய பிரசங்கத்தை சுருக்கி அமைத்து எழுதியது.

வான சாஸ்திரம் நக்ஷத்திரங்களைப் பற்றிச் சொல்வது; நமக்குப் பெரிதாகவும் பிரதானமாகவும் தோன்றும் இப்பூவுலகத்தைப் பல கோடி உலகங்களுள் ஒன்றாகக்காட்டி, பிரபஞ்சத்தின் பெருமையை நம் மனத்துக்கு அறிவுறுத்தவது.

தினமும் பொழுது விடிகிறது; நாள் முழுவதும் ஜனங்களுக்கு எத்தனையோ வேலையும் விசாரமும்; பொழுது சாய்கிறது; வானத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றி இரவு முழுவதும் பிரகாசிக்கின்றன; இத்தனை மினிமினிகள் சேர்ந்தும் பகலவனுக்குச் சமானமில்லையேயென்று எண்ணி, விளக்கேற்றி முன்னிரவில் வேலைகளை முடித்துவிட்டு, ஜனங்கள் படுத்துத் தூங்குகிறார்கள். இராவழிப்போக்கருக்கு வெளிச்சம் காட்டுவதற்காகவே, கருணைக் கடவுள் நக்ஷத்திரங்களை சிருஷ்டித்தார் என்று பல ஜனங்கள் சாமான்னியமாய் எண்ணுகிறார்கள்.

பிரபஞ்சத்தின் உண்மை அமைப்பும் பெருமையும் வெகுநாளாக ஜனங்களுக்குத் தெரியவில்லை. கி.பி. பதினைந்தாவது நூற்றாண்டில் 'காபர்னிகஸ்' என்ற வானசாஸ்திரி, பூமி இப்பிரபஞ்சத்துக்கு நடுநாயகமாக விளங்கவில்லை; சூரியன் அதைச் சுற்றவில்லை; சூரியனைச் சுற்றும் உபகிரகங்களில் பூமி ஒன்று என்று உண்மையைக் கண்டுபிடித்துச் சொன்ன பொழுது, பல ஜனங்களும் அவ்வுண்மையை நம்பவில்லை. தூரத்தால் மினிமினிகளாகத் தோன்றும் நக்ஷத்திரங்கள் உண்மையில் பல சூரியன்கள்; செவ்வாய், சனி, பூமி முதலிய உபகிரகங்கள் சூரியனைச் சுற்றுவதுபோல, அந்த சூரியன்களுடைய உபகிரகங்கள் அவற்றைச் சுற்றுகின்றன என்று நிரூபித்த 'ப்ரூனோ' என்ற வான சாஸ்திரி, அவ்வுண்மையை ஸ்தாபிக்க முயன்றதற்காக உயிரை இழந்தார்; அந்த நாள் மத போதகர்கள் அவர் கொள்கை கிறிஸ்தவ மதக் கொள்கைகளுக்கு விரோதமானது என்று எண்ணி, அவரை உயிரோடு தீக்கொளுத்திக் கொன்றார்கள். அவர் தண்டனைக்குள்ளாகி மூன்று வருஷங்களுக்குள், அவர் கொள்கையின் உண்மை அறிஞர் அனைவர் மனத்திலும் நிலை பெற்றது. இப்பொழுதோ "பிரபஞ்சத்தில் பல சூரியலோகங்கள் உள்ளன; அந்த சூரியன்கள் பல, நமது பூமி பிரதட்சிணம் செய்யும் சூரியனைக் காட்டிலும் ஆயிர மடங்கான விஸ்தீரணமும் தேஜஸும் உள்ளவை; காலால் தேய்த்துத் தீ அவித்துவிடக்கூடிய வாணப் பொறிகளை ஒத்து மினிமினுக்கும் நக்ஷத்திரங்கள் உண்மையில் பிரமாண்டமான தீக்கோளங்கள்; ஒரே கும்பலாகத் தோன்றும் நக்ஷத்திரங்களுக்கிடையில் கணக்காலன்றி, மனோபாவனையால் எண்ணமுடியாத அளவிறந்த தூரம் இடக்



கிறது'' என்ற வானசாஸ்திர உண்மைகளை, உலகம் ஒப்பிப் பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன.

பிரபஞ்சம் இப்படிப்பட்டதென்றால் "மற்ற உலகங்களில் உயிர் வாழ்வுண்டோ; எவ்வகைப் பிராணிகள் அவ்வண்டங்களில் சஞ்சரிக்கக் கூடுமோ; அப்பிராணிகள் இப்பூவுலகத்து மனிதரையும் விலங்குகளையும் ஒத்திருப்பாரோ; அறிவில் நம்மிலும் மேதாவிகளாய் இருப்பார்களோ'' என்ற பிரச்னைகள் உண்டாகின்றன. இக்கேள்விகளுக்குத் தீர்மானமான பதில் ஒன்றுமில்லை. சாஸ்திர ஞானத்துக் கெட்டிய வரை நக்ஷத்திரங்கள் சூரியனை யொத்த தீக்கோளங்களாகத் தோன்றுகின்றன; ஆனால் அந்த சக்கரவாளங்கள் பலவற்றுள்ளும் உயிர் நிலைக்கக்கூடிய கிரகங்கள் ஒன்றுமில்லை என்று நிச்சயமாக எப்படிச் சொல்லமுடியும்? சீதமும், உஷ்ணமும், காற்றும், நீரும், இன்ன இன்ன பாங்காயிருந்தால் தான் நாம் அறிந்தபடி உயிர் நிலைக்கக்கூடும் என்று நமக்குள்ள அநுபவ ஞானத்தைக் கொண்டு, பூமியுடன் சூரியனைச் சுற்றும் உபகிரகங்களில் செவ்வாய் ஒன்றைத் தவிர்த்து மற்றவற்றில் உயிர் வாழாது என்று மட்டும் சொல்லலாம். இப்பொழுது சந்திர மண்டலம் சீதப்பட்டு விட்டது; முற்பட்ட ஓர் யுகத்தில் அதில் உயிர் வாழ்வு இருந்திருக்கலாம் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். செவ்வாய் வாழ்வுள்ள கிரகமா, இல்லையா என்பது இன்னும் நிச்சயிக்கப்படவில்லை. செவ்வாயின் சீதோஷ்ண ஸ்திதியில் உயிர் வாழ்வு கூடும்; தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாகப் பார்த்ததில் செவ்வாயின் மேல் பரப்பில் ஆயிரக்கணக்கான கால்வாய்கள் போன்ற கோடுகள் தென்பட்டன; இவற்றைக்கொண்டு, அந்த கிரகத்தின் பெரும்பான்மையான இடங்களில் நீர் வற்றிப் போய் விட்டதென்றும், உத்தர தட்சிண துருவங்களை மூடியிருக்கும் பனியுருகி நீர்ப்பாய்ச்சல் ஏற்படும்படி, அறிவுள்ள செவ்வாயுலகத்தார் துருவங்களிலிருந்து மத்திய பாகத்துக்குக் கால்வாய்கள் வெட்டியிருக்க வேண்டுமென்றும், இத்தகைய செயற்கைத் திறம் வாய்ந்தவர்கள், தேக அமைப்பிலும், யூகத்திலும், அறிவிலும், நாகரிகத்திலும் நம்மிலும் சிறந்தவராய் இருத்தலும் கூடும் என்றும் சில வானசாஸ்திகள் நினைக்கிறார்கள். மற்றவர்கள் செவ்வாயில் இயற்கையில் அமைந்த மேடு பள்ளங்களே தூரப் பார்வைக்குக் கால்வாய்கள் போலத் தோன்றுகின்றன என்றும், அந்த கிரகத்தில் உயிர்ப்பிராணிகள் உண்டு என்று எண்ண ஒரு அத்தாட்சியும் இல்லை என்றும் சொல்லுகிறார்கள். நாம் செவ்வாய் உலகத்தாரைப்பற்றி யோசிப்பதுபோல, அதிவிவேகிகளாயிருக்கக் கூடும் செவ்வாயார் பூமியைப்பற்றி என்ன சிந்திக்கிறார்களோ என்று எண்ணி, இந்த பூமியில் அறிவுள்ள உயிர் சஞ்சாரம் உண்டு என்று அவர்களுக்கு நிரூபிக்க, செவ்வாயை நோக்கி பீரங்கி வெடிபோட்டும் ஆகாசபாணங்கள் (rockets) விடுத்தும் 'வைர்லெஸ்' தூதனுப்பியும் பார்த்தார்கள் சிலர்; இந்தசைகைகள் செவ்வாய் வரை எட்டியதா, அங்கு எவராலும் கவனிக்கப்பட்டதா என்று ஒன்றும் தெரியவில்லை.

பூமியும் செவ்வாயும் நாம் பிரத்தியட்ச பகவானாக வணங்கும் சூரியனின் பரிவாரத்தைச் சேர்ந்தவை; பூமியின் அளவை சூரியன் அளவுடன் ஒப்பிட்டால் ஒரு தேங்காயுடன் கடுகை ஒப்பிட்டாற் போலக் காணுமாம்; சூரியன் எம்மடங்கு பூமியைவிடப் பெரியதோ அம்மடங்கும், அதற்கு மும்மடங்கும் சூரியனைவிடப் பெரிய சூரியன்கள் உள்ளன; பூமிக்கும் அவற்றுக்குமுள்ள தூரத்தால், அவை சிறு நக்ஷத்திரங்களாகத் தோன்றுகின்றன. பல, தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாகவன்றி வெறும் கண் பார்வைக்குத் தென்படுவதேயில்லை. பூமிக்கும் சூரியனுக்குமுள்ள

தூரம், 93,000,000 மைல்கள். சூரிய ஒளியின் ஒரு கிரணம் அத்தூரத்தைக் கடந்து பூமியைச் சேருவதற்கு 7 நிமிஷங்களாகின்றன; நக்ஷத்திரங்கள் சிலவற்றிலிருந்து ஒரு கிரணம் பூமியைச் சேருவதற்கு 200 வருஷங்களாகுமாம்! அவ்வளவு தூரத்துக்கப்பால் உள்ள ஒரு நட்சத்திரம் திடீரென்று பொடியாகி மறைந்து விட்டால் கூட, அது நாசமாகி 200 வருஷங்கள்வரை, அதன் கடைசி கிரணங்கள் ஒவ்வொன்ருய் பூமியில் வந்து சேர்ந்து அது நமக்குப் புலப்பட்டுக் கொண்டே யிருக்குமாம்!

நக்ஷத்திரங்களின் அளவையும் அவற்றிடைக்கிடைக்கும் தூரத்தையும் கணக்கால் பெருக்கிச் சொல்லலாமே யொழிய, நம்மனத்தால் அளந்தறிய முடியாது. பிரபஞ்சத்தின் பெருமை நம் கருத்துக் கெட்டாது; அன்றி, அதன் சிறுமையும் நாம் சிந்தித்தறிய முடியாததாய் உள்ளது. பிரபஞ்சத்தில் எப்பொருளும் கடைசியில் அணுக்களாகப் பகுபடுவது; அணுவே (Atom) வஸ்துக்களின் பகாப் பொருள். அணுவின் சிறுமையை உருவகப் படுத்திச் சொல்லலாமே யொழிய, எண்ணி அறியமுடியாது. பதிைனாயிரம் அணுக்களை ஓர் ஊசிமுனையில் வைத்தால், ஐரோப்பா கண்ட முழுவதிலும் பதினாயிரம் ஜனங்கள் மட்டும் சமதூரத்தில் நின்றால் அவர்களுக்கிடையில் எவ்வளவு வெற்றிடம் கிடக்குமோ, அம்மடங்கு வெற்றிடம் அவ்வூசி முனையில் பதினாயிரம் அணுக்களுக் கிடையில் கிடக்குமாம்! பிரபஞ்சத்தின் அண்டங்களையும் நாம் மனோபாவத்தால் அளந்தறிய முடியாது; அதன் அணுக்களையும், நாம் அளந்தறிய முடியாது. ஒரு நக்ஷத்திரத்திலிருந்து மற்றொரு நக்ஷத்திரத்துக்கு நாம் அடியெடுத்து வைக்க முடியாதது போலவே, ஓர் அணுவிலிருந்து மற்றோர் அணுவுக்கு அடிவைக்க முடியாது; பிரபஞ்சத்தின் சிறுமையும் பெருமையும் நம் அனுபவத்துக் கெட்டாதவை.

பிரபஞ்சத்தின் மகிமையை நினைத்து நக்ஷத்திரங்களைப் பார்க்கும்பொழுது, நமது வாழ்வின் சுகதுக்கங்களும் வீண் சஞ்சலங்களும் எம்மாத்திரமாகத் தோன்றுகின்றன! அணுக்களுக்கும் அண்டங்களுக்கும் அசைவளிக்கும் சக்தியை நினைத்து நாம் திடப்படுவோமாக!

## மீராபாய் மகாராணி.

(சுவாமி அற்புதானந்தர்.)

இவ் வம்மையார் இராஜபுதனத்தில் ரீராதா கிராமத்தில் பிறந்தனள். இவளது பெற்றோர்கள் இராஜஸ்தானத்தின் சிறந்த குடும்பத்தினராக இருந்தனர். அந்நாட்டின் அக்கம்பக்கம் கிராமங்களிலும் நகரங்களிலும் மீராபாய் மிக அழகிய பெண்ணெனவே கூறப்பட்டாள். இவளது தாய் தந்தையர்கள் இவளைச் சிறுபிராயத்தில் ஹிந்தி பாஷை கற்கும்படிச் செய்தனர். எனவே இவளது கல்விக்கென ஏற்பட்ட பண்டிதர் மிகச் சிறந்தவராக இருந்ததினால் இவ்வம்மைக்குப் பல சுலோகங்களையும், கிருஷ்ணலீலாம்ருத காவியங்களை வசனமுறைகளில் கற்பித்ததுடன் நன்கு போதித்துவந்தனர். இவள் ஹிந்திபாஷையில் விற்பன்னளாகி வருவதைப் போலவே, வீட்டின் விஷயங்களிலும் மிகச் சிறந்தவளாகி தாயார் ஈடுபடும் இல்லற வேலைகளில் உதவிகள் புரிந்தும் தன் தகப்பனின் அருமைப் புதல்வியாயும் வளர்ந்து வந்தனள். இவ்வமயம் இவளை மணம் புரிந்து கொடுத்து விடவேண்டு மென்ற அவா தகப்பனுக்குப் பெருகியதினால் இவர் இவளுக்கு உகந்த கணவனைத் தேடிக்கொண்டிருந்தனர். இக்



குடும்பம் இராஜபுத்திர வம்சத்தினர்களில் சிறந்தகுடும்பமாக இருந்ததினால், இவர் மேவார் இராணுக்களின் சம்பந்தங்களையும் கொண்டிருந்தனர். எனவே தன் குமாரியை மகாராணு கும்பாவிற்கு மணம் புரிந்து கொடுக்க முற்படலானர். இவ் வமயத்தில் மகாராணு கும்பாவும் ஹிந்தி பாஷை முதலியவைகளில் சிறந்த வித்துவானாகியும் ஹிந்தியில் காவியங்களைத் தயாரிப்பதில் சிறந்த நிபுணனாகியு மிருந்தனன். இது போலவே மீரா இராஜகுமாரியும் ஹிந்தி பாஷையில் அரிய காவியங்களை வரைவதில் திறமை வாய்ந்தவளாகவும் தனது இஷ்ட தேவனாக ஸ்ரீ கிருஷ்ணன்மீது பல அரிய காவியங்களையும் வரைந்து போற்றி வந்தனள். இச்செய்தியை மகாராணுகும்பா அறிந்தவுடன் தன் மனைவியாக மீராவைக் கொள்ளவிரும்பினன். பெற்றோர்களும் இதற்கு இணங்கி நல்ல தினத்தில் மிக விமரிசையாக விவாகத்தை நடத்திமுடித்தனர். மீராவும் தன் இல்லம் விட்டுத் தன் கணவனது நகரமாகிய சித்தூர் செல்லலானள். கி.பி 1412-ம் ஆண்டில் இம் மகா ராணு கும்பா சித்தூரில் ஆட்சிபுரிந்தனர். இவ்வமயத்தில் கில்ஜி வம்சத்தினர்கள் டெல்லியில் ஆண்டனர். தட்சிணத்தில் பிஜாபூரும் கோல்கொண்டாவும்சிறந்த இஸ்லாம் நாடுகளாக இருந்தன. கும்பா மகாராணு மேவாரில் சிறந்தோங்கி இருப்பதைச் செவியுற்று மால்வா நாட்டின் அரசியலும், குஜராத் நாட்டின் அரசியலும் பொறாமை கொள்ளலாயின. கி.பி. 1440-ல் இவ்விரு ராஜ்யங்களும் ஒன்று சேர்ந்து மேவார் நாட்டைத் தாக்க முற்படவே கும்பா மகாராணு நூறு ஆயிரம் குதிரை வீரர்களுடன் பன்னிரண்டு நூறு யானைகளுடனும் இவைத் தவிர காலாட் படைகளுடனும் எதிர்த்து இரு அரசில்களையும் தோற்கச் செய்தான். எதிரிபடைகளை நடத்திய எதிரியாகிய மகமூது கில்ஜி கும்ப ாமகாராணுவினால் கைதியாக்கப்பட்டு ஆறு மாதம்வரை சிறையில் வைத்திருக்கப்பட்டு பின்னர் விடுதலை அடைந்து திரும்பி விடும்படி அனுப்பப்பட்டான். இவ்வெற்றியின் ஞாபகார்த்தமாக ஒரு கோபுரமும் தயாரித்தனர். இக்கோபுரத்தை இன்னும் சித்தூரில் கீர்த்தி ஸ்தம்பமெனக் காணலாம். இதன் பின் 84 கோட்டைகள் மேவாரின் பாதுகாப்புக்கென ஏற்பட்டதில், 32 கோட்டைகளைத் தானே தயாரித்தனர், இவைகள் லூன் கோட்டையை விடச் சிறியதாக இருப்பினும், நாட்டின் அமைப்புக்கென ஏற்பட்டிருக்கின்றன. ஆழுமலையில் ஒரு கோபுரம் தயாரித்தனர். இன்னும் பல கட்டிடங்களை அங்குள்ள பாரமரின் கோட்டையில் தயாரித்தனர். இவர் தன் அரசியலில் பல அரிய கட்டிடங்களைத் தயாரித்தும், தன் நாட்டை செழிப்புறச் செய்யவும் இஸ்லாம் படையெடுப்புகளிலிருந்து தம்மை காத்துக் கொள்ளவும் ஏனைய மகாராணுக்களைக் காட்டிலும் அதிகமான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தனர். மீரா தன் கணவனின் நாடு சென்றவுடன் மேவாரும் செழிப்புறலாயிற்று. தானும் தன் கணவனும் காவியங்கள் வரைவதிலும் பண்டைய காவியங்களை படிப்பதிலும் காலத்தை கழித்தனர் எனினும் வெகு சீக்கிரத்தில் இருவரினுள் அபிப்பிராய பேதம் ஏற்படலாயிற்று. கணவன் உலக விடயத்தில் மிக்கவையான பற்றுகளை வகிப்பவனாகவும் இராணியார் பாரமார்த்திக விடயத்தில் இரவு பகலை கழிப்பவளுமாயினர். மீராபாய் மகாராணியார் கிருஷ்ண உபாசனையில் கிருஷ்ண லீலாம்ருத வசனங்களை கானம் செய்வதிலும் ஈடுப்பட்டவளானாள். உலக வாழ்வை இப்பேரின்ப வாழ்விற்கு முன்னர் துச்சமாகக் கருதலானாள். கிருஷ்ண உருவத்தையே சதா சிந்தனை செய்துகொண்டு விக்கிரகாராதனங்களில் ஈடுபடலானாள். தினம் புதிய பஜனைகளை தயாரிப்பதும் ஸ்மரிப்பதுமாக முற்பட்டதும் கும்பாராணுவின் மனப்பாங்குகளுக்கு இவை ஒவ்வாதனவாக நேரிடலாயின.

இவ்வமயம் கும்பாராணா நாட்டின் எல்லைப் புறங்களில் எதிரிகளின் தாக்கல்களை அடக்குவதற்கென செல்லலானான். அவ்வமயம் ஜாலாவார் சிற்றரசனின் குமாரி மூன்டோர் சிற்றரசனின் குமாரனுக்கு விவாகிக்கப்பட ஏற்பட்டிருந்தனள். இதைச் செவியுற்ற கும்பா மகாராணா உடனே அங்கு சென்று மணமகளை எடுத்தேகித் தனக்கு மணமாலை சூட்டிக்கொண்டனன். இப்பெண்ணுடன் கும்பாராணா வாழ முற்பட்டது மீராபாய் மகாராணிக்கு பெரும் விடுதலையாயிற்று. முன் நாட்களைவிட இரவு பகலை ஸ்ரீ கிருஷ்ண பூஜையிலும் பஜனையிலும் செலவிடப் பெரும் சமயங்களும் கணவனின் எவ்வித இடைஞ்சல்களும் இல்லாமலிருக்க நேரிட்டது. இரவு பகலாக ஸ்ரீகிருஷ்ண கீர்த்தனை செய்துகொண்டிருந்த மீரா மகாராணியாரைச் செவியுற்ற கணவன் கும்பாராணாவும், இவனது இரண்டாம் மனைவியும் இவ்வம்மையாரைப் பைத்தியக்காரியென நினைத்து இவளது பூஜை முதலியவைகளில் இடையூறுகளை உண்டாக்காமல் விட்டுவிட்டனர். இவளது தாதிமார்களும் இவளின் பக்தி ரசத்தைப் போற்றிப் பின்பற்றுபவர்களானார்கள். சிலநாட்களில் இவர்களின் கோஷ்டி சித்தூர் கோட்டையினுள்ளே பெருகலாகி ஸ்ரீ கிருஷ்ண கானமும் நர்த்தனமும் இரவு பகல் என்ற வித்தியாசமில்லாமல் ஏற்படலாயின. இவள் தனது இஷ்ட தெய்வத்தின் கோயில் ஒன்று தயாரிக்கலானாள். கோயில் தயாரிக்கப்பட்டுப் பிரதிஷ்டை முதலியன செய்யப்படும்படி மகாராணா உதவியும் புரிந்தனர். பிரதிஷ்டையானது முதல் மீரா மகாராணி தன் மாளிகைவிட்டு இக்கோயிலிலேயே தம் பகல் இரவுகளைக் கழிக்கலாயினாள். இக்கோயிலைச் சுற்றி பெரும் நந்தவனமும் துளசிவனமும் ஏற்படலாயின. ஏராளமான புஷ்பங்கள் தினமும் வெளியாகவே இவைகளை மாலைகளாக்கப் பெரும் கோஷ்டி ஏற்பட்டனர். தினேதினே அரசியல் வர்க்கத்தினர்களின் பெண்கள் இக்கோஷ்டியில் சேர்ந்து ச்ரவணம், கீர்த்தனம், நர்த்தனம் செய்ய முற்பட்டு, ஏனைய விவகாரங்களை மறந்தவர்களாகக் கோயிலிலேயே தம் நாட்களைக் கழிக்கலானார்கள். சில மாதங்களின் பின்னர் கோட்டையினுள்ளிருந்த பக்தர்களும் இக்கீர்த்தனை, பஜனையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். இவர்களும் மெய்ம் மறந்தவர்களாக முற்படலாயினர். எனவே ஆண், பெண் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோரும் கலந்து நர்த்தனம் செய்யவும் ராச மண்டலம் ரசனை செய்யவும், கீர்த்தனை, பஜனை நடத்தவும் முற்படலாயினர். மேவார் நாடெங்கும் மீராவின் பஜனைகள் பரவலாயின. இராஜபுத்திரர்கள் வீடுகள் எல்லாம் கிருஷ்ண பூஜைக்கு இருப்பிடமாயின. மாடு, ஆடுகள் மேய்க்கும் சிறுவர்களும் சாணங்களைச் சேகரித்து வரட்டி தட்டும் சிறுமிகளும் மீராவின் கீர்த்தனைகளைப் பாடிக் களிக்கலானார்கள். இக்கீர்த்தி மேவார் நாட்டிலிருந்து வெளியேறி இராஜபுதனத்தில் பரவியது. பின்னர் மெள்ள மெள்ள முகல் மன்னனின் அரசியலிலும் பரவியது. இவ்வமயம் ஆக்ராவில் அக்பர் பாதுஷா வீற்றிருக்கலாயினர். இம்மன்னன் சகல மதங்களிலும் அன்பு மிகுந்தவராக இருந்தனர். மீராவின் விடயம் செவியுறவே, மீராவின் கீர்த்தனைகளை அறிய முற்படலாயினர். இவ்வமயம் இந்து மக்களின் சிற்றரசுகளில் மேவார் மட்டும் முகல் மன்னர்களுக்கு அடங்கா முடியாக இருந்தது. இஸ்லாம் மதத்தினருடன் மேவார் மகாராணாக்கள் முற்றிலும் விரோதமாகவே இருந்தனர். இவ்வெறுப்பு பத்மினி மகாராணியாரின் சமய முதல் ஏற்பட்டு வந்தது. பத்மினியின் சதி விடயத்தை அக்பர் மன்னர் சரித்திரவாயிலாக அறிந்திருந்தனர். எனவே அல்லாவுத்தீன் காலத்து மேவார் சரிதையை நன்கறிந்திருந்ததினால்



இவ்வமயம் மீரா மகாராணியாரைக் காண முற்பட அக்பர் மன்னனுக்கு இச்சை உண்டாகவில்லை. ஆயினும் இவளது கீர்த்தனையைச் செவியுற இச்சை கொண்டிருந்ததினால், தன் அரசியல் சங்கீதவித்துவானாகிய தான்சேனை அழைப்பித்து ஆலோசனை புரிந்து இருவரும் இந்துக்களாக வேடம் பூண்டு சித்தூர் கோட்டையினுள் இருக்கும் கோயிலில் சென்று கீர்த்தனம் செய்ய முற்படின் மீராவும் அங்கு வந்து கலந்துகொள்வாள் என முடிவு கொண்டு தனிப்பட்ட நபர்களாக அக்பர் மன்னனும் தான்சேன் சங்கீத நிபுணனும் வேடம் மாறிப் புறப்படலாயினர். சில மாதங்களில் மேவார் தலைநகரமாகிய சித்தூர் சேர்ந்து தங்கினர். பின்னர் கோயிலுட் சென்று தான்சேன் சில பஜனைகள் பாட ஆரம்பிக்கவே, மீரா மகாராணியாரின் கோஷ்டியினர்களில் சிலர் செவியுற்று மதிமயங்கித் தம் கோஷ்டித் தலைவியிடம் சொல்லச் சென்றனர்.

இவ்வமயம் தானும் கிருஷ்ண ஆராதனைக்கென புஷ்பம் முதலியவைகளை மீரா மகாராணி எடுத்துக்கொண்டு கோஷ்டி அங்கத்தின் பெண்கள் சிலர் சூழக் கோயிலை நோக்கி வந்துகொண்டிருக்கையில், கோஷ்டியினர் தாம் செவியுற்ற அத்விதீய ராகங்களைச் சொல்லவே மீராவும் தன் பக்தியின் விசேஷத்தினால் செவியேறப்பெறாதவளாகக் கோயிலுக்குச் சென்று தன் தினப் பணியைத் தன் இஷ்ட தேவரின்முன் நடத்திவிட்டு திரும்ப ஏனையர்கள் இருவர்கள் நின்று கீர்த்தனையில் ஈடுபட்டிருப்பதைக் கண்களினாலும் செவிகளினாலும் கவனிக்கலாகியும், இவைகளில் மிகவும் பித்துக் கொண்டில்லாதவளாகத் தன் கோஷ்டியுடன் தன் கீர்த்தனைகளை கானம் செய்ய முயலவே, தான்சேனும் அக்பரும் சுகிர்தரானார்கள். இவ்விருவரும் சாதுக்களின் வேடம் பூண்டிருந்ததைக் கண்ட மீரா மகாராணியார் இவர்களை உபசரிக்க முற்படும்படி தன் கோஷ்டியினர்களுக்கு ஆக்ஞையிட்டுத் தன் கீர்த்தனையிலும் நர்த்தனத்திலும் வழக்கம்போல ஏனைய கோஷ்டிகளுடன் ஈடுபடலானாள்.

இக்கோஷ்டியினர்கள் இவ்விரு சாதுக்களையும் உணவு அருந்தக் கேட்கையில் தாம் ஸ்ரீ கிருஷ்ண லீலாம்ருதத்தில் பசியாறவே இங்கு வந்ததாகச் சொல்லி மறுத்து மீராவின் கீர்த்தனைகளில் செவி சாய்த்து ஆனந்த பரவசராகி மெய்ம்மறந்து தாமும் கோஷ்டியினர்களுடன் நர்த்தனம், கீர்த்தனம் செய்ய முற்படலானார்கள். இந்நர்த்தனம் சில நிமிடமாகி ஏகோபித்துக் கிருஷ்ண பஜனைகள் செய்ய முற்பட்ட நேரத்தில் சாது வேடம் பூண்டிருந்த அக்பர் மன்னன் பக்தி மிகுந்தவனாகி ஒரு பெரும் முத்து மாலையை யெடுத்து மீராவுக்கு அளித்துத் தன் இஷ்ட தெய்வத்திற்கு அணியும்படி கேட்டுக்கொள்ளவே, விலையுயர்ந்த வைர மாலையைக் கண்ட மீரா மகாராணியார் அம்மாலையைக் கையில் வாங்கி இரு சாதுக்களையும் பார்த்து அதிசயித்தவளாக "பெரியீர்! தாங்கள் இருவரும் சாதுக்களாகக் காணப்படுகின்றீர்களே! தங்களுக்கு இவ்விலையுயர்ந்த மாலை எங்கிருந்து கிட்டியது?" என வினவினாள். இதைக் கேட்ட சாது வேடதாரியான அக்பர் "பக்த சிரோன்மணியே! நாங்கள் கிருஷ்ண குணானுவாதங்களைச் செய்துகொண்டு மதுரை, பிருந்தாவனம், கோகுலம், பர்சானாநகரம் முதலிய இடங்களில் யாத்திரை புரிந்து திரிந்த நாட்களில் ஒருநாள் யமுனையில் வழக்கம்போல் ஸ்நானம் செய்துகொண்டிருந்த சமயம் இம்மாலை கிட்டியது. இதை உமது இஷ்ட தேவனுக்கு அர்ப்பணம் செய்யவே இங்கு கொண்டுவந்தோம்" என்று சொல்லவே மீரா களிப்புற்றுத் தன் இஷ்ட தேவனுக்குச் சாத்தித் திரும்பிக்

கீர்த்தனையில் ஈடுபட முயலுகையில் இருவரையும் ஏதாவது கீர்த்தனை பாடச் செய்து கேட்டுக் களிக்க தான்சேன் ஒரு கீர்த்தனையைப் பாட மீரா மகாராணி அந்தரங்கங்களில் இச்சாதுவின் ஸ்வர இயல்பில் மனமிளகினவளாக மெய்ம் மறந்து சோர்ந்து விழவே, இரு சாதுக்களும் கோயில் விட்டு வெளியேறி உடனே ஆக்ரா மார்க்கம் செல்லலானார்கள். கோஷ்டியின் அங்கத்தினர் தம் தலைவியின் மூர்ச்சையை தெளியச் செய்யவே மூர்ச்சை தெளிந்து கீர்த்தனை செய்து கொண்டிருந்த சாதுவும் மோகன மாலை அளித்த சாதுவும் எங்கென்று விசாரிக்க இவர்கள் வெளியே சென்று விட்டனர் எனக் கோஷ்டியினர்கள் சொல்லியும் இவர்களைத் தேடி அழைத்துவர ஆக்ஞாபித்தாள் கோஷ்டியினர்கள் பல தேசங்களில் சென்று தேடியும் காணாமல் திரும்பிவந்து கூறவே மீரா மகாராணியும் அதிசயித்து ஒன்றும் தோன்றாதவளாகி இவ்விரு சாதுக்களின் விபரம் அறியச் சிந்தனை கொண்டவளானாள். சித்தூர் கோட்டையிலுள்ளும் இச்செய்தி பரவலாயிற்று. கும்பாராணாவுக்கும் இவ்விபரம் எட்டியது. மகாராணாவும் கோயில்வந்து மீராவின் இஷ்ட விக்கிரகம் அணிந்திருந்த மாலையைக் கண்டு அதிசயிக்கலாகினான். இவ்வளவு விலையுயர்ந்த மாலையை எங்கனம் இரண்டு சாதுக்கள் கொண்டுவந்து கொடுத்திருப்பார் என சம்சயிக்கலானான். கொடுத்துவிட்டுக், கீர்த்தனைகளைப் பாடி மீராவை மூர்ச்சிக்கச் செய்து விட்டு எங்கனம் வெளியேறி விட்டனர்; அப்படி வெளியேறிச் சென்றாலும் மேவார் எல்லையைத் தாண்டி எங்கு செல்லக்கூடும் என்று துப்பாளிகளைப் பல பக்கங்களில் செல்லவிட்டனர். துப்பாளிகள் நாட்டின் கோயில்களில் தங்கும் சாதுக்களைக் கவனிக்கவும் துப்பறியவும் முற்பட்டனர். தம் நகரின் இரத்தின பரீட்சகர்களை அழைப்பித்து இம்மாலையை மதிப்பிட முற்படவே, இவர்கள் பத்து லட்ச ரூபாய் என விலை மதிப்பிட்டதுடன், சில வைரங்களை அக்பர் மன்னனிதாசக் குறிப்பிட்டனர். எனவே கும்பா மகாராணா சம்சயத்தில் மூழ்கலானான். இன்னும் அநேக துப்பாளிகளைத் தன் நாட்டின் எல்லைப் புறங்களுக்கு அடுத்த தேசங்களில் விசாரிக்கும்படி செய்யவே, சில மாதங்களில், இவ்விரு சாதுக்களும், தான்சேனும் அக்பர் பாதுஷாவுமெனத் தெரியலாகியது. கீர்த்தனை கானம் செய்தவன் தான்சேனெனவும், வைரமாலையை அளித்தவர் அக்பர் எனவும் தெரியலாகிற்று. கும்பா மகாராணா மீராவைப் பார்க்கவே, இம்மன்னன் இவ்வேடம் தரித்தனன். எனவே நம் குலமரியாதை கெட்டு விட்டதென அல்லாவுத்தீன் பத்மினியின் சரிதைகளை ஆலோசிக்கலானான். மீரா ஜாதிப்பிரஷ்டமானாளெனத் தீர்மானத்திற்கு வந்தனன். மகாராணாக்களின் இராணிமார்களின் கௌரவத்தை இழந்து விட்டனளெனவும் கும்பா மகாராணா மீராவைக் கருதலாகினான். மேவாரின் பெண்ணரசிகளின் கீர்த்திகளை சீர்குலையமீரா காரணக் கருவியானாளென மனம் நோகலானான். கோபம் மூண்டவனாகி, ஒன்றும் தோன்றாதவனாகி, மீராவைக் கொலைசெய்து விடவேண்டுமெனத் தீர்மானித்தனன். எனினும் கோட்டையினுள் இருந்த இவளது சிப்பந்திகள் மீரா மகாராணியைக் கொலை செய்யும் யோசனையை ஒருவரும் அங்கீகரிக்கவில்லை. அரசகோபம் மீறினும் மீராவை இம்சிக்க ஒருவரும் கருதவில்லை. இராஜபுத்திர உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் ஆக்ஞாபித்தனன். ஒவ்வொருவரும் தம் உடைவாளை மகாராணா முன்னர் வைத்துவிட்டு தேசம் விட்டுச் செல்ல சம்மதித்தனர். இவைகளில் மிக வெறுப்புக் கொண்டவனாகி, ஒரு அறிக்கை தானே தயாரித்து மீராவைத் தற்கொலை உடனே செய்து கொள்ள வேண்டுமென ஆக்ஞாபித்தனன். மீரா தினப்



படி நடவடிக்கைப்படி கோயில் பூஜை, இஷ்ட தெய்வ கீர்த்தனை, நர்த்தனம் முதலியவைகளிலிருந்து திரும்பிவரும் காலத்தில் இவ்வறிக்கை ஒரு சேவகனால் கொடுக்கப்படவே, இதை வாசித்து உணர்ந்து, தான் நேராக மகாராணாவைக் காணக் கூடுமா என வினவ அறிக்கையை எடுத்து ஏகிய சேவகன், தங்களை இனி மகாராணா அவர்கள் இச்சிக்கவில்லையெனக் கண்டுள்ளதே எனக்கூற, ஆனால் சரி, மீரா கணவனின் ஆக்ஞைக்கு கீழ்படிவள் என்று சொல்லும் எனக் கூறி, தன் கோஷ்டியுடன் தன் மாளிகை சென்று, தன் கோஷ்டி இவ்வறிக்கையின் விபரம் தெரிந்தால் மிக விசனப்படுவார்களென ஒன்றும் சொல்லாமல் கோஷ்டியைத் தம்தம் இல்லம் ஏகும்படி கட்டளையிட்டனள். எனினும் கோஷ்டியினர் மகாராணியார்வாசித்த கடிதத்தையும் பின்னர் மகாராணா அவர்களைக் காணலாமாவென்று கேட்டதற்குக் கடிதத்தில் மகாராணா அவர்கள் தங்களைக் காண இச்சிக்கவில்லையெனக் கண்டுள்ளதெனக் கூறியுள்ளதையும் செவியுற்றதினால் மிகவும் யோசிக்கலானார்கள்.

அன்று இரவு கோஷ்டியினர்கள் இக்கவலையில் மூழ்கினவர்களாகவே இருந்தனர். மீரா அன்றிரவு எழுந்து தன் உடைகளை மாற்றிச் சாதாரண உடையை அணிந்துகொண்டு தன் அரண்மனையை விட்டு வெளியேறி ஒருவருக்கும் தெரியாமல் பல மைல் தூரம் சென்று விட்டனள். காலையில் ஒரு நதியின் பாலத்தில் செல்ல நேரிடவே தன் கணவனின் ஆக்ஞைபின்படி தற்கொலை செய்துகொண்டு தன் பதிவிரதாதர்மத்தை இராஜபுத்திரியைப் போல் காப்பாற்ற வெண்ணிப் பாலத்திலிருந்து ஆற்றில் குதித்துத் தற்கொலை புரிந்துகொள்ள முற்பட்டாள். பின்னர் மீராவுக்கு என்ன நேர்ந்ததென சொல்ல மீராவே உணர்ச்சியற்றவளாகினாள்.

* * *

பெரும் வெள்ளம் ஓடும் ஆற்றில் வீழ்ந்தவுடன் மீரா மகாராணியார் பிரக்ஞையற்றவளானாள். வெள்ளம் இவ்வம்மையாரை ஒருபுரம் ஒதுக்கிக் கரையோரம் சேர்த்தது. சற்று நேரத்திற் கெல்லாம் பிரக்ஞை கொண்டவளாகி, யாதோ சொப்பனம் கண்டவள் போல் விழித்துப் பார்க்க, சுமார் பகல் 10 மணி சூரியன் ஆகாயத்தில் தோன்றியிருக்கக் கண்டனள். சுற்றி அக்கம்பக்கம் பார்க்க ஒருவரையும் காணாதவளாகித் தான் தற்கொலை செய்து கொள்ள முயன்றும், ஈசனருளால் தன் உயிர் பிரியாமல் ஆற்றின் வெள்ளத்தினால் கரை ஒதுக்கப்பட்டதை நினைத்து மனம் கசிந்து பழயபடி ஸ்ரீ கிருஷ்ண லீலாம்ருதகானங்களைச் செய்யலாகினாள். சற்று நேரம் கழித்தவுடன் வெய்யிலின் உக்கிரம் ஆற்றங் கரையில் பொருக்கமுடியாதவளாக மரநிழல் காண முற்படச் சில சிறுவர்கள் தம் ஆடுமாடுகளைத் தண்ணீர் அருந்தச் செய்ய. ஆற்றுக்கு ஓட்டிவருவதைக் கண்டு, அப்பாட்டை நோக்கிச் சென்று பிருந்தாவனத்திற்கு எவ்வழி யென்று கேட்டுப் பதில் செவியுறு முன்னர் களைப்புற்றுக் கீழே விழலானாள். இதைக்கண்ட சிறுவர் மிகப்பயந்து இவளது மூர்ச்சையைத் தெளியச் செய்ய முயன்று இவ்வம்மையாரை அருகிலிருந்த விருட்ச நிழலுக்கு அழைத்துச் சென்று, தம் ஆடுகளைக் கறந்து கொஞ்சம் பாலும் அருந்த அளிக்கவே, களைப்பு நீங்கிய பிறகு பிருந்தாவனத்திற்கு வழி காண்பிவிப்பதாகத் தம் இல்லம் இட்டுச் சென்றனர். கிராமம் செல்லும் வரை வழியில் ஸ்ரீ கிருஷ்ண குணகானம் செய்து கொண்டே சென்றனள். இக்கிராமச் சிறுவர்கள் இவளது கீர்த்தனைகளில் மிக்கப் போன்பு கொண்டவர்களானார். கிராமம் சென்றவுடன் சிறுவர்கள் தம் வீடுகளுக்கு அழைத்துச் செல்ல இல்லத்தினர் கண்டு யாரோ ஒரு அனாதைப் பெண்ணெனப் பசிக்கு உணவும் தாக

விடாயைத் தீர்த்துக்கொள்ள ஜலமும் அளித்தனர். இவ்வம்மையார் அவைகளை உண்டு தண்ணீர் அருந்தி ஸ்ரீ கிருஷ்ணலீலாம்ருத பஜனைகளைப் பாட முற்படவே கிராமத்தினர் கூடி செவிசாய்த்து மிக்கனவாக மகிழ்ந்து இவ்வம்மையின் வரலாறுகள் விசாரிக்க, மீரா ஒன்றும் சொல்லாதவளாகித் தான் பிருந்தாவனம் செல்ல முற்பட்ட ஒரு பக்தை எனக் கூறவே ஒவ்வொருவரும் இவ்வம்மையைத் தம் இல்லங்களில் சில நாட்கள் தங்கிச் செல்லும்படி வேண்டிக் கொண்டனர். எனவே இக்கிராமத்தினர்கள் மீராவை சில நாட்கள் தாமதிக்கச் செய்ததின் காரணமாக இக்கிராமத்தினர் கிருஷ்ண பக்தி ரசத்தில் ஈடுபட்டுத் தாமும் கோஷ்டியர்களாகி இரவுகளில் பஜனை, நர்த்தனம் முதலியவைகளில் சிறப்புறவும் தம் இல்லங்களில் கிருஷ்ண மூர்த்தி உபாசனை, பூஜை முதலியவைகளைச் செய்யவும் ஆனார்கள். சிறுவர், சிறுமிகள் மீராவை விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாகவே இருந்தனர். எப்பொழுது பார்த்தாலும் பஜனை பாடிக் கொண்டே இருந்ததினால் பலர் மீராவின் பஜனைகளைக் கற்கவும் ஆனார்கள். பின்னர் மீரா தான் பிருந்தாவனம் செல்லவேண்டுமெனப் புறப்பட்டுவிடவே கிராமத்தினர்கள் வழிவிட முன்பட்டதுடன் உணவுசாமான்களைத் தயாரித்தும் கொடுக்க இவ்வம்மையார் அவைகளை ஏற்றுக் கொள்ளாமல் தனியே செல்லலானாள். இவ்விதமாக ஒவ்வொரு மாலையிலும் கிராமங்களில் பிருந்தாவனம் செல்வதெனப் பல மாதகாலம் யாத்திரை புரியநேரிட்டது. வழிக்கிராமத்தின் பெண்கள் பல நாட்கள் வரை மீராவைத் தம் இல்லத்தில் வசிக்கச்செய்தும், இவள் வாயினால் ஸ்ரீ கிருஷ்ணலீலாம்ருத கீர்த்தனைகளைச் செவியுற்றுத் தாமும் கோஷ்டியினர்களாக முற்பட்டனர். இக்கிராமங்களிலிருந்து ஒன்றிரண்டு பேர்கள் பிருந்தாவனயாத்திரைக்கென பின்பற்றினார்கள். எனவே இவ்வமயம் ஒரு சிறு கோஷ்டியும் வாய்ந்தது.

முடிவாக, சில மாதங்களில் மீரா பிருந்தாவனம் சேரலானாள். இக்கோஷ்டியைத் தரிசிக்கவும் பஜனையைச் செவியுறவும் பிருந்தாவனத்தில் பலர் ஒருங்குகூடினர். இக்கோஷ்டி பிருந்தாவன எல்லையில் சேர்ந்தவுடன் நேராகக் கிருஷ்ணனின் கோயிலுக்குச் சென்று கானம் செய்யவே, கிராமத்தினர் சூழ்ந்து செவிசாய்த்து மெய்ம்மறந்து இவளை மேவாரின் இராணியாகிய மீராவின் கீர்த்தனைகளைப் பாடும் ஒரு பெண்ணெனக் கொண்டனர். இப்பிருந்தாவனத்தில் ரூப்குஸாயி என்ற ஒரு சாது இருந்தனர். இவர் பெரும் கல்விமானாகவும் பக்தராகவும், மண், பெண், பொன் என்ற மூவாசனையை விட்டவராயுமிருந்தனர். மீராவும் இவரைப்பற்றிக் கேள்வியுறலானாள். இவரைக் கண்டு பிருந்தாவன மகிமைகளை அறியவேண்டுமெனவும் மனதில் யோசித்தனள். ஆனால் மக்கள் இவர் பெண்களைக் கண்டு பேசுவதில்லையெனக் கூறவே மீரா வேறு விதத்தில் பிருந்தாவன மகிமையை அறியவேண்டுமெனக் கருதினாள். பிருந்தாவனத்தில் கிருஷ்ணன் கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. இவைகளைத் தினம் தரிசிப்பதிலும் அங்கு கீர்த்தனை செய்வதிலும் மீரா ஈடுபடலானாள். இவ்விதம் தம் நாட்களை யமுனா ஸ்னானத்திலும் கோயில் தரிசனத்திலும் கீர்த்தனை நர்த்தனத்திலும் கழித்துக் கொண்டிருந்த சமயம் அகஸ்மாத்தாக ரூப்குஸாயி அம்மார்க்கம் செல்ல நேரிடவே, மீராவின் கீர்த்தனைகளைச் செவியுற்று மனம் பூரித்தவராகி அங்கு நின்றபடியே ஆனந்தக் கண்ணீர் சொரியலானார். நாட்டின் பக்கங்களிலிருந்து பிருந்தாவன யாத்திரைக்கு வருபவர்கள் எல்லாம் மீராவின் கீர்த்தனைகளைக் கேட்டு மனங் கலங்கினவர்களாகி, தம் இல்லம் திரும்பினசமயம் மீராவைப்பற்றித் துதிக்கலானார்கள்.



இச்செய்தி இராஜபுதனத்தையும் பிறகு மெள்ள மெள்ள மேவார் நாட்டையும் எட்டியது. பின்னர் மகாராணா கும்பாவின் அரசியல் மாளிகையிலும் பரவிற்று. மேவார் நாட்டினர் மீராவின் பஜனைகளைச் செய்வதில் பின்வாங்காமல் இருந்ததினால் மக்களில் கிருஷ்ண பக்தி பதிவுற்றுக் கிடந்தது. இவ்வமயம் கும்பா மகாராணா மீராவை அவமதித்ததின் காரணங்களை ஆலோசிக்கலானான். நாட்டினர்கள் மீராவைப் போற்றுவதையும், மீராவின் உற்சவங்களை வியரிசையாகக் கொண்டாடுவதையும் கண்ட கும்பாராணா கலங்கலானான். பிருந்தாவனம் சென்று மீராவைக் காணவேண்டுமெனக் கருதலானான். எனவே ஒரு நண்பனைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு சாது வேடம்பூண்டு இருவருமாகப் பிருந்தாவனம் சென்றனர். இங்கு பிரதிதினமும் வழக்கம்போல் யமுனையில் ஸ்னானம் செய்து, பலர் சூழப் பெரும் கோஷ்டியுடன் கிருஷ்ண லீலாம்ருத வசனங்களை எளிய நடையில் கீர்த்தனம் செய்துவரும் மீராவைக் கண்டு, இரு சாதுக்களும் சுகிர்தரானார்கள். இவ்வம்மையாரைக் கண்டவுடன் சாதுவேடம் பூண்டிருந்த கும்பா மகாராணா முன்வந்து "மீரா! எனக்கு ஏதாவது கொடு" எனக் கேட்கவே, மீரா "நானே பிச்சைக்காரி, நீர் பெரும் பணக்காரரிடம் சென்று கேட்டால் ஏதாவது கொடுப்பார்கள்" எனக் கூறவே, "எனினும் நீ பெரும் கோஷ்டிகளுடன் இருக்கும் பிச்சைக்காரி போல் காணப்படுகின்றாய். நானே ஒரு மித்திரனுடன் கூட உள்ளேன். பிருந்தாவனத்திற்கு எப்பொழுதும் வந்ததில்லை" என்று சாதுவேடம் பூண்ட கும்பாராணா கூறவே, "அப்படியானால் உமக்கு என்ன வேண்டும்? கிருஷ்ண தரிசனம் வேண்டுமானால் கூட வாரும். வேறு ஏதாவது வேண்டுமானாலும் கூறும்" என்றனள். இதைக் கேட்ட சாதுவேடதாரி தன் வேடத்தைக் களைந்து எறிந்து "மன்னிக்கவேண்டும், மீரா!" என்று கூறவே மீராவும் திடுக்கிட்டுத் தன் கணவனாகிய மகாராணா கும்பாவைத் தன் முன்னே காண நாணம், மடமை, அச்சம் கொண்டவளாகித் தலை குனிந்து நமஸ்கரித்து "பிரிய நாதனே! எனது ஞாபகம் உமக்கு எவ்விதம் உண்டாயிற்று?" என வினவிக் கணவனைப்பின்பற்ற மூவரும் கிராமத்தினர்களின் ஆசிரமத்திற்குச் சென்ற பிறகு சித்தூர் சென்றனர். கும்பா மகாராணா மீராவின் ஞாபகார்த்தமாக ஒரு பெரும் கோயிலை பிருந்தாவனத்தில் ஏற்படுத்தினான். வருடத்தில் ஆறு மாதம் பிருந்தாவனத்தில் மீரா தங்கலானாள். மற்றைய நாட்களில் சித்தூர் மாளிகையில் தாமதித்தனள். கும்பா மகாராணா இவளது கீர்த்தனைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்துப் புத்தகமாகி வெளியிட்டான். இவனும் இவளது மதத்தில் ஒழுகலாகி, கிருஷ்ணலீலாம்ருதக் கீர்த்தனைகளைப் பாடவும், பஜனை செய்யவும், கீர்த்தனைகளை கானம் செய்யவும், நர்த்தனம் செய்யவும் முற்பட்டுப் பண்டைய முறையில் சித்தூரில் இவரது தலைமையில் இராஜபுத்திரர்கள் கோஷ்டியும், மீரா தலைமையில் இராஜபுத்திரிகளின் கோஷ்டியும் ஏற்பட்டுக் கிருஷ்ண பக்தி பெருகலாயிற்று. இவ்வமயம் கும்பாராணாவிற்கு ஜாலவார் இராஜ குமாரியினால் ஒரு குமாரன் இருந்தனன். இவனை ஊதோ என்று அழைக்கலுற்றனர். இவன் வயதினனாக ஏற்படக் கோட்டையிலும் அரச மாளிகையிலும் கீர்த்தனை, பஜனை, நர்த்தனம் முதலியவை நடப்பதில் வெறுப்புற்றவனாகி இதைத் தடுக்க முயன்று, கோஷ்டியில் சேர்ந்தவர்கள் வரும்போதும் செல்லும்போதும் பெரும் இடைஞ்சல்களைச் செய்து வந்தனன். இவ்விதமாகப் பல துன்பங்களை அளித்ததுடன் 1469-ம் ஆண்டில் ஒரு நாள் இவன் தன் தகப்பனைக் குத்திக் கொன்று விட்டுத் தான் மகா ராணாவானான். பின்னர் இவனுக்கு அஞ்சி மீராவும் சித்தூரை விட்டுப்

பிருந்தாவனம் சென்று வசிக்கலானாள். மீராவும் சீக்கிரம் காலகதியை அடைந்துவிடினும் இன்னுட் மீராவின் பதங்களும் பாடல்களும் பக்தர்களின் வாயில் இருக்கின்ற விசேஷமே இம்மகாராணியாரின் பக்தியை நிரூபிக்கின்றது.

(சுபம்.)

## "குலமகட்கழகு கொழுநனைப் பேணுதல்."

(ஸ்ரீமான் Y. C. மணி.)

ஆடிமாதம் மிக்க ஆனந்தத்துடன் காவேரித் தாயார் ஒரே பிரவாகமாக ஓடிக்கொண்டிருந்தாள். திருவையாற்றில் காலை, சூரியன் உதயமாகி ஒரு நாழிகை நேரமாயிருந்தது. நாரீமணிகள் தங்கள் தங்கள் சிறந்த இடையில் பெருத்த குடங்களுடன் காவேரி ஸ்னானம் செய்வதற்காகப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஸ்ரீமணி ஒருவள். அவள் சற்றுவேகமாக வந்து காவேரிக் கரையை அடைந்தாள்.

எப்பொழுதும் கிராமவாசங்களில் ஆறு, வாய்க்கால், குளம், கிணறு முதலான இடங்களில் ஸ்திரீகள் ஒன்றுகூடி அவரவர்களுக்குப் புதிதாகத் தெரிந்த விஷயங்களை ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டு பிரிவார்கள். வீட்டிற்கு வந்ததும் வீட்டிலுள்ளவர்களுக்குத் தங்களுக்கு தெரிந்த விஷயங்களைச் சொல்லி, அவர்கள் தங்கள் அயலூருக்குப்போக நேரும்பொழுது அவ்விடம் தங்களுக்கு தெரிந்தவர்களுக்குச் சொல்லி இப்படியே, அச்சியற்றும் சிலவு சிறிதுமில்லாமல் அச்சிறு கிராமத்தில் பேசியவிஷயம் ஒருமாகாணம் முழுவதும் பாவிவிடுகின்றது வழக்கம்.

காவேரியை நோக்கி வேகமாக வந்த தருணியை ஜலத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாது நோக்கி, "ராதா! என்ன விசேஷம்? இன்றயதினம் இவ்வளவு தாமதமாக வந்திருக்கிறாய்? நீ என் வழக்கத்தைக் கொண்டு விட்டாய் போலிருக்கிறது. ஒரு சமயம் ஸ்னானத்திற்கே வாராமலிருந்து விடுவாயோ என்று நினைத்தேன்" என்றாள்.

ராதா:—விஜயம்! நான் என்றயதினமாவது காவேரிஸ்னானத்திற்குவரத் தவறியதுண்டா? காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்னானம் செய்தால் சரீரத்திற்கு அளவற்ற ஆரோக்யமாயிற்றே! இன்றயதினம் என் புருஷனுக்குச் சற்று தலைவலியாக இருந்தபடியால், கொஞ்சம் பானம் தயாரித்துக் கொடுத்துவிட்டு வந்தேன். அதனால் சற்று நேரமாய்விட்டது. நீ ஒருதினமாவது இவ்வளவு சீக்கிரம் ஸ்னானத்திற்கு வருவதை நான் பார்த்ததே கிடையாதே! இன்றயதினம் ஏன் வந்துவிட்டாய்?

விஜயம்:—ராதா! என்னென்று சொல்வேன்! வீட்டில் என் மாமியின் தொந்திரவுகள் உனக்குத் தெரியாதா? அவளிருந்தால் என்னைக் காவேரி ஸ்னானத்திற்குப் போகவிடமாட்டாள். அவள் நேற்று இராத்திரி புறப்பட்டு பெண்வீட்டிற்குப் போயிருக்கிறாள். என்புருஷன் தஞ்சாவூருக்கு உத்தியோகசாலைக்குப் போகவேண்டுமாம். அதற்கு ஒன்பது மணிக்குள் சமைத்தும் போடவேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு சீக்கிரம் வந்தேன். வீட்டில் ஒரு பண்டம் கிடையாது. எல்லாம் பெண்வீட்டிற்கு மூட்டை கட்டிவிட்டாள். இப்பொழுதே புருஷரிடம் எல்லாவற்றிற்கும் சொல்லவேண்டும். சொல்லாவிடில் சாயங்காலம் ஐந்து மணிக்குத்தான் திரும்பி வருவார்.

ராதா:—விஜயம்! நீ சொல்வதைக்கேட்க மிக்க வருத்தமாக யிருக்கிறது. உன் புருஷர் வண்ணாற்றங்கரைக்குத் தொழில் பயிற்சிக்குப்



போய்விடுவதாகவும், உண்பதற்குத்தான் வருவாரென்றும் முன் ஒரு தினம் நீ உரைத்தாயே. நீ எப்பொழுது சாமான்களுக்கு அவரிடம் சொல்வாய்?

விஜயம்:—ஏன்? சாப்பிடும்பொழுதுதான் சொல்வேன். வாய் புசித்தால் காது என்ன செய்கிறது? கேட்டுக்கொண்டே பணமோ, காசோ அவர் கொடுத்தால் வேண்டியதை வாங்கிக்கொள்கிறேன்.

ராதா:—அட ராமா! என்ன நீ இப்படி உரைக்கிறாய்? நீ மிகவும் படித்தும் புத்திசாலியாக இருந்தும் யோசிக்காமல் பேசுகிறாய். புருஷர்களைப் புசிக்கும்பொழுது ஒருவிதமான தொந்திரவும் செய்யக்கூடாது. அவர்கள் மிக்க சிரமப்பட்டு ஓடி ஆடி வீட்டிற்கு வந்தால் மனைவியானவள் இன்சொல்லால் அவர்களை ஆசுவாசப்படுத்தி "குலமகட்கழகு கொழுநனைப் பேணுதல்" என்றபடி அவர்களுக்குப் பரிவுடன் அன்னமிட்டு உண்பித்துப் பிறகு ஆகவேண்டிய காரியங்களிருந்தால் சொல்லவேண்டுமே யல்லாது சில மூடப்பெண்களைப்போல, புருஷர்கள் ஒழிந்திருக்கும் வேளை எல்லாம் விட்டு உண்ணும்பொழுது தவிர வேறுபொழுது அவர்களுக்கு ஒழியாதென்றோ, அல்லது வேறு சமயங்களில் சொன்னால் கேளார்களென்றோ அவர்கள் உண்ணும்பொழுதே சொல்லவேண்டியவைகளைச் சொல்ல, அவர்கள் இவர்கள் சொல்லும் விஷயத்தில் மனதுலயித்து அரை வயிறுகூட நிரம்பாமல் ஆகாரத்தில் நினைவற்றுப்போய் எழுந்துவிடுகிறார்கள். ஸ்திரீகளுக்குப் புருஷர்களை மகிழ்விப்பதே யாவற்றிலும் முக்கியமானது. பெண்மக்களின் முக்கிய துர்க்குணம் புருஷர்கள் புசிக்கும்பொழுது தொந்திரவு செய்வதுதான். விஜயம்! இனி ஒருகாலும் புருஷரை உண்ணும்பொழுது ஹிம்சை செய்யாதே. நான் இவ்வளவு உரைத்ததற்கு என்மேல் ஆயாசப்படாதே. நான் எப்பொழுதும் உன் நன்மையைக் கோருகிறவளானபடியால் இவ்வளவு உரைத்தேன்.

விஜயம்:—ராதா! நான் புத்தியை அடைந்தேன். இனி நீயே என் தாய், தந்தை, குரு, தெய்வம் யாவுமாவாய். இனி ஒருகாலும் நீ உரைப்பது தவறி நடக்கமாட்டேன். உண்மை சிநேகத்திற்கு மற்றெதுவும் ஈடாகாது.

ராதா:—விஜயம்! நான் ஒன்றும் பிரமாதமாகச் சொல்லிவிடவில்லை. நீ இவ்வளவு புகழ்வதற்குரியவளாக நான் ஆகமாட்டேன். என் கடமையை நான் உனக்குரைத்தேன். நீ அதன்படி நடப்பதாகச் சொன்னதே எனக்கு அளவற்ற சந்தோஷமாயிற்று.

நேரமாயிற்று. இருவரும் வீட்டிற்குப் போகவேண்டும் என்று சீக்கிரம் ஸ்னானம் செய்து வீட்டிற்குச் சென்றார்கள்.

சுபம்.

## பிரஹ்லாத விஜயம்.

(ஸ்ரீமான் K. நடராஜய்யர்)

(எல்லா உரிமைகளும் ஆசிரியருடையது.)

(185-ம் பக்கத் தொடர்ச்சி.)

### எட்டாம் அத்தியாயம்.

நாரத மகரிஷியைப் பற்றிக் கேள்விப்படாதார் நம் நாட்டில் எவருமிருக்கமாட்டார்கள். சிறு குழந்தைகளும் கூட 'நாரதர் கலகப்பிரியர்' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பது வழக்கம். நாரதர் பிரம்ம தேவரின் புத்திரர். விவாகமே யில்லாது நித்தியப் பிரம்மசாரியாக இருப்பவர். சதா வைகுண்ட நாதனைப் பஜித்

துக்கொண்டிருப்பவர், பக்தர்களுக்குள் முதன்மையானவர், மகா தபஸ்வி. சத்தியலோகம், வைகுண்டம், கைலாசம் முதலான எந்த இடங்களிலும் அவர் யாதொரு தடையுமின்றிச் செல்லலாம். கையிலுள்ள வீணையை மீட்டிச் சுருதி சேர்த்து பகவந்நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு ஒரு முகூர்த்தத்துக்குள் உலக முழுவதும் சுற்றிவருவார். கலகம் செய்வதில் அவருக்கு நிகரானவர் ஒருவருமேயில்லை. தேவர்கள், அசுரர்கள், மானிடர் முதலான எல்லோரிடத்திலும் அவருடைய வார்த்தைக்கு மிகுந்த செல்வாக்குண்டு. அவரவர்களுடைய மனப் போக்கின்படியே பேசி மனதைத் திருப்புவதில் அதிசமர்த்தர். அவருடைய கலகமானது ஆரம்பத்தில் எப்படித் தோற்றினும் முடிவில் துஷ்டர்களுக்குக் கெடுதலாகவும் சாதுக்களுக்கு நன்மையாகவும் முடியும். “பரம பக்தராகவும் தபஸ்வியாகவு மிருக்கும் நாரதமகரிஷி மகா பாபமான கலகத்தொழிலைச் செய்துகொண்டிருப்பதற்குக் காரணமென்ன?” என்று வாசகர்கள் நினைக்கலாம். ஆதலால் அதற்குக் காரணமான விருத்தாந்தத்தைக் குறிப்பிட்டுவிட்டு மேலே செல்வோம்.

பிரம்மதேவருக்கு தக்ஷப்பிரஜாபதி என்றொரு குமாரனுண்டு. அவர் பரமசிவனை உத்தேசித்துப் பதினாயிரவருஷகாலம் தபஸ் செய்தார். பரமசிவன் பிரத்தியட்சமாய் ‘உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்’ என்று சொல்ல, தக்ஷப்பிரஜாபதி மனமகிழ்ந்து ‘அகண்டசாம்பிராஜ்யச் செல்வங்களைத் தானடையவும், பிரம்மதேவர் முதலானோர் தன் கட்டளைக்கடங்கி நடக்கவும், அம்பிகை தனக்குப் பெண்ணாகப் பிறக்கவும், பரமசிவன் தனக்கு மருமகனாக வந்து தேவியைக் கலியாணம் செய்து கொள்ளவும் வேண்டும்’ என்று கேட்டார். பரமசிவனும் அவ்விதமே வரங்கொடுத்து மறைந்தார். பின்பு தக்ஷப்பிரஜாபதி தான் பெற்ற வரமகிமையினால் மிகுந்த வீறுப்படைந்து, தக்ஷசீலமென்னும் நகரத்திலிருந்து, இந்திரன் முதலான தேவர்களை அடக்கித் தனக்கு வேலை செய்யும்படி கட்டளையிட்டு, அரசாட்சி செய்து வந்தார். அவர் பிரம்மதேவரின் பாதத்திலிருந்து உதித்தவளான வேதவல்லியென்னும் சுந்தரியை மணந்து, அவளிடத்தில் ஆயிரம் பிள்ளைகளைப் பெற்றார். அவர்களுக்கு உபநயனம் பண்ணி, வேதாத்தியயனம் செய்வித்து அவர்களை நோக்கி ‘மானஸசரஸ் என்னு மிடத்திற்குச் சென்று, பரமசிவனை நினைத்துத் தபஸ் செய்து சமஸ்த ஜீவராசிகளையும் சிருஷ்டிக்கக் கூடிய சாமர்த்தியத்தைப் பெற்று வாருங்கள்’ என்று கட்டளை இட்டார். அவர்களவ்விதம் தபஸ் செய்து கொண்டிருப்பதை நாரதமகரிஷி அறிந்து, அவர்களிருக்கு மிடம் போய், ‘நீங்கள் யார்? எதற்காகத் தபஸ் செய்கிறீர்கள்? என்று கேட்டார்.

அவர்கள் தங்களுடைய விருத்தாந்தத்தைச் சொல்ல, நாரதமகரிஷி அதைக்கேட்டு நகைத்து, “குழந்தைகளே! பேரின்பசுகமான மோட்சத்தை அடைய நினைக்காமல் கேவலம் துக்கத்துக்குக் காரணமான சிருஷ்டித் தொழிலைப்பெறுவதற்காகவா அன்னாகாரங்களைத் தவிர்த்து, சரீரம் நோக, பஞ்சாக்கினி மத்தியிலிருந்து இவ்வளவு கஷ்டமான தபஸ்ஸைச் செய்கிறீர்கள்? உலகமென்னும் துன்பசமுத்திரத்தில் மூழ்கிக் கரைகாணாது தத்தளித்துக் கொண்டிருக்கும் மூடஜனங்களின் கூக்குரலைக் கேட்டும் கூட ஞானமில்லாமல் உலகபந்தத்தில் உங்களை அதிகமாக—என்றும் மீளாத விதமாக — கட்டுப்படுத்திவிடக் கூடிய சிருஷ்டித் தொழிலைப் பெற நினைக்கும்போது உங்களுக்கு வெட்கமுண்டாகவில்லையா? ஒரு நிமிஷம் கூட ஓய்வில்லாமல் உலகத்தைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கும் உங்களுக்குச் சுகமெப்படி யுண்டாகும்? துக்கத்தை விலக்கிச் சுகத்தைத் தேட



வேண்டியது பகுத்தறிவுள்ளவர்களின் கடமையாயிருக்க, துக்கத்தில் தானாகப் போய் யாராவது மாட்டிக் கொள்வார்களா? உத்தமமான மனிதப் பிறவியை யடைந்தும் நித்தியானந்த சுகத்தைப் பெற முயற்சிக்காமல் உண்பதும் உடுப்பதும் உறங்குவதுமாகக் கண்டதே காட்சி, கொண்டதே கோலமென்று காலங் கழிப்பவர்கள் மிருகங்களிலும் கேடுகெட்டவர்களல்லவா? மனிதன் பிறக்கும்போதே துக்கமும் கூடவே உண்டாகிறது. அது முதல் அவனிறக்கும் வரையில் சஞ்சலம் தான். இறந்தவன் மறுபடி ஜனிப்பதும் நிச்சயமாதலால், துக்கமும் அவனைக் கூடவே தூத்திச் சென்று மறு ஜனனத்திலும் அவனை விடாமற் பற்றிக் கொள்ளுகிறது. இவ்விதம் பிறப்பதும் இறப்பதும் மறுபடி பிறப்பதுமாகத் தன் துணைவனான துக்கத்துடன் கூடவே அவன் உழலுகிறான். அந்தத் துன்பத்திலிருந்து விடுபடுபவனே ஞானியென்றழைக்கப் படுகின்றான். அவனுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை; அவன் உல்கமுழுவதும் தானாக நிறைந்து நிற்கிறான். ஆதலால் நித்தியானந்தமான மோட்சத்தை யடைய முயற்சி செய்யுங்கள். சாதுக்களைச் சேவித்து, அவர்களுடைய அனுக்கிரகத்தால் உலகப் பற்றை யொழித்து நன்னெறிகளைக் கைப்பற்றுங்கள். உங்கள் பிதாவான தக்ஷன் ஐசுவரிய மமதையினால் போதித்ததை மறந்து, இதுவே உண்மையான நீதியென்பதைக் கடைப்பிடித்துக் கிருதார்த்தராகுங்கள்” என்று அவர்களுக்கு உபதேசம் செய்தார்.

அந்தக் குமாரர்கள் நாரதமகரிஷி சொன்னதனைத்தையும் கேட்டு மனமகிழ்ந்தவர்களாய் அவரை நமஸ்கரித்து, “சுவாமிகளே! நாங்கள் முக்தியடையும் மார்க்கத்தை எங்களுக்கு உபதேசம் செய்தருளவேண்டும்” என்று பிரார்த்தித்தார்கள். நாரதர் மோட்சத்தை யடைவதற்குள்ள முறைகளையும் அவைகளை அனுஷ்டிக்கவேண்டிய விதத்தையும் சவிஸ்தாரமாக அவர்களுக்குப் போதித்து விட்டுத் தன்னிஷ்டப்படி சென்றார்.

குமாரர்கள் நாரதமகரிஷி போதித்தபடியே இந்திரியங்களை நிக்கிரகம் செய்து, உலகப் பற்றை யொழித்து, யோகசாதனங்களைச் செய்து முக்தியடைந்தார்கள்.

இதனை யறிந்த தக்ஷப் பிரஜாபதி, மீண்டும் ஆயிரம் பிள்ளைகளைப் பெற்று, முன் சொன்னபடியே அவர்களுக்கும் போதித்தனுப்ப, நாரதருடைய உபதேசத்தினால் அந்தப் பிள்ளைகளும் தங்கள் முன்னவர்களைப் போலவே மோட்சத்தை யடைந்தார்கள். இதைக் கேட்டதும் தக்ஷப் பிரஜாபதி கோபத்தினால் சீறி, கண்களில் நெருப்புப் பொறி பறக்க, “என் பிள்ளைகளை இவ்வாறு கெடுத்த நாரதன் ஓரிடத்திலும் நிலைத்திருக்காமல் கலகங்களை விளைத்துக் கொண்டே உலகத்தில் உழன்று திரியக் கடவன்” என்று சபித்தான்.

அந்த சாபத்தினால்தான் நாரதமகரிஷி ஒரு முகூர்த்தத்துக்கு மேல் ஓரிடத்திலும் தங்காமல் கலகம் செய்து கொண்டே சஞ்சரிக்கிறார்.

நிற்க, நாரதமகரிஷி சோணிதபுரத்திலுள்ள அரண்மனைக்குச் சென்று, சபாமண்டபத்தில் மந்திரி பிரதானிகள் புடைசூழ, ராஜவைபவத்துடன் கொலுவிருக்கும் சக்கரவர்த்தியைக் கண்டார். சக்கரவர்த்தியோ நாரத மகரிஷியைப் பற்றிக் கேழ்விப்பட்டிருந்தாரேயன்றி, அவரை அதுவரையில் நேரில் பார்த்ததில்லை. ஆதலால் “சுவாமி! தாங்கள் யார்? என்ன காரியமாய் வந்தீர்கள்?” என்று வினவினார்.

“அரசே! நான் பிரம்மதேவரின் புத்திரன். உலகமெங்கும் சஞ்சரிப்பவன். என்னை நாரதரென்றழைப்பார்கள். சக்கரவர்த்தியாகிய தங்

களை தரிசிப்பதற்காக வந்தேன்" என்று விடையிறுத்தார் நாரதர்.

"ஓ! அப்படியா! மிகவும் சந்தோஷம். தங்களை நான் நேரில் பார்த்திராத போதிலும், தங்களைப்பற்றி ரொம்பவும் கேள்விப்பட்டிக்கிறேன். இப்படி உட்காருங்கள்" என்று சொல்லித் தன்னருகிலுள்ள ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டினார் அரசர்.

நாரதர் அவ்வாசனத்திலமர்ந்ததும், சக்கரவர்த்தி அவரை நோக்கி, "சுவாமி! தாங்கள் நல்ல சமயத்தில் வந்தீர்கள். என் சகோதரனான ஹிரண்யாக்ஷன் சண்டை செய்வதில் மிகவும் பிரியமுள்ளவனாய்த் தன்னுடன் யுத்தஞ் செய்யக்கூடிய சத்துருக்கள் யாராவதிருக்கிறார்களாவென்று தேடிக்கொண்டு சுமார் ஒரு மாதத்துக்குமுன் வெளியிற் சென்றவன் இதுவரையில் திரும்பி வரவில்லை. அவன் எங்கிருக்கிறான், என்ன செய்துகொண்டிருக்கிறான் என்ற யாதொரு தகவலும் தெரியாததினால் எனக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது. உலக முழுவதும் சஞ்சரிக்கும் தங்களுக்குத் தெரியாத விஷயமொன்றுமில்லையே. அவன் க்ஷேமமாயிருக்கிறானா? எங்கே, என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதைத் தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் சக்கரவர்த்தி.

"அரசே! வைகுண்டபதியான நாராயணனைப்பற்றித் தாங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா? அவர் வராக ரூபத்துடன் ரசாதலமென்னும் லோகத்திலிருக்கும்போது, தங்கள் சகோதரன் நேற்றையதினம் அவரைக் கண்டு தன்னுடன் சண்டை செய்யும்படி அழைத்து, மல்யுத்தம் செய்து முடிவில் அவரால் கொல்லப்பட்டான். அதைத் தங்களிடம் தெரிவித்துப் போவதற்காகவே வந்தேன்" என்று சொல்லிவிட்டு ஆகாச மார்க்கமாகச் சென்றார் நாரதர்.

அவ்வார்த்தையானது நாராசத்தைக் காய்ச்சி யூற்றினதைப்போல் செவியிற் பட்டவுடன் சக்கரவர்த்தி மனந் திடுக்கிட்டு, சகோதர சோகமென்னும் நெருப்பானது சரீரத்தைக் கொளுத்த, கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருக, நெருப்பில் வீழ்ந்த புழுவைப்போல் துடிதுடித்துப் பதைபதைத்துக் கீழே விழுந்து மூர்ச்சையானார். மந்திரிகள் செய்த சைத்தியோபசாரத்தினால் மூர்ச்சை தெளிந்து, தன் தம்பியை நினைத்துப் பலவாறு பிரலாபித்தார். அவனுடைய குணங்களையும் பிரபாவத்தையும் எண்ணி யெண்ணி வெகுநேரம் துக்கித்து, முடிவில் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, வீராதிவீரனான தான் உயிருடனிருக்கும்போதே தன் சகோதரன் நாராயணனால் கொல்லப்பட்டதை நினைத்து மானமும் கோபமும் மனதை வாட்ட, பற்களை நறநறவென்று கடித்துத் தன் சகோதரனைக் கொன்றவனைப் பழிக்குப் பழி வாங்குவதாகச் சபதம் செய்துகொண்டார். கோபத்தினால் கண்களில் நெருப்புப் பொறி பறக்க, புருவம் நெற்றியிலேற, மீசை படபடவென்று துடிக்க, சத்துருக்களின் உயிரைக் கொள்ளையிட வல்ல தன் சூலாயுதத்தைச் சுழற்றிக்கொண்டு, சபையோரை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:—

"சம்பான், நமுசி, பாகன், இல்வலன், விப்பிரசித்தி, புலோமன், ஹயக்கிரீவன், சகுனன் முதலான அசுர வீரர்களே! என் பலத்திற் காற்றாது பல திசைகளிலும் ஓடி ஒளிந்துகொண்டிருக்கும் சத்துருக்களான தேவர்களின் தூண்டுதலால் நாராயணன் வீரசிரேஷ்டனான என் பிரிய சகோதரனைக் கொன்றுவிட்டான். குழந்தைகளைப்போல் சஞ்சல புத்தியுள்ளவனாகவும், பன்றி ரூபத்துடன் காட்டில் திரிகின்றவனாகவும், நமக்கு ஜன்ம சத்துருவாகவுமிருக்கும் அந்த நாராயணனை என்னுடைய சூலத்தினால் கொன்று, அவன்



கழுத்தை முறித்து, அதிலிருந்து பெருகும் ரத்தத்தினால்; ரத்த பானம் செய்வதில் மிகுந்த பிரியமுள்ள என் தம்பிக்குத் தர்ப்பணம் செய்யப்போகிறேன். நமது சத்துருக்களுக்கு ஆதாரமாயிருப்பவன் நாராயணன்தான். அவனை அழித்துவிட்டால், வேர் வெட்டப்பட்ட விருட்சத்தைப்போல எதிரிகள் தாங்களாகவே நாசத்தையடைவார்கள். அந்த நாராயணன் தர்ம ரூபியாக இருக்கிறான். தபஸ், யாகம், அத்தியயனம், விரதங்கள், தானம் இவைகள்தான் அவனுக்கு மூலம். இவைகளை ஒழித்துவிட்டால், அவனுடைய பலம் குன்றிப்போய்விடுமாதலால் அவனைச் சுலபமாக ஜயிக்கலாம். ஆதலால் நீங்கள் தேசங்கள்தோறும் சென்று வர்ணாசிரம தருமங்களைச் சரிவர அனுஷ்டித்துக்கொண்டும், தபஸ், யாகம், வேதாத்தியயனம் முதலானவைகளைச் செய்துகொண்டுமிருக்கிற பிராமணர்களைக் கொல்லுங்கள். அவர்களை நெருப்பில் போட்டு சுட்டெரியுங்கள். பசுக்களை ஒழியுங்கள். வேதங்களைக் கொளுத்துங்கள். தர்மகாரியங்கள் நடக்கும் தேசங்களை அழித்து, இந்த உலகத்தில் தர்மமே தலைகாட்டாதபடி செய்துவாருங்கள்."

சக்கரவர்த்தியினால் இவ்விதம் உத்திரவிடப்பட்ட சம்பான் முதலான அசுரவீரர்கள் ஏராளமான சேனைகளைக் கூட்டிக்கொண்டு உலகத்தை அழிக்கப் புறப்பட்டார்கள்.

## ஒன்பதாம் அத்தியாயம்.

உலகமெங்கும் படுகொலை! படுகொலையும், ரத்தப்பெருக்கும்! சக்கரவர்த்தியின் பரிவாரங்கள் செய்த கொடுமைகளை நாம் என்னவென்று வருணிப்பது! ஐயோ! அதை நினைக்கும்போதே நமது தலை சுழலுகிறது, மூளை கலங்குகிறது, கண் பஞ்சடைகிறது. ஆ! சண்டாளர்கள்! அயோக்கியர்கள்! கொடியர்கள்! படுபாபிகள்! பாதகர்கள்! எத்தனை அழகான பட்டணங்களை—கிராமங்களை — தேசங்களை— உத்தியானவனங்களை—தீக்கிரையாக்கினார்கள்! எத்தனை நிரபராதிகளைச் சித்திரவதை செய்தார்கள்! எத்தனை ஸ்திரீகளைக் கற்பழித்தார்கள்! நம்மால் அதை நினைக்கவும் கூடவில்லையே! சதிகாரர்கள் நான்கு பாகமாகப் பிரிந்து நான்கு திசைகளிலும் சென்று உலகத்தை அழித்தார்கள். சம்பான், நமுசி என்ற இருவரும் வர்ணாசிரம தர்மங்களைச் சரிவர அனுஷ்டித்துக்கொண்டிருக்கும் உத்தம ஜனங்கள் வசிக்கிற நகர்ப்புறங்களை யடைந்து, சிலரைப் பஞ்சுபோல் தேய்த்தும், சிலரைக் கழுத்தை முறித்தும், சிலரை அம்மானைபோல் பிண்டமாக உருட்டியும், சிலரை இரண்டாகக் கிழித்தும், சிலரைத் தோலை யுரித்தும், சிலரைப் பாதங்களால் பூமியில் தேய்த்தும், சிலரை மூளைகள் சிதற அடித்தும் இவ்விதமாக ஒருவரையும் தப்பவிடாமல் எல்லோரையும் பதைக்கப் பதைக்கக் கொன்று ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ரத்தமானது வெள்ளமாகப் பெருகிப் பெரிய இரைச்சலுடன் அலைகளை வீசிக்கொண்டு நதியைப்போல் ஓடிக்கொண்டிருந்தது. பிணங்கள் மலைகளைப்போல் குவிந்து கிடக்க, கழுகுகள், நாய்கள், பேய்கள், நரிகள் முதலியவை கூட்டங் கூட்டமாய் வந்து பிணங்களைத் தின்று ரத்தத்தைக் குடித்துவிட்டுக் கூத்தாடிக்கொண்டிருந்தன. ஏராளமான சேனைகளுடன் தெற்கு நோக்கிச் சென்ற பாகன், இல்வலன் என்ற இரண்டு பாதகர்களும் பம்பாஸரஸின் மேல்கரையில் சாந்த சீலரான ஒரு மகான் தன்னுடைய சிஷ்யர்களுக்கு தர்மோபதேசம் செய்துகொண்டிருப்பதைக் கண்டு அவர்களை நான்கு புறத்திலும் வளைத்துக்கொண்டு படுகொலை செய்தார்கள். பிறகு தண்டகாரணியத்தில் புகுந்து, அங்கு நடந்துகொண்டிருந்த யாகம் முதலான கர்மங்களை அழித்து, மகரிஷிகளின் பர்ணசாலை

களைக் கொளுத்தினார்கள். கிராமாந்திரங்களை யடைந்த விப்பிரசித்தி, புலோமன் என்ற இருவரும் பசுக்களையும் ஜனங்களையும் கொன்றுவிட்டு, தேவ ஸ்திரீகளும் கண்டு நாணத்தக்க பேரழகு வாய்ந்த சுந்தரிகளைத் தூக்கிச்சென்று பலவந்தமாகக் கற்பழித்தார்கள். அக்கற்பரசிகளின் பரிதாபமான கதறுதல் இந்தப் பாதகர்களின் இரும்பினுங் கடிய மனதை இளக்கவில்லை. ஹயக்கிரீவன், சகுனன் இவ்விருவரும் வேத புத்தகங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், சாஸ்திரங்கள் முதலானவைகளை ஒவ்வொருவரிடமிருந்தும் அபகரித்துத் தீயிலிட்டார்கள். இவ்வாறு அந்த வீரர்கள், பெற்றோர்கள் பார்த்துக் கதற அவர்கள் எதிரிலேயே அவர்களின் அருமைக் குழந்தைகளையும், குழந்தைகளின் எதிரில் தாய்தந்தையரையும், புருஷன் எதிரில் மனைவியையும், மனைவியின் எதிரில் புருஷனையுமாகக் கொன்று, மாளிகைகள், உப்பரிகைகள் முதலானவைகளை இடித்து, உத்தியானவனங்கள், தோப்புக்கள், சோலைகள் முதலியவைகளை யழித்து, ஏரிகள், மடுக்கள், பொய்கைகள், ஓடைகள், தடாகங்கள் முதலானவைகளைத் தூர்த்து, மலைகளைப் பெயர்த்தெறிந்து, நெருப்புப் பற்றிய காட்டைப்போல் உலகமனைத்தையும் நாசமாக்கினார்கள். கணவனை இழந்த காரிகைகளும், புத்திரனை இழந்த தாய்மார்களும், பிதாவையிழந்த பெண்களும், சகோதரனை இழந்த சகோதரிகளும் வாயிலும் வயிற்றிலும் மோதிக்கொண்டு இறந்தவர்களை நினைந்து பன்னிப் பன்னிப் புலம்பிக்கொண்டிருக்கும் சப்தமானது உலகமெங்கும் ஒலித்தது. அதுமட்டுமல்ல. பந்துக்களிறந்த சோகத்தினால் நெருப்பில் வீழ்ந்த புழுவைப்போல துடிதுடித்துக்கொண்டிருந்தது ஒருபுறமிருக்க, அநாதைகளான தங்களைப் பாழ் வீட்டிற்கும் தோப்புக்கும் இருளடைந்த சோலைக்குமாகத் தூக்கிச் சென்று அசுர பாதகர்கள் பலாத்காரமாய்க் கற்பழித்த கொடுமைதான் அவர்களால் சகிக்கமுடியவில்லை. ஐயோ! என்ன அநியாயம்! அந்த அபலைகளின் பரிதாபகரமான கூக்குரல் நமது காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் பட்ட கஷ்டங்களை நினைக்கும்போது ரத்த ஓட்டமே நின்றுவிடுகிறது. ஸ்திரீகளுக்குக் கற்பே சிறந்த ஆபரணமன்றி, பொன்னினாலும், வெள்ளினாலும், ரத்தினங்களினாலும், சரீரத்துக்குப் பாரமாகச் செய்யப்பட்டவை ஆபரணங்களாக மாட்டா. அவர்களுக்குக் கற்பே விலைமதிக்கவொண்ணாத பொக்கிஷம். அதுவே ஜீவாதாரம். அதுவே அவர்கள் ஆத்மாவின் ஒளி. ஓர் உத்தம ஸ்திரீ எப்படிப்பட்ட துக்கத்தையும்—தாரித்திரியம்—புத்திர சோகம்—வைதவ்வியம் முதலானவைகளையும்—கூடப் பொறுமையுடன் சகித்துக் கொள்வாள். ஆனால் தன் கற்பைப் பறிகொடுத்த துக்கத்தை மட்டும் அவளால் தாங்கமுடியாது—சகிக்க முடியாது. அவ்வளவு சிரேஷ்டமான திவ்வியத் திருமணியை—கற்பை—பலவந்தமாய் இழக்கநேரிட்டபோது அந்தக் காரிகைகளின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். இதை எழுதிக் கொண்டு வரும்போது நமது ஐம்பொறிகளும் கலங்கி நமக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது. அந்தோ! நமது அருமைச் சகோதரிகள்—ஸ்திரீ ரத்தினங்கள்—பர்த்தாவைத் தவிர மற்றவரைக் கண்ணெடுத்துப் பார்க்காத பதிவிரதா சிரோமணிகள்—கற்பிற் கரசிகள்—திக்கின்றி—ஏனென்று கேட்பாரின்றி—கொலைகாரப் பாபிகளின் கையிலகப்பட்டுத் தங்கள் ஆன்ம ஒளியைப் பலவந்தமாய்ப் பறிகொடுத்த போது, அவர்கள் மனம் என்ன நினைத்ததோ? எதை நினைத்துக் கதறினார்களோ? அவர்கள் சரீரம் என்ன துடிப்புத் துடித்



ததோ? என்ன புலம்பினார்களோ? என்ன அழுதார்களோ? என்ன பாடுபட்டார்களோ? ஈசனே அறிவார்! ஐயோ! தாய்மார்களே! இதுவோ உங்கள் தலைவிதி! இவ்வளவு கஷ்டப்படவோ நீங்கள் பெண்ஜன்ம மெடுத்தீர்கள்! உங்கள் தலையில் இவ்விதம் எழுதும்போது அந்த பிரம்மதேவரின் மனது இளகவில்லையா? ஐயோ! கொடிது! கொடிது!! நீங்கள் படும் அவஸ்தையை உங்களைப் பெற்ற மாதா அறிந்தால் அவள் வயிறு கொதிக்காதா? "பெண்ணென்றால் பேயுமிரங்கும்" என்பார்களே! அந்தத் துரோகிகளின் மனம்மட்டு மிரங்காத காரணமென்ன? அவர்கள் மனமென்ன கல்லோ, இரும்போ, அல்லது இரும்பினும் கடியவேறு உலோகமோ? ஆ! என்ன ஆபத்து! நம்மால் சகிக்க முடியவில்லையே. "வேலியே பயிரை யழித்தால் என்ன செய்வது?" மற்றவர்கள் கொடுமை—அக்கிரமம்—செய்யாமல் தடுத்துப் பிரஜைகளுக்கு யாதொரு குறைவுமின்றி ரட்சிக்கவேண்டுவது அரசாங்கத்தின் கடமையாயிருக்க, அரசாங்கமே இவ்வித அக்கிரமம் செய்தால் யாரிடம் போய் முறை யிடுவது? அதை யார் தடுப்பது? ஐயோ! இதுதானா நீதி? சக்கரவர்த்தியின் சகோதரனான ஒரு துஷ்டன் விஷ்ணுவினால் கொல்லப்பட்டதற்கு, உலகிலுள்ள நிரபராதிகளான ஜனங்களா ஜவப்தாரிகள்? அதற்கு எவ்வித சம்பந்தமு மில்லாத—லக்ஷக் கணக்கான ஜனங்களை—ஓடுகிறவர்களைக் கூடத் துரத்தித் துரத்திக் கொல்வது தானா நீதி? கேவலம் ரத்தவெறி பிடித்து ஜனங்களைக் கொல்வதுதானா ராஜரிகதர்மம்? சிங்கம், புலி முதலான துஷ்டக் காட்டு மிருகங்களும் கூடப் பல சமயங்களில் மனிதரைக் கொல்லாது விட்டுவிடுகின்றன. மேலும் அவைகளால் ஸ்திரீகளின் கற்புக்கு ஒரு நாளும் பங்கம் நேரிடுவதில்லை. அவைகளைக் காட்டிலும் கேடு கெட்ட இந்த இரண்டு கால் மிருகங்களை என்ன பெயரிட்டழைப்பது? "கொடுங் கோல் மன்னர் வாழும் நாட்டில் வசிப்பதைக் காட்டிலும் புலி, கரடி, சிறுத்தை முதலிய துஷ்டமிருகங்கள் நிறைந்த பயங்கரமான ஆரணியத்தில் வசிப்பது மிகவும் சிரேஷ்டமானதல்லவா?"

ஆ! தாயே! பூமிதேவியே! உன் அருமைப் புதல்விகள் கற்பழிக்கப்பட்டுக் கதறும் கூக்குரல் உன் காதில் விழவில்லையா? உன் புதல்வர்கள் படுகொலை செய்யப்பட்டு, அவர்களின் ரத்தம் ஆறாகப் பெருகி ஓடுவதும் உனக்குத் தெரியவில்லையா? புத்திரசோகமானது சகிக்க முடியாதது என்று சொல்வார்களே! லக்ஷக் கணக்கான அருமை மக்களைப் பறிகொடுத்தும் உனக்குத் துக்கமுண்டாகவில்லையா? இவ்வளவு கொடுமை செய்த பாதகர்களைப் படீரென்று வெடித்து உன்னுள் அடக்கிக் கொள்ளாமல் வாளா விருந்ததேன்? ஆனால், அம்மணி! நீ எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்பவள் என்று பெயர் பெற்றவளாச்சுதே! இதையும் பொறுமையாய் அங்கீகரித்தனை போலும். ஆயினும் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்லவா? சுபாவத்திலேயே இளகிய மனதுடைய ஸ்திரீ ஜாதியின் இயற்கைக்கு விரோதமாய், இவ்வளவு அளவு கடந்த அக்கிரமங்களையும் சகித்துக் கொண்டிருக்கும் கல் மனத்தினளான உன்னுடன் வாதாடுவதில் பயனென்ன?

பகவானே! இந்த அனாதைகள் சத்துருக்கள் கையிலகப்பட்டுப் படும் பாட்டை அறிந்தும் இவ்விதம் அவர்களைக் கைவிடுதல் தகுமா? கருணாநிதியென்று பெயர் பெற்ற தங்களுக்கு இந்த ஜனங்களிடம் மட்டும் ஏன் கருணை உண்டாகவில்லை? பிரஜைகளைப் பாதுகாக்கவேண்டிய அரசனே கொடுமை செய்யும்போது அதைப் பற்றித் தங்களைத் தவிர வேறு யாரிடம் முறையிடுவது? தாங்களும் இவ்விதம் உபேட்சையாயிருந்தால், இந்த ஏழை ஜனங்களின் கதிதானென்ன?

கற்பழிக்கப்பட்ட பெண்மணிகள் ஜீவரத்தினத்தை இழந்த நாகம்போல் வாடி, தங்களுக்கு நேர்ந்த கதியை நினைத்து நினைத்து மனம் புண்ணாகி, 'எங்களை இவ்விதம் கொடுமை செய்த அசுரப் பதர்கள் அவர்கள் வம்சத்துடன் நிர்மூலமாகப் போகக் கடவது' என்று சபித்துவிட்டுத் தன் வால் மயிரில் ஒன்று போனாலும் அதே ஏக்கத்தினால் பிராணனை விடும் சவுரிமான்களைப்போல், தங்கள் உத்தம வஸ்துவை இழந்தபின் உயிர்வாழ இஷ்டமில்லாதவர்களாய்த் தீக்குளித்துத் தங்கள் பிராணனை விட்டார்கள். கற்பிற் சிறந்த உத்தமிகள் தங்கள் மானம் போனபின் ஒரு க்ஷணமேனும் உயிருடனிருக்க இஷ்டப்படுவார்களோ? ஒருகாலுமில்லை. இவர்களும் மரணத்தையடைந்தபின் லக்ஷ்மியானவள் தங்கியிருக்க வேறு இடமில்லாதவளாய், விஷ்ணுவின் மார்பைமட்டும் தனக்கிருப்பிடமாகக் கொண்டாள். மூதேவி மிகுந்த சந்தோஷத்துடன் உலகமெங்கும் தாண்டவமாடிக்கொண்டிருந்தாள்.

இங்கே ஒரு விஷயத்தைக் கவனிப்போம். கற்பென்றால் என்ன? ஒரு ஸ்திரீ ஒரு புருஷனைத் தன் கணவனாக வரித்து, அவனுக்குத் தன் சரீரத்தையே அர்ப்பணம் செய்து, அவனுடைய ஆத்மாவுடன் தன் ஆத்மாவை ஒன்றுபடுத்தி, அவனே தானாய், தானே அவனாய், இரண்டறக் கலந்து நிற்கும் ஓர் உன்னத நிலையே கற்பெனப்படுவது. கன்னிகாதானத்தின் பொருளும் இதுதான். அதாவது ஒரு கன்னிகையை ஒரு புருஷனுக்கு 'இவள் உனக்கே உரியவள்' என்று தத்தம் செய்து கொடுப்பது என்று அர்த்தமாகும். இவள் அவனுடையவள் என்பதற்கறிகுறியாக அவனால் இவள் கழுத்தில் ஓர் அடையாளம் கட்டப்படுகிறது. அதற்குத்தான் 'திருமங்கல்ய தாரணம்' என்று பெயர். ஆகவே ஒரு ஸ்திரீயை ஒரு புருஷனுக்கே அர்ப்பணம் செய்து, அவனுடைய ஆத்மாவுடன் இவளுடைய ஆத்மாவை ஒன்றுபடுத்துவதே விவாகத்தின் நோக்கமாகும். துரதிருஷ்டத்தினால் விவாகத்தின் பரிசுத்த நோக்கத்தைத் தற்காலத்தில் ஒருவரும் கவனிப்பதில்லை. விவாகமென்பது கேவலம் வியாபார நிலைமைக்கு வந்துவிட்டது.

விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீபுருஷர்கள் இருவரும், விவாகத்தின் நோக்கத்தையும் விவாகமானபின் தாங்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் சரிவர அறிந்தபின் செய்துவைக்கப்படும் விவாகமே சிரேஷ்டமானதாகும். அவ்விதமின்றி பாலியப் பருவத்திலேயே விவாகம் செய்து வைப்பதினால் உண்டாகும் கெடுதல்களும் துன்பங்களும் சகிக்க முடியாதவையாகும். மேலும் தற்காலத்தில் வரதட்சிணையென்னும் பெரும் பேயொன்று மனிதர்களின் கண்களைக் கௌவிக்கொண்டு பிடித்தாட்டுகிறது. பண ஆசையுடைய பலர் தங்கள் பிள்ளைகளின் நீடித்த க்ஷேமத்தையாவது சுகத்தையாவது கோராமல், யார் அதிகமான பணம் வரதட்சிணையாக—மாப்பிள்ளையின் விலையாகக்—கொடுக்கின்றார்களோ அவர்கள் எக்குடும்பத்தாராயினும், அவர்கள் பெண் எவ்வளவு அவலட்சணமாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அப்பெண்ணைத் தங்கள் பிள்ளைக்கு விவாகம் செய்து வைத்து விடுகின்றனர். அதனால் நற்குண நன்னடைக்கையுள்ள கல்விக்களஞ்சியமான ஓர் புருஷனுக்குப் பிடாரியைப் போலொத்த ஒருத்தி மனைவியாக வாழ்க்கைப்படுகிறாள். சுந்தராங்கியும் வித்தியாரத்தினமுமான ஒருத்திக்கு ஓர் கிராதகன் நாயகனாகிறான். இவ்விதம் புருஷனுக்கு மனைவியும் மனைவிக்குப் புருஷனும் அனுகுணமில்லாதவர்களாகி அதனால் பரஸ்பரம் வெறுப்பேற்பட்டு சதாகாலமும் சண்டையும் சச்சரவுமாகவே, பல குடும்பங்கள் கஷ்டத்தை அனுபவித்



துத் தவிக்கின்றன. கேவலம் சாமான்களையும் ஆடுமாடுகளையும் விற்பனை செய்வதுபோல் விவாகத்துக்கு வரதட்சிணை வாங்குவதென்ற அநாகரிக வழக்கத்தால் பெண்களைப் பெற்றவர்கள் எத்தனை கஷ்டமும் துக்கமும் அடைய நேரிடுகின்றது! லக்ஷாதிபதியான ஒரு பிரபுவுக்கு ஒரு பெண் இருந்தால் அவளை விவாகம் செய்து கொடுத்துப் புருஷன் வீட்டிற்கனுப்புவதற்குள் தன் சொத்தில் ஏறக்குறைய ஒரு பாதிக்கு மேல் இழக்கவேண்டியவனாகிறான். சொல்ப ஐவேஜியுள்ளவனுக்கு 2, 3 பெண்களிருந்தால் கேட்பானேன்! மாப்பிள்ளை வீட்டாரோ விவாகத்துக்கு ஆயிரக் கணக்காகப் பணம் வாங்கிக் கொண்டதுடன் நில்லாது, சாந்திக்குப் பணம், தீபாவளிக்குப் பணம் என்று அடிக்கடிப் பெண் வீட்டாரிடமிருந்து பணம் பறிக்கின்றார்களேயன்றி, அவர்களின் ஏழ்மைத்தனத்தையாவது அவர்கள் படுந்துன்பத்தையாவது கவனிக்கின்றார்களில்லை. இக்கொடிய வழக்கத்தினால் எத்தனையோ பிரபுக்கள் தங்கள் வீடு வாசல்களை இழந்து, ஆரண்யவாசஞ் செய்ய நேரிட்டிருக்கிறது. மேலும் ஏராளமான பணம் வருகிறதென்ற ஆசையினால் பெண் சிறு குழந்தையாகவே இருந்தாலும் பாதகமில்லையென்று விவாகஞ் செய்து கொள்ளுகின்றனர் சிலர். ஆகவே பால்யவிவாகம் ஏராளமாய் நடப்பதற்கும் வரதட்சிணை ஓர் முக்கியகாரணமாக இருக்கிறது.

ஸ்திரீ புருஷர்களுக்குத் தகுந்த வயது வந்த பின்புதான் விவாகம் செய்யவேண்டுமென்பது எதற்கென்றால் இந்திரியங்கள் பலப்பட்டு விவாகத்துக்குரிய யௌவன பருவத்தை யடைந்த பின் அவர்கள் சேர்க்கையடைந்து அதனால் திடகாத்திரர்களாகவும், நீடித்த தேகாரோக்கியமுள்ளவர்களாகவுமிருப்பதோடு, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையும் நல்ல பலமும் தீர்க்காயுளும் உள்ளதாய் அரோகியாய் விளங்கும் என்பதற்காகவே. அவ்விதமின்றித் தற்காலத்தில் அதிபால்யத்திலேயே விவாகம் செய்து வைக்கப்படுவதால் சதிபதிகள் பரஸ்பரம் இந்திரியங்கள் வலுவடைவதற்கு முந்தியே தேக சம்பந்தத்தை யடைந்து, அதனால் பலமிழந்து பலவித ரோகங்களுக்குள்ளாகி, 25, 30 வயதிலேயே கிழத்தன்மையை அடைகிறார்கள். பலர் அகால மரணத்துக்குள்ளாகிறார்கள். அநேகர் நடைபிணமாகத் திரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் சிறு வயதிலேயே யமனுலகையடைகின்றன. ஒருகால் தப்பிப் பிழைத்தாலும் சதா வியாதியினாலும் பலவீனத்தினாலும் துன்பப்படுகின்றன. தற்காலத்திய மனிதர்கள் முற்காலத்திலிருந்த நம் முன்னோர்களைப்போல நல்ல அறிவும், திடகாத்திரமும் பூர்ண ஆயுளும் உள்ளவர்களாயில்லாது, மிகுந்த பலவீனர்களாயும் அற்பாயுளுடையவர்களாயுமிருப்பதற்குக் காரணம் பால்ய விவாகமே. வரதட்சிணை, பால்ய விவாகம் என்ற இவ்விரண்டு வழக்கங்களாலும் விவாகத்தின் உன்னத நோக்கமே புறக்கணிக்கப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, கற்பு நிலையும், கிருகஸ்த தர்மமும் நம் பெண்மணிகளுக்குச் சரிவர போதிக்கப்படுவதில்லையாதலாலும், தாங்களாகவே அவைகளை நன்றாய் அறிந்துகொள்ளக்கூடிய கல்வியறிவும் அவர்களுக்கில்லையாதலாலும், பால்ய விவாகம், வரதட்சிணை இவைகளால் சதிபதிகளுக்குள் பரஸ்பரம் மானசீகமான சம்பந்தம் ஏற்படுவதே அபூர்வமாயிருப்பதாலும், நம் புராதன வழக்கத்தை வரவரக் கைவிட்டு, மேல் நாட்டாரின் நாகரிக ஆபாசங்களை நாம் அனுஷ்டித்துக்கொண்டிருப்பதாலும், நம் நாட்டின் இல்லற வாழ்வு மிகுந்த சீர்கேடடைந்துவிட்டது. கற்பைப்பற்றியும் விவாக தத்துவத்தைப்பற்றியும் நாம் சொல்லிக் கொண்டு வரும்போது பலர் நம்மைப் பரிகசிக்

கலாம். தற்கால நாகரிகஸ்தரில் பலர் பெண்மணிகளின் கற்பை விளையாட்டாகக் கருதலாம். ஆயினும், வாசகர்களே! உங்களுக்கொரு வார்த்தை. கற்பு என்பது விலையில்லா மாணிக்கம். ஒரு மங்கையின் கற்பைக் காப்பாற்றுவதற்காக ஓர் உலகத்தையே இழக்கலாம். நீங்கள் எவ்வளவு ஆபத்துக்களை யடைந்தாலும், எவ்வளவு கஷ்டங்களை யனுபவித்தபோதிலும் நம் பெண்மக்களின் கற்புக்கு மட்டும் பங்கம் நேரிடாதவாறு காப்பாற்றுங்கள். அவசியமானால் அதற்காக உங்கள் உயிரையும் கொடுக்க—இழக்கப்—பின்வாங்காதீர்கள். அதுவுமன்றி வாதட்சிணை, பால்ய விவாகம் இவ்விரண்டையும் அடியுடனொழித்துப் பெண்களைப் பெற்றோர்கள் க்ஷேமமாயும் சௌக்கியமாயுமிருக்கும்படிக்கும் சதிபதிகள் தக்க வயதை யடைந்த பின்பு விவாகம் செய்து வைக்கப்பட்டு சகல பாக்கியங்களுடனும் வாழ்ந்து நல்ல சந்ததிகளை உண்டுபண்ணும்படிக்கும், நம் நாட்டின் புராதன இல்லற தர்மம் தழைத்தோங்கிப் பரிமளிக்கும்படிக்கும் செய்யவேண்டியதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள். கேவலம் வாய்ப்பேச்சோடு மட்டும் நின்று விடாமல், அதற்காகத் தீவிரமாய் உழைத்து—உங்கள் உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் அதற்காகவே தத்தம் செய்து—பாழ்பட்டுக் கிடக்கும் இந்து சமூகத்தைச் சீர்படுத்தி, தர்மத்தை நிலைநாட்டும்படி உங்களெல்லோரையும் வணக்கமாய்ப் பிரார்த்திக்கின்றனம். இந்தியத் தாய்மார்களின் கடமையுமொன்றுளது. பெண் குழந்தைகளைப் பால்யமுதல் துரைசானிகளைப்போலப் பழக்கி அவர்களைச் சீரழித்துவிடாமல், நம் நாட்டின் புராதன மகிமையையும், கற்பின் மேன்மையையும், கிருகஸ்த தர்மத்தையும், புராண இதிகாசங்களையும் அவர்களுக்குப் போதித்து தமயந்தி, சாவித்திரி, சீதை, லீலாவதி முதலானவர்களைப்போல் கற்பரசிகளாக விளங்கும்படி செய்யவேண்டியது தாய்மார்களின் முக்கியகடமையாகும். குழந்தைகள் நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ இருப்பதற்குத் தாய்தந்தையர் அவர்களைப் பால்யத்தில் பழக்கிவரும் விதமே முக்கிய காரணமாயிருக்கிறது. அதை உத்தேசித்தே 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நம் பெண் குழந்தைகளைப் பால்யப் பருவத்திலேயே சரிவரப் பழக்கி, அவர்கள் நளாயினிகளாகவும் சாவித்திரிகளாகவும் சீதைகளாகவும் விளங்கும்படி செய்யுமாறு தாய்மார்களைக் கேட்டுக்கொள்ளுகின்றனம். பெண்மணிகளின் கற்பு என்னும் ஜோதியானது சுடர்விட்டுப் பிரகாசிக்கும்படி ஈசன் அருள் புரிவாராக.

(தொடரும்)

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.




# அன்பு.

(ஸ்ரீமதி குகப்ரியை.)

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு— குறள்.

அன்பு என்னும் பதம் சாதாரணமாக எல்லாருக்கும் தெரிந்தது தான். காற்றானது எப்படி உலகில் வியாபித்திருக்கிறதோ அதுபோலவே அன்பும் உலகமுழுவதும் வியாபித்திருக்கிறது. அன்பில்லாவிடில் உலகில் ஒரு காரியமும் நடவாது.

ஆனால் அன்பென்னும் பதத்தை சமயத்துக்கும் இடத்துக்கும் தக்கபடி வெவ்வேறு பெயர்களாற் குறிக்கிறோம். அன்பு என்பதையே நாம் கடவுளைக் குறிக்குமிடத்து பக்தி என்றும் ஜீவஜந்துக்களைக் குறிக்குமிடத்து ஜீவகாருண்யமென்றும் நண்பரைக் குறிக்குமிடத்து நேசம் என்றும், பெரியோரிடத்து வணக்கம் என்றும், சமமானவர்களிடத்துப் பிரீதி என்றும் பிரேமை என்றும் சொல்லுகிறோம்.

அன்பு என்பதில்லாவிடில் மனிதர் ஒரு நாளும் கடைத் தேறமுடியாது. அன்பானது மனிதரைக் கடவுளுக் கருகே அழைத்துச் செல்லும். அன்பின் ஒளியினாலேயே மனிதர்களுடைய மனது பரிசுத்தமடைகிறது.

ஒருவருக்காக நாம் ஒரு கஷ்டத்தையோ துன்பத்தையோ சகித்துக்கொள்ளும்படியாக நமக்கு ஏற்படும் பொறுமையானது அன்பின் மிகுதியினாலேயே.

கணவன் மனைவியைப் போஷிப்பதும் தாய் தந்தையர் மக்களை ஆதரிப்பதும் செல்வவந்தர் சுற்றத்தாரை ஆதரிப்பதும் அன்பினாலேயே.

அன்பே உலகிலுள்ள சகல சராசரங்களையும் ஒன்றுபடுத்துகிறது. இதனாலேயே 'அன்பின் வழியதுயிர்நிலை' என்றார்.

அன்பில்லாத மனிதர் எலும்பும் தசையுங் கூடிய வெறும் நடைபிணங்களே. அன்பி

வலிமையினாலேயே எவ்வளவோ அரிய பெரிய காரியங்களை எத்தனையோ பெயர் செய்து முடிக்கின்றனர். இவ்வன்பெனும் பேயினால் தூண்டப்பட்டுச் செய்யத்தகாதவற்றைச் செய்தவர்களுமுண்டு. அப்படி மனச்சாட்சியை மீறிச் செய்தவர்கள் பிறகு அடிக்கடி செய்து விட்டோமே, செய்துவிட்டோமே யென்று வாழ்நாள் முழுவதும்' துன்பப்பட்டுக்கொண்டே யிருப்பார்களேயொழியச் சற்றேனும் நிம்மதியாய் இருக்க இயலாது.

இந்த மனச்சாட்சி என்பதையே, கடவுள் நமது இருதயத்தி லிருக்கிறாரென்றும் ஒவ்வொரு தகாத காரியங்களையும் நம்மைச் செய்ய வொட்டாமல் தடுக்கிறாரென்றும் பெரியோர் கூறுவர்.

பொதுவாக நாம் எப்பொழுதும் உண்மையையே பேசவேண்டு மென்பதும், சொன்ன சொல்லைக் காப்பாற்றவேண்டுமென்பதும், பிறருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருக்கவேண்டு மென்பதும் பெரியோர் கருத்து.

சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல், அதாவது வாக்குறுதி என்பது ஒவ்வொருவரும் விலை மதிக்கமுடியாத பெரிய ஆபரணமாகும். இதனாற்றான் "கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக் கொடாமை கோடிபெறும்" என்றார் ஒளவையார்.

மகா கீர்த்திமான்களாகிய அரிச்சந்திரன், பீஷ்மர் முதலியவர்களுடைய புகழ் இன்னும் சுடர் விட்டுப் பிரகாசிப்பது எதனால் என்றால் அந்த வாக்குறுதி என்னும் அழியாச் செல்வத்தினாலன்றோ! இதைப் போலவே இன்னும் அனேகமகா வீரர்களும் சூரர்களும் அழியாப் புகழ்பெற்று விளங்குவதும் அந்த உண்மைக் கடவுளாலேயே அன்றோ!

ஆதலால் நாம் ஒவ்வொருவரும் "உண்மை கடைப்பிடி" என்ற அரும் வாக்கியத்தைக் கைவிடாதிருந்து பிறருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும், சொன்ன சொல் தவறாதவர்களாகவும் பிறரால் கௌரவிக்கப்படுகிறவர்களாகவும் உண்மைக் கடவுளுக்கு ஆலயமாகவும் இருக்கவேண்டுமென்பதே நம்மைப் படைத்துக் காத்து அழிக்கும் கர்த்தனுடைய கருத்து என்பதை அறிந்து அதன்படி நடக்க அவ்வுண்மைக் கடவுள் அருள் செய்வாராக.

# கதா வினோத மாலை.

(Pandit M. M. N. Aiyar.)

### கதை 2.

ஹிமவான் என்றொரு மலை உள்ளது; அது மலைகளுக்கெல்லாம் பெரிது; இரத்தினங்களுக்கெல்லாம் இருப்பிடம். இவன் சிவபெருமானுக்கு மனைவிகளான கௌரீ, கங்கை ஆகிய இருவருக்கும் தந்தையாயிருக்கும் பெருமை பொருந்தியவன். இவன் குலபர்வதங்களுக்கெல்லாம் சிறந்தவன். சூரிய பகவானாலும் காணமுடியாத பின்புறத்தை யுடையவன். எங்கும் கொண்டாடப்படுகின்றான் இவன். அவனுடைய தாழ்வரையின்மீது காஞ்சனபுரம் என்றொரு பட்டணம் இருக்கின்றது. அதைப் பார்த்தால் சூரியன் தன் கிரணங்களையெல்லாம் இவ்விடம் காப்பாக வைத்திருக்கின்றானோ வென்று தோன்றும். மேரு பர்வதத்தில் இந்திரன் வசிப்பதுபோல, அதில் ஜீமூதகேது என்று ஒரு வித்தியாதர சக்கரவர்த்தி வசித்து வந்தனன். அவனது அரண்மனையின் உத்தியானவனத்தில் அவனது மூதாதைகள் முதலாகக் கிடைத்ததான கற்பக விருட்சம் ஒன்று



இருந்தது. அவ்வரசனாகிய ஜீமூதகேது தேவசொரூபியாகிய அவ்விருட்சத்தை ஆராதித்து, அதன் அருளால் மன்மதனைப் போன்றவனும், தைரியமுள்ளவனும், கொடையாளியும், சர்வப்பிராணிகளிடமும் கருணையுள்ளவனும், பெற்றோருக்குத் தொண்டு செய்கின்றவனுமான ஜீமூதவாகனன் என்ற புதல்வனைப் பெற்றான்.

அவன் நாளடைவில் யௌவனப் பருவத்தை யடைந்தான். பின்பு தந்தையாகிய மன்னவன் நல்லோராலும் நற்குணமுள்ள மந்திரிகளாலும் ஏவப்பட்டு, தனது புதல்வனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினான். இவ்வாறு ஜீமூதவாகனன் இளவரசனாயிருக்கும்பொழுது ஹிதத்தை விரும்பும் தந்தை, மந்திரிகள் முதலியோர் அவனிடம் வந்து "இளவரசே! உனது உத்தியானவனத்தில் சகல விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியதும் யாவருக்கும் கிடைக்கக்கூடாததுமாகிய கற்பக விருட்சம் ஒன்று இருக்கின்றது. அதை நீ எப்பொழுதும் பூஜிக்கவேண்டும். இவ்விருட்சம் நம்மிடம் அனுகூலமாயிருக்குமாயின் இந்திரனும் நம்மைப் பீடிப்பதற்கு இயலாது. பிறர் எவ்விதம் பீடிக்க முடியும்?" என்று தெரிவித்தனர். ஜீமூதவாகனன் இதைக் கேட்டுத் தன் மனத்துள் பின்வருமாறு சிந்திக்கலாயினன்:—"அந்தோ! நமது மூதாதைகள் இத்தகைய கற்பகத் தருவைப் பெற்றும் சிறந்த பயனொன்றையும் பெற்றாரில்லை. கிருபணர்களாகிய அவர்கள் தமது காரியத்தையே கேட்டு நிறைவேற்றிக்கொண்டனர். அதனால் இருவரும் சிறுமையையே யடைந்தனர். ஆதலின் நான் இவ்விருட்சத்தினிடமிருந்து என் மனோரதத்தை நிறைவேற்றுவேன்." இவ்விதம் அம்மகாத்மா தீர்மானித்துத் தன் தந்தையின் சமீபத்தை யடைந்தான். வந்ததும் அவன் பல விதமான தொண்டுகளால் தந்தையை மகிழ்வித்தான். பிறகு தந்தை தனியாயிருக்கும்பொழுது அவன் "தந்தாய்! இப்பிறவிக்கடலில் சரீரம் முதல் சகல செல்வங்களும் நீர்க்குமிழி போல் நிலையில்லாதவை. சந்தியாகால மின்னலைப்போல நெடுநேரம் நிற்காதவளும் சஞ்சலையானவளுமாகிய லக்ஷ்மிதேவி ஒருபொழுதும் ஓரிடமும் நிலைத்து நிற்பதில்லை. பரோபகாரம் ஒன்றுதான் இப்பிறவிக்கடலில் எவ்வளவு யுகங்கள் சென்றாலும் சாட்சியாயிருக்கும் தர்மம், கீர்த்தி இவைகளை உண்டுபண்ணுகின்றது. இவைகளெல்லாம் தாங்கள் அறியாததன்றே! ஆதலின், அழியக்கூடிய செல்வங்களுக்காக நாம் இத்தகைய கற்பகத் தருவை ஏன் காப்பாற்றவேண்டும்? எந்த நமது மூதாதைகள் இத்தருவை நமது நமது என்றெண்ணிப் போற்றிக் காப்பாற்றி வந்தார்களோ, அவர்கள் இப்பொழுது எங்கே சென்றனர்? அவர்களுக்கும் இவ்விருட்சத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கின்றதா? ஆனதால் தங்கள் உத்தரவின் பேரில் நான் இத்தருவைப் பரோபகாரமென்னும் பயனைக் குறித்து ஆராதிக்க விரும்புகிறேன்" என்றான். உடனே ஜீமூதகேது "புதல்வ! நினது விருப்பப்படி செய்" என்று சொன்னான். பின்பு ஜீமூதவாகனன் கற்பகத் தருவிடஞ் சென்று, "தேவனே! நீர் எனது முன்னோர்களின் மனோரதங்கள் யாவற்றையும் நிறைவேற்றினீர். அவ்வாறே எனது விருப்பம் ஒன்றையும் நிறைவேற்ற வேண்டுகிறேன். பூமி முழுவதும் தரித்திரர்களில்லாமல் செய்ய வேண்டுமென்பதே என் விருப்பம். ஆதலின், நீர் சென்று உலகத்தோரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுகிறேன். உமக்கு மங்கள முண்டாகட்டும் என்றான்" இவ்வாறு அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு ஜீமூதவாகனன் சொல்லும்பொழுது "உனது வேண்டுகோளுக் கிணங்கி இதோ நான் செல்லுகிறேன்" என்று அவ்விருட்சத்தினின்றும் ஒரு வாக்கு உண்டாயிற்று. உடனே கற்பகத் தரு அங்கிருந்து கிளம்பி சுவர்க்கலோகஞ் சென்று பூமியெங்

கும் பொன் மாரி பொழிந்தது. அதனால் பூமியில் தரித்திரன் ஒருவனுமில்லை. பின்பு அச்செய்கையால் ஜீமூதவாகனனுடைய கீர்த்தி மூவ்வுலகங்களிலும் பரவிற்று. அப்பால் அவன் பங்காளிகள் யாவரும் துவேஷத்தினால் பொறுமை கொண்டு கற்பகத் தருவில்லாமையால் ஜீமூதவாகனனையும் அவன் தந்தையையும் எளிதில் வென்றுவிடலாமென்று தீர்மானித்து, யாவரும் ஒன்றாகச் சேர்ந்து, அவனுடைய ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்வதற்காக யுத்தஞ் செய்யத் தொடங்கினர். ஜீமூதவாகனன் தந்தையை நோக்கி, "எந்தையே! தாங்கள் ஆயுதமேந்தி யுத்தஞ் செய்தால் தங்களை எதிர்ப்பதற்கு எவராலாகும்? ஆனால் கார்ப்பண்யமற்ற எவன்தான் விரைவில் அழியக்கூடிய இச்சரீரத்திற்காகப் பந்துக்களைக் கொன்று ராஜ்யத்தை விரும்புவான்? ஆனதால் நமக்கு ராஜ்யமெதற்கு? நாம் வேறு எங்கேயாவது சென்று தர்மத்தைச் செய்துகொண்டிருப்போம். அதனால் இம்மையிலும் மறுமையிலும் நன்மையுண்டாகும். கிருபணர்களான பந்துக்கள் ராஜ்யத்தை யடைந்து களிக்கட்டும்" என்று சொன்னான். அதற்கு ஜீமூதகேது "மைந்தனே! நான் உனக்காகவே ராஜ்யத்தை விரும்புகிறேன். நீ கருணையினால் ராஜ்யத்தை விடும்பட்சத்தில் மூப்படைந்த எனக்கு ராஜ்யமெதற்கு? ஆதலின் உன் விருப்பப்படி செய்யலாம்" என்றான். உடனே ஜீமூதவாகனன் ராஜ்யத்தை விட்டுவிட்டுத் தன் பெற்றோருடன் மலய பர்வதத்திற்குச் சென்றான். அங்கே அவன் ஒரு குடிசை ஏற்படுத்திக்கொண்டு தன் பெற்றோர்க்குச் சிச்ரூஷை செய்துகொண்டு வந்தான். ஒரு நாள் ஆத்ரேயன் என்னும் நண்பனிடம் "நண்ப! இளமையே காமத்தின் இருப்பிடம் என்று யான் அறிவேன். அது நற்பாவங்களைக் கெடுக்குந் தன்மையது என்று அறியாதவனல்ல. இது செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது என்று அறியவொட்டாது செய்வதும் அதுதான் என்று அறியாதவர் உலகில் யார் இருக்கிறார்கள்? இந்திரியங்களின் வசப்பட்ட இளமை இகழ்ச்சிக்குரியதாயினும் தாய் தந்தையருக்குச் சிச்ரூஷை செய்ய அவ்விளமையிருப்பது பாராட்டத்தக்கதேயாகும்" என்றான். அதற்கு அவன் "எவ்வளவு நாட்கள் பெற்றோர்க்குத் தொண்டுசெய்து கஷ்டப்படுவது? இனியேனும் ராஜ்யத்தை யடைந்து சுகமடைவாய்" என்றான். அதற்கு அவன் "நண்பா! நீ பேசுவது அழகன்று. தன் தந்தையிடம் நிற்பதைக் காட்டிலும் அரசு வீற்றிருத்தல் அழகாகுமா? பெற்றோரின் பாதாரவிந்தங்களைச் சேவிப்பதைப்போன்ற சுகம் ராஜசபையில் கிடைக்குமா? தந்தை உண்டு மிஞ்சிய உணவைப் புசிப்பதுபோன்ற சுகானுபவம் மூன்று உலகங்களை ஆண்டாலும் கிடைக்குமா? தந்தையை விட்டுத் தனியரசு கொள்வது மிகத் துன்பமன்றோ?" என்று சொன்னான். ஆத்ரேயன் அதைக் கேட்டு, "நண்பா! உனக்குப் பெற்றோரிடமுள்ள பக்தி சிலாகித்தற்குரியது; இதோ பார் தபோவனத்தை! இங்கு இலையடர்ந்த மரங்கள் மிகுதியாயிருக்கின்றன. ஹோமத்தீயின் வாசனை மிகுந்திருக்கின்றது. மான் கூட்டங்கள் சிறிதும் பயமில்லாமல் திரிகின்றன. இது உண்மையில் தபோவனமே" என்றான். அதற்கு ஜீமூதவாகனன், "ஹா! மித்திரா! நீ கூறியது உண்மையே; இது தபோவனமென்பதில் ஐயமில்லை. ஏனெனில், இம்மரங்களின் பட்டைகள் உடையின் பொருட்டு மிருதுவாக வெட்டப்பட்டிருக்கின்றன; அதனால் வெட்டினவர்களின் அனுதாபம் வெளியாகிறது. இவ்வோடைகளின் நீர் ஆகாயம் போல் நிர்மலமாயிருக்கின்றது. அன்றியும் இவ்வோடைகளில் உடைந்த பழைய கமண்டலங்கள் நிறைந்திருக்கின்றன. இங்குமங்கும் சிறுவர் கட்டியறுந்த முஞ்சிக் கயிறு



கள் விழுந்து கிடக்கின்றன. நாள்தோறும் கேட்டிருந்த கிளிகள் இனிமையாக ஸாமகானம் செய்கின்றன. அன்றியும், முனிவர்கள் இங்கு சந்தேகமான வேதவாக்கியங்களை விசாரஞ்செய்து கொண்டிருக்கின்றனர். சிறுவர்கள் வேதமோதிக்கொண்டு சமித்து, தர்ப்பை இவற்றைக் கொண்டு வருகின்றனர். முனிகன்னிகைகள் இளங்கன்றுகள் நிறைந்த பாத்திகளுக்குக் குடங்களால் நீரை மொண்டுவந்து கொட்டுகின்றனர். இங்குள்ள விருட்சங்கள், வண்டுகளின் ஒலியால் முகமன் கூறியும், பழங்களின் பளுவால் வணங்கிய கிளைகளால் நமஸ்கரித்தும், மலர்களைப் பொழிந்து அர்க்கியம் கொடுத்தும் விருந்தினரை உபசரிப்பதற்குப் பழக்கிவைக்கப்பட்டன போற் காணப்படுகின்றன. ஆதலின் இத் தபோவனம் தெய்வத்தன்மை பொருந்தியதே" என்றான். இவ்வாறு இருவரும் சமீபத்தில் கௌரீதேவியின் ஆலயத்தைக்கண்டு அங்கே சென்றனர். அவர்கள் அவ்விடம் இனிமையாக வீணாகானஞ் செய்கின்றவளும், கௌரீதேவியைப் பூஜிப்பதற்காக வந்தவளும், தோழிமார்களால் சூழப்பட்டவளும், இவளது கண்களைப் பார்த்து வெட்கத்தினால் போல் நிச்சலமான மான்களால் கேட்கப்பட்ட பாட்டையுடையவளும், செவிவரையில் நீண்ட கண்களையுடையவளும், கூறிய முனையுள்ள பற்களையுடையவளும், கோவைக் கனிபோன்ற அதரத்தை யுடையவளும், சர்வாங்க சுந்தரியுமான ஓர் கன்னிகையைக் கண்டனர். ஜீமூதவாகனனது மனம் உடனே அவளிடஞ் சென்றது. அவளும் இவனைக்கண்டு அடங்காக் காதல் கொண்டாள். பிறகு ஜீமூதவாகனன் அவள் தோழியைப் பார்த்து, 'பத்ரே! உனது தோழியின் பெருமை பொருந்திய பெயர் யாது? எந்த வம்சத்தை அவள் விளங்கச் செய்கிறாள்?' என்று வினவ, அவள், 'ஐயா! இவளுக்கு மலயவதி யென்று பெயர்; மித்திராவசுவின் சகோதரி; சித்தராஜன் பெண்' என்று சொல்லி, அவனருகேயிருந்த ஆத்ரேயனைக் கொண்டு ஜீமூதவாகனன் குலகோத்திரங்களை விசாரித்துத் தெரிந்து கொண்டாள். பிறகு அவள் மலயவதியைப் பார்த்து 'தோழி! வித்தியாதரர் தலைவராகிய இவருக்கு நீ ஏன் மரியாதை செய்யவில்லை? இந்த அதிதியானவர் உலகத்தாரால் பூஜிக்கத் தக்கவரன்றோ?' என்று சொல்லவே, அவள் வெட்கத்தால் தலைகுனிந்து மௌனமாயிருந்தனள். பிறகு பாங்கி, 'என் தோழி வெட்கப்படுகிறாள். நானே மரியாதை செய்கிறேன்' என்று சொல்லி, அர்க்கியம் கொடுத்து, ஓர் பூமாலையையும் கொடுத்தனள். உடனே ஜீமூதவாகனன் அடங்காக் காதல் கொண்டு, அம்மாலையை மலயவதியின் கழுத்தில் போட்டான். அவளும் அதைத் திரும்பவும் அவனது கழுத்தில் போட்டாள். இவ்வாறு இருவரும் காந்தருவ விவாகம் செய்துகொண்டிருக்கும்பொழுது, சேடி ஒருவள் அவ்விடம் வந்து "ராஜபுத்திரி! உமது தாயார் உம்மை அழைத்து வாச் சொன்னார். ஆனதால் நீர் விரைவாக வாரும்!" என்றாள்.

மலயவதி அதைக் கேட்டதும் தனது பார்வையை ஜீமூதவாகனனிடமிருந்து மகாப்பிரயாசைப்பட்டுத் திருப்பித் தன்னிருப்பிடஞ் சென்றாள். மலயவதியிடமே பற்றிய மனமுடைய ஜீமூதவாகனனும் தனது ஆசிரமத்தை யடைந்தான். பின்பு மலயவதி தனது காதலன் பிரிவினால் பீடிக்கப்பட்டு, தன் தாயைப் பார்த்துவிட்டு, படுக்கையை யடைந்து, அதில் விழுந்தாள். அப்பால் மலயவதி காமத்தீயின் தாபத்தால் வெந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். தோழிகள் சந்தனமூலைகளையும் தாமரைத் தண்டுகளையும் கசக்கிச் சாற்றைப் பூசித் தாமரை இலைகளால் வீசினார்கள். ஆயினும் அவள் சிறிதும் சுகப்படவில்லை. பகற் பொழுது சென்றது. சந்திரனும் உதித்தான். மலயவதி

யோ காமத் தீயால் சூழப்பட்டு உயிரில் ஆசையற்றவளானாள். வெட்கத்தினால் தோழியைத் தூதனுப்புவதற்கும் முடியவில்லை. இரவை சிரமப்பட்டு ஒரு யுகமாகப் போக்கினாள். ஜீமூதவாகனனும் அவளது பிரிவைப் பொறாமல் மன்மதன் வசமாயினன். அவனது சரீரமுழுதும் வெளுத்தது. அவன் இரவைப் பிரயாசைப்பட்டுப் போக்கினான். அவன் விடியற்காலம் எழுந்து உற்சாகமடைந்து கௌரியின் ஆலயத்திற்குச் சென்றான். அவ்விடம் அவனை அவன் தோழனாகிய முனிகுமாரன வந்து தேற்றினான். அதற்குள் காமத்தீயால் பரவசையாயும், பிரிவைப்பொறாதவளாயுமுள்ள மலயவதி வீட்டிலிருந்து ரகசியமாக வெளிக்கிளம்பி, பிராணனை விடுவதற்காக நிர்ஜனமான அவ்விடம் வந்தாள். அவள், மரத்தினால் மறைந்திருக்கும் காதலனைக் காணாமல் கண்ணீர் பெருகக் கௌரீதேவியை நோக்கி, 'ஹே! தேவியே! தமதருளால் இப்பிறவியில் ஜீமூதவாகனன் எனக்குக் கணவனாகக் கிடைக்காவிடினும், மறு பிறவியிலேனும் அவரே எனக்குக் கணவனாகக் கிடைக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும்!' என்று சொல்லி, அப்பொழுது தனது சேலையின் தலைப்பினால் அசோகமரத்தின் கிளையில், அந்த தேவியின் முன்னிலையில் 'ஐயோ' பிராணநாதா! ஜீமூதவாகன! உலகின் உமது கருணை பரவாதவிடமில்லையே! நீர் என்னை மட்டும் ஏன் காக்கவில்லை?' என்று கூறி, தன் கழுத்தில் கட்டிக் கொள்ளத் தொடங்கினாள். அதற்குள் ஆகாசவாணி, 'பெண்ணே! பிடிவாதம் வேண்டாம். வித்தியாதர சக்கரவர்த்தியாகிய ஜீமூதவாகனன் உனக்குக் கணவனாகப் போகிறான்' என்று உரக்க கூறிற்று. ஜீமூதவாகனன் ஆகாசவாணி கூறியதைக் கேட்டுத் தோழனுடன் தன் காதலி இருக்குமிடம் வந்து சேர்ந்தான். முனிகுமாரன் 'இவர்தான் தேவியால் உமக்கு வரனாக அளிக்கப்பட்டார்' என்று மலயவதியிடம் சொல்லும்பொழுது, ஜீமூதவாகனன் தன் கையாலேயே அவளது கழுத்திலிருந்து முடிச்சை யவிழ்த்து விடுவித்தான். பிறகு அங்கு மலர் கொய்து கொண்டிருந்த தோழி ஒருத்தி, அதைக்கண்டு, மகிழ்ந்து, அங்குவந்து, வெட்கத்தால் பூமியைக் கீறிக்கொண்டிருக்கும் மலயவதியைப் பார்த்தாள். பின்பு தோழி அவளைப் பார்த்து "சகி! தெய்வாதீனமாய் உனது விருப்பம் நிறைவேறிற்று. இப்பொழுது உமது தந்தையாகிய விசுவாவசு மன்னவர், உமது சகோதரராகிய மித்திராவசுவிடம் 'புதல்வ! உலகால் கொண்டாடத் தக்கவனும், கற்பகத்தருவையே கொடுத்தவனும், வித்தியாதரத் தலைவன் புதல்வனுமாகிய ஜீமூதவாகனன் இவ்விடம் வந்திருக்கிறான். அவனே யாவரினும் சிறந்தவனாயிருக்கிறான். அத்தகைய வரன் கிடைப்பதரிது. ஆதலின், மலயவதியை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து, அவனைப் பூஜிக்க வேண்டும், என்று சொன்னார். மித்திராவசுவும் சரியென்று சொல்லி, அவனைத் தேடிக்கொண்டு அவனுடைய ஆசிரமத்திற்குப் போயிருக்கிறார். சீக்கிரத்திலேயே உமக்கு விவாகம் முடியுமென்று தெரிகிறது. ஆனதால் நீர் உமது வீட்டிற்குச் செல்லுக. இம்மகாத்மாவும் அவரது ஆசிரமத்திற்குப் போகட்டும்" என்று சொன்னாள். இதைக் கேட்டு மலயவதி மெதுவாகத் தன்னிருப்பிடஞ் சென்றாள். ஜீமூதவாகனனும் விரைவாகவே தனது பரணசாலைக்குச் சென்றான். அவ்விடம் அவனை மித்திராவசு மலயவதியை மணக்கும்படி வேண்டினான். ஜீமூதவாகனன் அதைக் கேட்டுத் தனது குலம், கோத்திரம் முதலியவற்றைத் தெரிவித்து, அவ்விவாகத்திற் கிணங்கினான். அப்பால் மித்திராவசு மகிழ்ந்து இவ்விஷயத்தை அவன் பெற்றோர்க்கு அறிவித்துவிட்டுத் தன் வீடுவந்து, பெற்றோர்க்கு இவ்விஷயத்தைத் தெரிவித்து



மகிழ்வித்தான். அன்றையதினமே ஜீமூதவாகனனை உறவினருடன் தன் வீட்டுக்கு வரவழைத்தான். பின்னர் அன்று சுபமுகூர்த்தத்தில் ஜீமூதவாகனனுக்கும் மலயவதிக்கும் விவாகம் இனிது நடைபெற்றது. அப்பால் ஜீமூதவாகனன் மலயவதியுடன் அங்கேயே சொற்பகாலம் வசித்தான்.

ஒரு சமயம் சந்தோஷ சித்தனாகிய ஜீமூதவாகனன் மித்திராவசுவுடன் மலய பர்வதத்தில் அலைந்துகொண்டு சமுத்திரக் கரையை யடைந்தான். அங்கு எலும்புகள் மலைபோல் குவிந்திருந்ததைக் கண்டு மித்திராவசுவை நோக்கி "இவ்வெலும்புகள் யாருடையது?" என்று வினவினான். பின்பு மைத்துனனாகிய மித்திராவசு "நண்ப! இவ்விருத்தாந்தத்தைச் சுருக்கிச் சொல்லுகிறேன் கேள்" என்று சொல்லத் தொடங்கினான்.

"முன்னொரு காலத்தில் பாம்புகளுக்குத் தாயாகிய கத்ரு என்பவள் கருடனுக்குத் தாயும் சக்களத்தியுமாகிய வினதையைக் கபடமாகப் பந்தயத்தில் ஜயித்து அடிமையாகச் செய்துகொண்டாள். அந்த வைரத்தினால் கருடன் தன் தாயை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தும் பாதாளத்திற்குச் சென்று கத்ருவின் புதல்வர்களான பாம்புகளை எப்பொழுதும் கொல்லத் தொடங்கினான். இவ்வாறு பல பாம்புகள் கொல்லப்பட்டதும், சர்ப்பங்களுக்குத் தலைவனாகிய வாசுகி தன் குலமே விரைவில் அழிந்துவிடுமென்று தீர்மானித்து கருடனைப் பார்த்து வணங்கி "பறவைகளுக்கரசே! நான் இந்த தெற்கு சமுத்திரக்கரையில் தினந்தோறும் ஒவ்வொரு பாம்பை அனுப்பி விடுகிறேன். தாங்கள் தயவுசெய்து ஒருபொழுதும் பாதாளத்திற்கு வரவேண்டாம். பாம்புகள் யாவற்றையும் ஏக காலத்தில் கொன்றுவிடுவதனால் உமக்குத்தான் பயனென்ன?" என்று வேண்டிக்கொண்டான். கருடனும் 'அவ்வாறே யாகட்டும்' என்று சம்மதித்தான். அது முதல் கருடன் ஒவ்வொரு நாளும் இம் மணல்வெளியில் வாசுகி அனுப்பும் பாம்பைப் புசித்து வருகின்றான். அவனால் புசிக்கப்பட்ட பாம்புகளின் எலும்புகளே இவ்விடம் மலையாகக் குவிந்திருக்கின்றன." இவ்வாறு மித்திராவசு சொன்னதைக் கேட்டு ஜீமூதவாகனன் மிகவும் துக்கித்து "நண்பா! அந்த வாசுகியின் பெருமை ஆச்சரியகரமாயிருக்கின்றது. ஏனெனில் அவன் தன் கையினாலேயே தனது பிரஜைகளைப் பகைவனுக்குப் பலியாகக் கொடுக்கிறானல்லவா? அவன் வீரியமற்றவன். அவனுக்கு இரண்டாயிரம் நாக்குகள் இருந்தும் ஒரு நாவாலாவது 'ஏ கருட! நீர் என்னை முதலில் புசியும்' என்று சொல்ல வல்லவனாகவில்லையல்லவா? அவன் தனது குல நாசத்தின் பொருட்டுக் கருடனை எவ்விதம் வேண்டினான்? கருடன் கசியப புத்திரனாயும், சுத்த வீரனாயும், விஷ்ணுவை வகிப்பவனாயும் இருந்தும் ஏன் இத்தகைய பாப காரியத்தைச் செய்கிறான்? மோகத்தின் மகிமையை என்னென்று சொல்வது?" என்று சொல்லி "நான் சாரமற்ற இவ்வுடலைக் கொடுத்து இன்று ஒரு பாம்பின் உயிரையேனும் காப்பாற்றுவேன்" என்று மனதில் தீர்மானித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது விசுவாவசுவின் ஏவலாள் ஒருவன் அவர்களை அழைப்பதற்காக அங்கு வந்தான். ஜீமூதவாகனன் மித்திராவசுவைப் பார்த்து 'நீ முன்னே போ; நான் பிந்திவருகிறேன்' என்று சொல்லியனுப்பிவிட்டு, அவன் அங்கேயே இருந்தான். மித்திராவசு சென்றபிறகு ஜீமூதவாகனன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு யாரோ பரிதாபமாகக் கதறும் சத்தத்தைக் கேட்டான். அவன் சிறிது தூரஞ் சென்றதும், அழகான சரீரமுடைய வாலிபனொருவன் ராஜபடனால் பின் தொடரப்பட்டு, உயரமான கற்பாறையின் சமீபத்திற்கு வந்துகொண்டிருப்பதையும்,

அவன், அழுகின்றவளும், மூப்படைந்தவளுமான தன் தாயை நல்ல வார்த்தைகளால் திரும்பச் செய்வதையும் பார்த்தான். பின்பு கருணை மிகுந்த மனமுடைய ஜீமூதவாகனன் இவன் யாரென்று அறியவிருப்பங் கொண்டு மறைந்து உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது கிழவியாகிய அந்த ஸ்திரீ மிகவும் துக்கத்தினால் வருந்திப் புலம்பலாயினள்.

"ஐயோ! சங்கசூட! ஐயோ! நற்குணங்கள் நிறைந்தவனே! நீ குலத்திற்கு ஒரே பிள்ளையாயிற்றே! உன்னை நான் மறுபடியும் எப்பொழுது காண்பேன்? குழந்தாய்! மூப்படைந்த உனது தந்தை உனது முகசந்திரனைக் காணாமல் எவ்விதம் வாழ்வார்? உனது தந்தை உனது சரீரத்தில் சூரிய கிரணம் பட்டாலும் பொறுக்கமாட்டாரே! கருடன் உன்னைக் கொத்தும் துன்பத்தை உன் தந்தை எவ்விதம் பொறுப்பார்? பாதாள லோகத்தில் பாம்புகள் மிகுதியாயிருந்தும் நமது அரசனான வாசுகி, எனக்கு ஒரே பிள்ளையாகிய உன்னைத் தானா பலிக்கு ஏற்படுத்தவேண்டும்?"

இவ்வாறு புலம்பும் அந்த ஸ்திரீயை அவளது புதல்வன், "தாயே! நீர் இது இராஜாக்ஞை என்பதைச் சிறிதும் யோசிக்கவில்லை. துன்பமடைந்த என்னை நீர் மிகவும் வருத்துகிறீர். ஆனதால் நீர் வீட்டிற்கு செல்லும். இதுவே உமக்குக் கடைசியான நமஸ்காரம். கருடன் வரும் நேரமாகி விட்டது" என்று சொன்னான். அதைக்கேட்டு அவள் "ஐயோ! நான் என்ன செய்வேன்? இப்பொழுது எனது புதல்வனை யார் காப்பாற்றப் போகின்றனர்?" என்று சொல்லி, நாலா பக்கமும் பார்த்துக்கொண்டு அழத்தொடங்கினாள். ஜீமூதவாசனன், இவற்றைக் கேட்டு மிகவும் கருணைகொண்டு, "அந்தோ! இவன் சங்கசூடன் என்னும் சர்ப்பம்; வாசுகி இவனை கருடனுடைய ஆகாரத்திற்காக அனுப்பியிருக்கிறான்; இவள் அன்பால் பின் தொடர்ந்த தாயாவள்; இவளுக்கு இவன் ஒருவனே புத்திரன்; ஆனதால் இவள் மிகவும் வருந்துகிறாள். ஆதலின், துன்பமடைந்த இவனை அழியக்கூடிய எனது சரீரத்தினால் காப்பாற்றாவிடில், எனது பிறவி வீணேயாகும்" என்று தீர்மானித்து, அவர்களருகே சென்றான். பின்பு அவன் அவளைப் பார்த்து "சர்ப்பங்களின் தாயே! நான் உமது புதல்வனைக் காப்பாற்றுகிறேன், நீர் அழவேண்டாம்" என்று சொன்னான். அவள் அவனைப் பார்த்து கருடனென்று நினைத்துப் பயத்துடன் "ஏ, கருடா! என்னைப் புசியும்" என்று சொன்னாள். பிறகு சங்கசூடன் "தாயே! இவர் கருடனென்று பயம் வேண்டாம். இவர் சந்திரனைப் போல நம்மைக் களிக்கச் செய்கின்றார். பயத்தை உண்டுபண்ணும் கருடனென்று இவரை நினைக்கவேண்டாம்" என்றான். பிறகு ஜீமூதவாகனன் அவளைப் பார்த்து "அம்மா! நான் ஒரு வித்தியாதரன்; உமது புதல்வனை ரட்சிக்கவே வந்திருக்கிறேன்; எனது சரீரத்தைப் பசியுள்ள கருடனுக்குக் கொடுக்கிறேன். நீர் உமது புத்திரனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்லும்" என்று சொன்னான். கிழவியாகிய அவள் அதைக் கேட்டு "நீர் இவ்வாறு சொல்லத்தகாது; நீரே எனக்குப் புத்திரனைக் காட்டிலும் பிரியமானவர்" என, ஜீமூதவாகனன் "நீர் எனது விருப்பத்தை அவசியம் நிறைவேற்றவேண்டும்" என்றான். பிறகு சங்கசூடன் அவனைப் பார்த்து "பரோபகாரியே! உம்மிடம் கருணை அதிகமாயிருக்கிறது. நான் உமது சரீரத்தைக் கொண்டு எனது சரீரத்தை ரட்சிக்க விருப்பவில்லை. ரத்தினங்களைச் செலவு செய்து கற்களைக் காப்பவனும் உண்டோ! என்னைப்போல் தன்னைமட்டும் காப்பாற்றிக் கொள்பவர்கள் உலகில் மிகுதியாயிருக்கின்றனர். தங்களைப்போன்ற பரோபகாரிகள் மிகவும்



அருமையாகவே இருக்கின்றனர். களங்கம், சந்திர பிம்பத்தைக் கெடுப்பதுபோல, நான் சுத்தமான எனது குலத்தைக் கெடுப்பதற்கு விரும்பவில்லை" என்று தடுத்துச் சொல்லிவிட்டுத் தன் தாயாரைப் பார்த்து "நீர் இக்காட்டைவிட்டுச் செல்லும். இங்கே பலிபீடம் காணப்படுவதைப் பார்க்கவில்லையா என்ன? இப்பொழுது நான் சமுத்திரக் கரையை அடைந்து கோகர்ணர் என்னும் தெய்வத்தை நமஸ்கரித்து விரைவாகவே வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு கோகர்ணரை வணங்குவதற்காகச் சென்றான். அதற்கு ஜீமூதவாகனன், 'இப்பொழுது கருடன் வந்தால் நமது விருப்பம் நிறைவேறும்' என்று எண்ணிக் கொண்டிருந்தான். பிறகு ஓர் புயல் காற்று வீசவே, அவன் கருடன் வருகிறானென்று நினைத்துத் தன் உயிரைக் கொடுத்து சங்கசூடனைக் காப்பதற்காக பலி பீடத்தில் ஏறினான். அவன் ஏறினவுடன் கருடன் அவனை மூக்கினால் விரைவாகத் தூக்கிச் சென்றான். அப்பொழுது அவன், "நான் இப்பொழுது எனது சரீரத்தைக் கொடுத்து சர்ப்பத்தைக் காப்பாற்றினேன்; இவ்வாறு பிறவிகள் தோறும் எனது சரீரம் பரோபகாரத்தின் பொருட்டே ஆகவேண்டும்" என்று நினைத்தான். பிறகு கருடன், அவனைக் கொத்திக் கொண்டு போய் மலயபருவதத்தின் சிகரத்தில் வைத்துப் புசிக்கத் தொடங்கினான். அப்பொழுது ஜீமூதவாகனன் மீது ஆகாயத்தினின்றும் மலர் மாரி பொழிந்தது. துந்துபி வாத்தியங்கள் முழங்கின. இதற்கிடையில் இரத்தத்தால் நனைந்த அவனது சூடாரத்தினம் மலயவதியின் முன்பு விழுந்தது. மலயவதி அதைக் கண்டு மலைத்து, மாமனார் முதலியோரிடம் அதைக் காட்டினாள். அவர்கள் தம் புதல்வனின் சூடாமணியைக் கண்டுப் பெருங்கவலையை அடைந்தனர். பிறகு ஜீமூதகேதுவும் அவர் மனைவியும் தமது வித்தையின் மகிமையால் நடந்த விஷயத்தை அறிந்து மருமகளான மலயவதியுடன் கருடனிருக்கு மிடத்திற்குக் கிளம்பினர். அதற்குள் சங்கசூடன் கோகர்ணேசுவரரை வணங்கி விட்டு அங்கே பலிபீடத்தில் உதிரம் பெருகியிருப்பதைக் கண்டு "ஐயோ! நான் மகாபாபியானேன்! கிருபாளுவாகிய அம்மகாத்மா எனக்காகத் தன் சரீரத்தைக் கொடுத்து விட்டார்; கருடன் அவரை எங்கே கொண்டு போனானோ? ஒருசமயம் அவர் உயிரோடிருந்தால் எனக்கு அபகீர்த்தி வாராது நான் விரைவாகச் சென்று அவரை மீட்பேன்" என்று கண்ணீர் பெருகக் கதறிக் கொண்டு இரத்தம் சிந்தியிருந்த வழியைத் தொடர்ந்து சென்றான்.

இதுநிற்க. கருடன் ஜீமூதவாகனனைப் புசிக்கும் பொழுது அவன் சந்தோஷமுள்ளவனாகவே இருப்பது கண்டு, "அந்தோ! இம்மகாத்மா யாரோ? நான் குத்திக் குத்தித் தின்றாலும் இவன் சந்தோஷிக்கிறான்; இவன் மிகவும் கருணையுடையவனாகக் காணப்படுகிறான்; ஆனதால் இவன் சர்ப்பமன்று; இவன் ஒரு மகாபுருஷன்; இவனை இனி நான் புசிக்கமாட்டேன்" என்று யோசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஜீமூதவாகனன் கருடனைப் பார்த்து "பட்சிராஜனே! நீர் ஏன் என்னைப் புசிக்கவில்லை? இன்னும் என் சரீரத்தில் மாமிசம் இருக்கின்றது; உமது பசியும் தீர்ந்ததாகத் தெரியவில்லை; ஆகையால் இன்னும் என்னைப் புசியும்" என்று சொன்னான். கருடன் அதைக் கேட்டு "மகாத்மாவே! நீர் சர்ப்பமன்று; நீர் யார்?" என்று வினவ அவன் "நான் யாராயிருந்தால் என்ன? உமது காரியத்தைப் பாரும்" என்றான். அதற்குள் சங்கசூடன் தூரத்திலிருந்து "ஏ கருடா! நீர் வீணே பாப காரியத்தைச் செய்யவேண்டாம். இவர் சர்ப்பமன்று; சர்ப்பமாகிய நான்

இதோ இருக்கிறேன். இதோ என் முகத்தில் இரண்டு நாக்கையும் படத்தையும் பாரும். இன்னும் தடுமாறவேண்டாம்'' என்று சொல்லி விரைவாகவே கருடன் இருக்குமிடம் சென்றான். அதற்குள் ஜீமூதவாகனனது மனைவியும் பெற்றோர்களும் அவ்விடம் வந்து சேர்ந்தனர். அவனது பெற்றோர் தமது புதல்வன் சரீரத்தில் இரத்தம் பெருகுவதைக் கண்டு "ஐயோ! குழந்தாய்! ஜீமூதவாகனா! பிறர்பொருட்டு உயிரைக் கொடுத்தவனே! இனி நாங்கள் என்ன செய்வோம்?'' என்று மிகவும் கதறினார்கள். அன்றியும் அவர்கள் "ஏ கருடா! நீயும் ஆலோசிக்காமல் இவ்வாறு செய்யலாமா?'' என்று கேட்க, கருடன் வருத்தத்துடன் "ஐயோ! நான் என்ன காரியம் செய்தேன்! எனது அறியாமையை என்னென்று சொல்வது! இவன் கற்பகத்தருவையே கொடுத்த ஜீமூதவாகனனல்லவா? இவனுடைய கீர்த்தி உலகமெங்கும் பரவியிருக்கிறது. இவன் இறந்துவிட்டால் நான் அக்கினியில் விழுவதே தகுதியாகும். அதர்மமென்னும் விஷமரத்தில் இனிமையான பழங்கள் எவ்வாறு கிடைக்கும்?'' என்று சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஜீமூதவாகனன் தன் பெற்றோர்களைக் கண்டு நமஸ்கரித்து, சிறிது நேரத்தில் மரணமடைந்தான். பிறகு அவனுடைய பெற்றோர் சோகத்தால் வருந்திக் கதறினார்கள். மலயவதியும் அக்கினிப்பிரவேசம் செய்யத் தொடங்கி கௌரியைக்குறித்து "ஏ தேவியே! வித்யாதர சக்கரவர்த்தி உனக்குக் கணவனாகப் போகிறான்'' என்று நீர் கூறியதும் எனது துரதிர்ஷ்டத்தால் பொய்யாகிவிட்டது'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது கௌரி பிரத்யட்சமாகி "குழந்தாய்! என் வார்த்தை பொய்க்காது'' என்று சொல்லி அம்ருதத்தினால் ஜீமூதவாகனனை நனைத்தாள். உடனே அவன் அதிக காந்தியுடன் யாதொரு காயமுமின்றி எழுந்து வணங்கினான். கௌரி அவனைப் பார்த்து, "குழந்தாய்! உனது குணத்திற்கு மகிழ்கிறேன்; நான் எனது கையினால் நீ சக்கரவர்த்தியாகுமாறு அபிஷேகம் செய்கிறேன்'' என்று சொல்லி, கலசநீரால் அவனை நனைத்துவிட்டு மறைந்தாள். அப்பொழுது ஆகாயத்திலிருந்து புஷ்பங்கள் விழுந்தன. தேவதுந்துபிகள் முழங்கின; பிறகு கருடன் வணக்கத்துடன், ஜீமூதவாகனனைப் பார்த்து "சக்கரவர்த்தியே! நான் உன்னிடம் மிகவும் பிரீதியை அடைந்திருக்கிறேன்; உனக்கு வேண்டும் வரத்தைக் கேள்!'' என்றான். அவன் அதைக் கேட்டு, "ஏ கருடா! என்னிடம் பிரீதியடைந்திருந்தால், நீர் இனிமேல் சர்ப்பங்களைப் புசிக்கக் கூடாது; உம்மால் ஏற்கனவே புசிக்கப்பட்டு, மலை போல் குவிந்துள்ள பாம்புகளும் ஜீவிக்கவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். அதற்குக் கருடன் "அவ்வாறேயாகட்டும்'' என்று வரங்கொடுத்து, தேவலோகம் சென்று அம்ருதத்தை எடுத்துவந்து எலும்புக்குவியல்மீது வருஷித்தான். உடனே முன்பு இவனால் புசிக்கப்பட்டு மிஞ்சிய எலும்புகளெல்லாம் உயிர் பெற்றுக்கிளம்பின. உடனே சர்ப்பங்கள் எல்லாம் சந்தோஷமடைந்தன. அப்பொழுது கௌரீதேவியின் பிரசாதத்தினால் வித்யாதரர்கள் யாவரும் ஜீமூதவாகனனை அடைந்து நமஸ்கரித்து, அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தனர். பிறகு அவன் ஹிமயமலையில் பெற்றோருடனும் மலயவதியுடனும் மித்திராவசுவுடனும் சங்கசூடனுடனும் சுகமாக வசித்து வந்தான்.

பிறருடைய உதவியில்லாமல் வாழ்நாளைக் கழிப்பது ஒருவராலும் இயலாது. நமக்குத் துன்பமுண்டாகும் பொழுது நாம் பிறருதவியை விரும்புவது போல், பிறரும் துன்பமுண்டாகும்பொழுது நமது உதவியை விரும்புவர் என்பதை யுணர்ந்து, பிறருக்குத் துன்பமுண்டானபொழுது தானே விரைந்து சென்று அவருடைய துன்பத்தை நீக்குகிறவர்களே உத்தம புருஷர்களாவர்.

"பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதேயாகும் — அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர் செவிக் குய்த்து.''

"மன்னுயிரோம்பி யருளான்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும்வினை.''

சுபம்.



## சிந்தாமணி வாழ்த்து.

சென்னைப் புலால் மறுத்தல் சங்கத்தின் சொற்பெருக்காளர்

திருவாளர் கா. சி. சிவசங்கர முதலியார் அவர்கள்

இயற்றிய கட்டளைக்கலித்துறை.

செந்தா மரைத்திரு வெண்டா மரைமகள் சேர்ந்துறைய
கொந்தார் மலர்க்குழ லார்பயில் சென்னைக் கொழுநகரில்
நந்தா மணிவளக் காயொளிர் பாலம்மை நற்றவத்துச்
சிந்தா மணியெவர் கையி லிருப்பினுஞ் சீர்தருமே

10—12—1928.

# மாதர் உயர்வு.

(ஸ்ரீமான் கா. சி. சிவசங்கர முதலியார்.)

சிந்தாமணியில் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் எழுதியிருக்கும் 'மாதர் உயர்வு' என்னும் உரையைப் படித்தேன். மேனாட்டு மாதரின் நடை உடை உணவு நாகரிகத்தை விரும்பி அதற்கிசைந்த கல்வியை, அதற்கிசைந்த சொற்பொழிவை இந்நாட்டு மாதர் பெற முயலும் இக்காலத்தில் இந்திய மாதர்க்கு இயற்கையாகவே அமைந்துள்ள உயர்வை இவ்வம்மையார் நன்கு எடுத்து விளக்கியிருக்கிறார்கள். இல்லறத்திற்கின்றியமையாத தலைவன் தலைவி இருவருள் யார் உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர். திருவாதவூரடிகள் திருக்கோவையாரில்

"தாகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் [தாங்கிருவர்
ஆகத்தி லோருயிர் கண்டனம்''

என்று கூறிய பாட்டை ஊன்றிப் பார்த்தால் இருவரும் ஓரளவு நிலையுடையார்களே என்பது விளங்கும். தலைவன் தலைவி இருவர் உடம்பு வேறாகக் காணப் பெறினும் இருவர் உயிரும் ஒன்றாய்க் கலந்துறைவதே நமது நாட்டு வழக்கு. இரண்டு உயிரும் ஒன்றாய் கலக்குமாயின் தலைவன் இன்பம் தலைவி இன்பமாகவும் தலைவன் துன்பம் தலைவி துன்பமாகவும் ஆகும். அப்படிப்பட்ட தலைவனும் தலைவியும் கலந்திருப்பதே உண்மையின்பம். அவர் பிரிய நேருவதே கொடிய துன்பம். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள நட்பை விளக்கிக் காட்டுவதே தமிழில் காணப் பெறும் அகப்பொருள். அகப்பொருள் நூல்களைப் படிக்கவல்ல அவ்வளவு பெருங் கல்வியை இக்காலத்து நமது ஆண்களும் கற்பதில்லை, பெண்களும் கற்பதில்லை.

தமிழுலகத்தில் தலைவனும் தலைவியும் கொடுப்பாருங் கொள்வாருமின்றித் தாமே தம்முள் உள்ளமொத்துப் பெரியார்க்கறிவித்து மணஞ்செய்துகொள்ளும் ஒரு வழக்கம் முற்காலத்திலிருந்தது. அவ்வொழுக்கம் இக்காலத்து

யாறிவிட்டது. அக்கல்வியும் இக்காலத்தில் இல்லை, செய்தித் தாள் படிக்கவும் நிருபம் எழுதவும் தெரிந்துவிட்டால் கல்வி நிரம்பிவிட்டது என்று நினைக்கின்றார்கள். ஆங்கில நாகரிகமுடைய தலைவனுக்குப் பண்டை நாகரிகமுடைய தலைவி வாய்த்தால் எங்ஙனம் உள்ளங் கலக்கும், உயிர் கலக்கும் ?

மிருக இன்பத்திற்காகவா இவர்கள் மணஞ் செய்து கொண்டார்கள் ? நகரத்து ஆடவர்கள் பெரும்பாலும் ஆங்கிலங் கற்று பிறரிடம் அடிமைத்தொழில் செய்ய ஆரம்பித்து விட்டனர். அவர்களுக்கு அகப்பொருள் படிக்க நேரமில்லை. பழைய நூல்களின் பேர்களைக் கேட்கக்கூட நேரமில்லை. மாதர்களில் பலர் சிறிது படிக்கத் தெரிந்து நாவல்களும் செய்தித்தாள்களும் படித்து போலி நாகரிகத்தைப் போற்றி வருகின்றார்கள். இவ்விதமான சோற்றுக் கல்வி, வயிற்றுக்கல்வி, அடிமைக்கல்வி, போலிக் கல்வி நிரம்பினால் உண்மை அன்பை, உண்மை அருளை, உண்மை அறத்தை, உண்மை நட்பை, உண்மைக் காதலை எப்படி மக்கள் உணரமுடியும் ? பழைய சங்க இலக்கியங்களாயுள்ள அகப் பொருள் சால்களைப் படிக்காவிட்டாலும் தலைவன் தலைவி இருவரும் திருக்குறளில் உள்ள மூன்றாவது பாலாகிய காமத்துப் பாலையாவது படிக்கக்கூடாதா ? அதில் இருக்கும் உண்மைக் காதலின் தன்மையை உணரக்கூடாதா ? தலைவன் தலைவியைத் தன்னுயிராகக் கருதுகிறான். தலைவி தலைவனைத் தன்னுயிராகக் கருதுகின்றாள். இவர்களில் யார் உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர் ?

ஒரு மனைவி தன் கணவனுக்குத் தாயாகவும் மந்திரியாகவும் மனைவியாகவும் பணிப்பெண்ணாகவும் உதவுகிறாள் என்றால் அவள் கணவனால் அடிமையாகக் கருதப்படுகிறாள் என்று எப்படிச் சொல்லலாம் ?

ஒத்த அழகும், ஒத்த கல்வியும், ஒத்த அறிவும் உடைய ஆணும் பெண்ணும் பண்டைத் தவத்தால் தலைவன் தலைவியாக வாய்க்குமேல் அவர்களிடை உண்மைக் காதல் தோன்றி உயர்வு தாழ்வற்ற பெரிய நிலை நிலவும். போலிக் கல்வியும் போலி நாகரிகமும் பரவுவதால் உயர்வும் தாழ்வும் உண்டாயிருப்பதாக எண்ணங்கள் உண்டாய்விட்டன. "பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே" என்று ஔவையார் கூறினார்கள். "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங் கருமமே கட்டளைக் கல்" என்று திருவள்ளுவனார் கூறினார்.

உயர்வையும் தாழ்வையும் தாம்தாமே தத்தமது எண்ணங்களாலும் சொற்களாலும் செயல்களாலும் பெறுகிறார்களேயன்றிக் கணவன் மனைவிக்காவது மனைவி கணவனுக்காவது அவைகளை யுண்டாக்குவதில்லை. உண்மையன்பில்லாத மனைவியைக் கணவன் விரும்பாதிருப்பது நியாயமே. அங்ஙனமே உண்மையன்பில்லாத கணவனை அவன் மனைவி விரும்பாதிருப்பதும் நியாயமே. அக்காரணம் பற்றி மாதர் இந்தியாவில் தாழ்த்தப்படுகிறார்கள் என்பது நியாயமல்ல.

இந்தியர் வணங்கும் கல்வித் தெய்வம் கலைமகளாகிய பெண். அவர்கள் வணங்கும் செல்வத் தெய்வம் திருமகளாகிய பெண். அவர்கள் ஊர்களிற் காவற்றெய்வம் மாரியம்மனாகிய பெண். அவர்கள் புகழ்வதும் கற்புத் தெய்வமாகிய பெண்ணையே. குழந்தையாயிருக்கின்றவரை அன்னையாதாவில் இருக்கின்ற ஒவ்வொருவரும் பின்னர் மனைவியாதாவையே நாடி இன்புறுகின்றார்கள். உண்மைக் கல்வியும் உண்மை நாகரிகமும் புத்துயிர் பெற்றால் உண்மைக் காதலும் உண்மை இன்பமும் உண்டாகும். அப்போதுதான் இந்திய மகளிரின் இயற்கை உயர்வு தோன்றும்.

# செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

(ஸ்ரீமான் நா. கோவிந்தசாமி பண்டிதர்.)

(3-வது இதழ் 136-வது பக்கத் தொடர்ச்சி.)

ஐந்து வயதுள்ள மைந்துறு பிள்ளைதான்
அவனைச் சங்கத்தில் வைத்துரையைச்
செந்திரு மாற! நீ கேளென வோர்மொழி
தேவர்கள் காண வெழுந்ததுவே. (106)

கேட்டுச் செழிய னுருத்திரசன்மனைக்
கிட்டிச் சிவிகையி லேற்றி வந்தே
நாட்டமுள்ள கீரன் செய்த உரையதே
நல்லுரை யென்று தெளிந்தனனே. (107)

சிட்டர் அறிவரிச் செந்தமிழ்ச் சிறப்பைத்
தெண்மை யில்லார் தெரியத் தாமோ ?
பட்டய மாகவே யெழுதித் தந்தனன்
புண்புறு தமிழைப் பண்ணவனே. (108)

பொருப்பிற் பிறந்து பூழியர் கோமகன்
புகழிற் கிடந்து மூன்று சங்கத்
திருப்பி லிருந்து வைகையிலே யிட்ட
ஏடதிற் றவழ்ந் தெரியினின்று. (109)

கற்றவர் நினைவினடைந்தோ ரேனத்தின்
கடுமருப்பில் வளருகின்றாள்
உற்ற கலை மகளென்னவோர் பாவலன்
உரைத்த யாவையு முய்த்துணர்வீர். (110)

அந்த மாதியிலன் சுந்தரக் கடவுள்
அன்புடன் கும்ப முனிக்குரைத்த
செந்தமிழ் நாட்டின் சிறப்பதைக் கூறுவன்
தேன்மொழியீர் கேளும் மான்விழியீர். (1)

ஆதியில் நாரணன் உந்தியத் தாமரை
அதிலே தோன்றிய நான்முகன்றான்
சோதி சுயம்புவின் தன்னருளாலிந்தத்
தொல்லுல கந்தனை யாக்கினன் காண். (2)

ஆங்காரமாகிய தத்துவத்தாலிந்த
அண்ட பிண்டங்களைத் தான் படைத்தான்
ஓங்கார ரூபமா யுற்றது காணிந்த
உத்தமப் பரத கண்டமென்பார். (3)

நீண்ட பனிமலைச் சிகரஞ் சென்னியாம்
நெடுந்தமிழ் மலை பாதங்களாம்
(தமிழ்மலை—பொதியை)
ஆண்டவனன் பினிலமைந்த தேசங்கள்
அவயவங்களெனப் புகல்வார். (4)

பாரத மாதாவின் பங்கயப் பாதமே
பன்னுமூ வேந்தர்களாண்ட நிலம்
சீரமிகுந் தமிழ்ப் பூமியென்றே கற்றோர்
செப்புவர் காண்மினோ சிற்றிடையீர். (5)

அண்டத்தைப் போலவே பிண்டமென்றே மேலோர்
அறைவர் கேளுங்களம்புவியில்
கண்டவர் போற்றிடும் ஆறுமகாதலம்
காணுவீ ராதார மாறெனவே. (6)

செஞ்சடை வானவன் அங்கயற் கண்ணியைத்
திருக்கல் யாணஞ்செய் காலத்திலே
வஞ்சமிலாத பதஞ்சலி யாய்புலி (வியாக்ரபாதர்)
மகிழ்ந்துண்ண வெள்ளி யம்பலத்தே. (7)

நீலன்மீ தேறியே மாதவரை நோக்கி
நெஞ்சங் கனிந்து வாழ்த்தினன் காண்
காலனை யொத்த வெங்கண்ணி யிக்காலை
காலனுரைத்தபடி யுரைப்போம். (8)

சொல்லு மாரூர் மூலாதாரமதாம் நாபி
குழியி லானைக்கா பூரகந்தான்
நல்ல அண்ணாமலை மன்றம நாகதம்
நாட்டிய காளத்தியாம் விசுத்தி. (9)

புருவ மத்திய வட்டஞ் சிவகாசி
புண்ணிய சாந்த மதுரை யன்றி
அருவுமுருவு மானவ னமர்ந்த
ஆறுமுத லந்தமிழ் நாடதிலே. (10)

செப்பும் பதினெட்டுக் கோடியாஞ் சித்தர்கள்
சிறந்து வாழ்கின்ற மால்வரையாம்
ஒப்பற்ற சிகா மோங்கும் பொதிகையும்
யோகியர் வாழ்கொல்லி மலையும். (11)

Vikmuu, N24(A).
207625

சீரியர் மேவிய சோழ தேசத்திலே
தேவர் முனிவர் தவமியற்றும்
நேரி மலையதும் நின்றொளி வீசிடும்
நீங்காத செல்வ வளநாடு. (12)

மாதவர் சம்பந்தரே டெதிர்த்தேறிய
வைகையும் பொருநை மாநதியும்
போதகங் கவிழ்த்த கெண்டியி னற்புனல்
பொன்னியுஞ் சூழ்கின்ற நாடதுவே. (13)

முத்துச் சலாபமுஞ் சந்தனக் காவினை
முருக்குங் குமரி யாறதுவும்
சத்தி சடாதரி சங்கரி காவலும்
தங்கிய கன்னிநன் னாடதுவே. (14)

கடம்ப வனமுங் கண்டமறைக் காடும்
காரிகை வள்ளி தினைப் புனமும்
படர்ந்த தில்லையுங் கனக மன்றமும்
பாவ னுருவ மாமலையும். (15)

எந்நாளும் நீர்வள முள்ளதுவுங் காணும்
எங்கணும் நன்னில மானதுவும்
மண்ணாளும் வேந்தரின் வண்மை கெடாமலே
வானுறு நன்மழை கொண்டதுவும். (16)

முக்கனிச் சோலைக ளுள்ளது மவற்றின்
மோது தென்றல் மலையுள்ளதுவும்
திக்கெங்குங் கமுகு செங்கரும் போங்கிய
தெங்குநற் சோலைக ளுள்ளதுவும். (17)

நல்ல குருக்கத்தி பாதிரியும் வண்டு
நாடாத சண்பகஞ் சம்பங்கியும்
சொல்லிய கொன்றையு மாத்தி குருந்தமும்
தூய்மை மிகுந்திடு கூவிளமும். (18)

மல்லிகை செவ்வந்தி செம்பரத்தை வாச
மந்தாரை கல்யாணி வெட்சிமரு
முல்லை செவ்வலரி நந்தியா வர்த்தமும்
மூசளிவண்பொழி லுள்ளதுவும். (19)

தாமரை வாசத் தடாகங்களும் மலர்
தண்ணிய நீலங் குவளைகளும்
மாமலர் நெய்தலுங் கொட்டிகளும் உள்ள
வண்புனல் நீடிய வோடைகளும். (20)

வண்டுகள் கூடி மகரந்தங் கிளறி
வாசத்தேன் கண்டு மிகக் குடித்தே
மண்டிய வள்ளையி னீண்ட கொடிமிசை
மயங்கி வீழ்மலர்ப் பொய்கைகளும். (21)

நல்ல நவமணித் தெண்டிரை வீசிடும்
நந்துமிகுங் கடல்போற் பரந்த
மெல்லிய கொக்குசெந் நாரையுள்ளான்சிறை
வேகமிகுங் கள்ள வாயன்களும். (22)

கூரிய மீன்கொத்தி கற்பொறுக்கி பெருங்
கூரைக் கடாமடையான் முழுகும்
பாரிய சிறவி நீர்வளர் காகமும்
பறந்து திரியும் எரிகளும். (23)

பூருவ ஜன்மத்தில் நல்வினையால் வரு
புண்ணியவான்க ளெனப் பிறந்தே
சீருஞ் சிறப்பு மடைந்தவர் நல்கிடும்
செல்வமெனும் புனலூருணியும். (24)

நாலு கரையினும் நெல்லி பலாமாவும்
நாட்டியே மத்தியில் நந்தவனம்
மேலுற வகுத்த யோகிகள் மடங்கள்
விளங்குந் துறைகொள் பல்குளமும். (25)

பாலை முதிரைகள் தேக்கொடு காரகில்
பத்திகொள் செங்கருங் காவிகளும்
மேலுலகந்தொடு தார மராமரம்
வேங்கை நல்வாகை நறுங் கடம்பும். (26)

சித்தர்கள் கண்ட காணிகளும் நல்ல
தெய்வ சஞ்சீவி பல்மூலிகையும்
முத்த ரறிதுயிற் சித்திரக் குகையும்
முல்லை படர்ந்தலர் கோடுகளும். (27)

ஒள்ளிய மங்கையர் நல்ல விழிகளுக்
கொப்பிடுஞ் சேலும் வராலிகளும்
உள்ள சுனைகளும் வேய்மணியுங் கொண்ட
உயர்ந்த மால்வரை குன்றுகளும். (28)

வீசும் அருவிகள் ஐவனச் செய்களில்
வேகமா யோடித் தினைப்புனத்தில்
மூசுபுள் ளோடவே கொம்மை குலுங்கிட
மூடிய கச்சு கிழிந்திடவே. (29)

கைகளிற் கவண்கொண் டெறி குறத்திகள்
களைத்திடாது விடா யகற்றிச்
செய்களில் நிறைந்து கூலம் பலவகை
செழிக்கச் செய்யுங் குறிஞ்சிகளும். (30)

# ஒற்றுமையின் வெற்றி.

(சகோதரி வி. பாலம்மாள்.)

## முதல் அத்தியாயம்.

### கடிதம்.

அனந்தபுரத்தின் வடபாரிசத்தில் அழகாய்க் கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டின் அறை ஒன்றில் போழுகியும் பதினொன்கு வயதுமுள்ள ஒரு பெண்மணி தரையிலுட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். அக் கட்டழகு வாய்ந்த கன்னிகையைத் தமது கண்ணால் காண நேரிடுமாயின் இவள் சர்வாங்கசுந்தரி, திரிபுரசுந்தரி, புவனசுந்தரி, ஜகன்மோகினி என்று எவரும் வர்ணியாமலிரார். அவர்களைப் போலவே நாமும் சாதாரண பதங்களை உபயோகித்து ஸ்திரீகளை வர்ணிக்க இஷ்டப்படவில்லை. நமது கதாநாயகியான பாலை, சௌந்தரியமென்ற சுகந்தப் பொடி பூசி லாவண்ணியமென்ற மகா சமுத்திரத்தில் கழுத்தளவு அமிழ்ந்து குளித்து முழுவதும் மூழ்கிக் குளிப்பதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். காலத்தை நாம் எதிர்பார்ப்பதன்றிக் காலம் மட்டும் ஒருவரையும் லட்சியம் செய்வதில்லை; எதிர்பார்ப்பதுமில்லை. பரமாத்மாவின் மகிமையால் சதாகாலமும் சக்கரம்போல் சுழன்றுகொண்டிருக்கும் காலம் சராசரசொரூபமாயிருக்கும் பிரபஞ்சத்தின்மீது எப்பொழுதும் ஏகாதிபத்தியம் புரிந்துகொண்டே இருக்கிறது. காலத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கும் மனிதன் காலத்தை எதிர்பார்த்திருப்பதே வழக்கம். காலமும் நற்குணம் வாய்ந்த பிரபுவைப்போல் தன்னை எதிர்பார்த்துப் பொறுமையுடனிருப்பவர்களின் யோகக்ஷேமங்களைத் தான் வகித்துத் தன் அடியார்க்கு அளவற்ற பயனை யளிப்பதிலும் தடை செய்யாது. இது விஷயத்திற்குப் புராண இதிகாசங்களில் வேண்டிய ஆதாரமும் பிரமாணமும் இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். காலத்தின் மகிமையைப்பற்றி நாம் இங்கு விஸ்தரித்தல் அநாவசியம். அது எல்லோருமறிந்ததே. எதிர் காலம் நிகழ் காலமாகிச் சென்ற காலமாகப் பரிணமிப்பதால் நமது பாலைக்கு எதிர் காலத்திலிருந்த பருவ காலம் நிகழ் காலமடையும் நிலைமையிலிருந்தது. இவ்விதமிருந்த வடிவழகி தன் அறையிலுட்கார்ந்து கடிதமொன்று எழுதலானாள்.

எழுதும்போது ஆறாய்ப் பெருகிக்கொண்டிருக்கும் தன் கண்ணீரைச் சேலையின் தலைப்பினால் துடைத்துக்கொண்டு கடிதத்தை அதிகப் பிரயாசத்துடன் எழுதி முடித்தாள். பிறகு அவள் அக்கடிதத்தைத் தன் பெட்டியின்மேல் வைத்துவிட்டுக் கட்டிலில் சுவரின் பக்கமாய்த் திரும்பிப் படுத்துக்கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள். பெண்ணே! ஏன் அழுகிறாய்? வரும் விதி வந்தால் படும் விதி பட்டுத்தான் ஆகவேண்டும். கால பலத்தை யனுசரிக்க வேண்டாமா? திரிகால ஞானியாகிய வசிஷ்ட பகவானால் முதல் நாள் கங்கணம் கட்டப்பட்ட ஸ்ரீ ராமபிரான் மறுநாள் வனவாசம் செல்ல எதனால் நேர்ந்தது? காட்டு யானை என்றெண்ணித் தசரத சக்கரவர்த்தியால் விடப்பட்ட கூரம்பு முனிகுமாரனுயிரைக் கொள்ளை கொள்ள எதனால் நேர்ந்தது? பொழுதுபோக்கு நிமித்தம் ஆடிய சூதாட்டத்தால் பஞ்சவர் நாடு நகர மிழக்க எதனால் நேரிட்டது? லோக மாதாவாகிய சீதாப்பிராட்டியார் அசோக வனத்தில் சிறையிருந்ததேன்? யாகத்தீயில் உதித்த பாஞ்சாலி பஞ்சைபோல விராட நகரில் பணிப்

பெண்ணாயிருந்ததேன் ? போ போ பைத்தியக்காரி, நான் உன்னைக் கதாநாயகியாக வைத்து எழுத ஆரம்பிக்கு முன்னமே அழத் தொடங்குகிறாயே ! வெகு லட்சணம்! 'பொறுத்தார் பூமி யாள்வார்' என்ற வாக்கியத்தை மறந்து விட்டாய் போலும்!

அச்சமயத்திற்குச் சரியாய் வடிவத்திற் சிறந்த யுவ புருஷன் ஒருவன் கன்னிகை படுத்திருக்கும் கட்டிலின் சமீபம் நிச்சப்தமாய் வந்து நின்றான். அவன் வந்ததை அவள் அறியவில்லை. வந்தவன் கட்டிலின் அருகிலிருந்தே சுற்றி நோக்கியதில் கைப்பெட்டியின் மீது எழுதி மடித்து வைத்திருந்த கடிதமிவனுக்குப் புலப்பட்டது. மேல் விலாசத்தைக் கவனித்ததும் அவன் ஒன்றும் தோன்றாது அன்பு மேலீட்டால் இனிய குரலுடன் "லீலாவதி" என்று கூவினான்.

அவ்வினிய குரல் கேட்ட லீலாவதி திடுக்கிட்டெழுந்து நின்று தன் தேகமுழுவதும் புரண்டுகொண்டிருக்கும் தனது கேசபாசத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டு வந்தவனை உற்று நோக்கினாள். அவனும் இவளை நோக்கினான். இருவருடைய பார்வையும் ஒன்றுபட்டது. அதனால் லீலாவதி நாணங்கொண்டு தலை குனிந்துகொண்டாள். விநயகுமாரன் லீலாவதியின் அருகில் நின்று, "லீலா ! நீ தனியாய் இங்கு படுத்துக்கொண்டு என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய் ?" என்றான். லீலாவதி அதற்கு யாதொரு மறுமொழியும் அளிக்காமல் பெட்டியின் மீதிருந்த கடிதத்தைக் கையிலெடுத்துக்கொள்ள முயன்றாள். இதைக்கண்ட விநயன் "இது யாருடைய கடிதம், லீலா ?" என்று வினவினான்.

லீலா:—இது யாருடையதும் அல்ல. தாங்கள் உட்காரலாமே.

விநயன்:—லீலா ! இன்று உன்னைப் பார்க்கும் போது உனக்கு முன்னிருந்த உற்சாகமும் சந்தோஷமும் எங்கேயோ மாயமாய்ப் பறந்திருக்கின்றனவே. அநேகமாய் என்னை உன் மனதைவிட்டு நீக்கி விடுவதற்கு உரிய முயற்சி செய்யப்பட்டிருப்பதாய்த் தோன்றுகிறது.

லீலா:—எனக்குத் தெரியாது.

விநய.:—உனக்குத் தெரியாமலிருக்கலாம். இக்கடிதத்தை எவருக்கு எழுதியிருக்கிறாய் ?

லீலா:—கடித விஷயத்தைக்கொண்டு தாங்கள் என்ன செய்வீர்கள் ?

விநய.—கடிதத்தின்மேல் என் பெயர் இருக்கிறதே.

லீலா:—இருக்கலாம், ஆனால்—

விநய.:—ஆனால் என்ன ? அக்கடிதத்தைப் படிக்க எனக்கு உரிமை யுண்டு.

லீலா:—நான் அதைக் கொடுக்கமாட்டேன்.

விநய.:—அப்படியானால் அதில் எழுதியிருக்கும் சமாசாரங்களை உன் அமுத மொழியாலே கூறிவிடு. கடிதத்தையே படிக்கவேண்டும் என்பது கட்டாயமா ?

லீலா:—கடிதத்தில் ஒன்றுமே எழுதியிருக்கவில்லை.

விநய :—கடிதத்தில் விஷயம் எழுதப்பட்டிருந்தாலென்ன ? இல்லாமற் போனாலென்ன ? அது முக்கியமல்ல. கடிதத்தின்மேல் என் விலாசமிருப்பதால் அது எனக்குச் சேரவேண்டியதே. என் கடிதத்தை நீ கொடுக்க மறுப்பதேன் ?

லீலா :—கடிதம் தங்களுடையதே. ஆனால் அதை இப்பொழுது தங்களுக் களிப்பதால் ஒரு பயனும் விளையாது.



விநய :—பிரயோசனமற்ற கடிதத்தை ஏன் எழுதினாய் ?

லீலா :—(பதிலுரைக்க முடியாது) நான் இக்கடிதத்தைத் தங்களுக்காகவே எழுதினேன். நீங்கள் இக்கடிதத்தைப் பார்க்கலாம். ஆனால் இதை இப்பொழுதே படிக்காமல் காலாந்தரத்தில் படித்தால் நான் இப்பொழுது மூழ்கி இருக்கும் துயரக் கடலினின்றும் சற்றேனும் தலை எடுக்க வழியுண்டு. தாங்கள் பெரிய மனதுசெய்து என் கோரிக்கையை ஈடேற்றவேண்டும்.

விநயகுமாரன் (கடிதத்தைப் பெற்றுக்கொண்டு) 'லீலா! கடிதத்தைப் படிக்க வேண்டுமென்ற விருப்பம் அதிகமாயிருப்பதால் நான் இப்பொழுதே வீடு செல்லவேண்டும்,' என்று புறப்பட்டான். இது கண்ட லீலாவதி 'விநயகுமார! நான் எழுதியிருப்பதை உபேட்சித்து விடக்கூடாது. ஒருகால் அளவற்ற துயரை மனதிற்கு விளைவித்தாலும் அதை லட்சியம் செய்யக்கூடாதென்பதே எனது பிரார்த்தனை' என்று வேண்டினாள். விநயன் லீலாவதியின் வார்த்தைக்கு மறுமொழி ஒன்றும் அளிக்காமலே தன் வீடு சென்றான்.

விநயன் எதைப்பற்றியோ யோசித்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான். அந்நேரம் சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஆகாய மண்டலம் அமைதியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. விநயகுமாரனுக்குமட்டும் பொழுதுபோகுந் தருணமென்று தெரியவில்லை. அவன் வீடுவருவதற்குள் விளக்கேற்றப்பட்டிருப்பது கண்டு ஆச்சரியமடைந்தான். நடுப்பகலிலேயே இருள் அடர்ந்ததாக அவன் எண்ணம். தன் அறையிற் சென்று லீலாவதியின் கடிதத்தைப் பிரித்தான். ஆதியோடந்தமாய்ப் படிப்பதற்கு மனம் தாங்காது அங்கும் இங்குமாய்ப் படித்தான். ஒரு முறைக்கு மும்முறை படித்தான். கடைசி முறை உரக்க வாசித்தான். அச்சமயம் நம் செவியில் விழுந்ததை இங்கு எழுதுகிறோம்.

" விநயகுமார !

தங்களுக்கு நான் கடிதம் என்னவென்று எழுதுவேன்? நான் எதைஎழுதவேண்டுமென்று நினைத்தேனோ அதை நான் எழுதமாட்டாதவளாக இருக்கிறேன். எழுதவேண்டியதை எழுதமுடியாமலும் அதை மனதிலேயே வைத்துக்கொள்ள முடியாமலும் கஷ்டப்படுகிறேன். கடிதம் எழுதுவோமா, வேண்டாமா என்று ஒரு வாரமாக யோசித்து யோசித்துக் கடைசியாய்த் தங்களின் க்ஷேமத்தைக் குறித்து என் மனதைத் திடப்படுத்திக்கொண்டு என் அபிப்பிராயத்தை எழுதத் துணிந்தேன்.

சுவாமி ! இச்சன்மத்தில் நான் உங்களை யடையவும் நீங்கள் என்னை மணக்கவும் முடியாதென்பது நிச்சயம். இவ்விரண்டு மலர்ந்த புஷ்பங்களும் ஒரே இடத்தில் பிரகாசிப்பதில் ஈசுவரனுக்குச் சம்மதமில்லைபோலும் ! சம்சார வாழ்க்கையில் மன ஒற்றுமையுடன் அனுபவிக்கும் சுக இன்பத்துக்கு நாமிருவரும் பிறக்கவில்லை. உங்களை மணந்து பயபக்தியுடனும் பிரியத்துடனும் உங்கள் பாதசேவை செய்வதற்கு உரிய நல்லெழுத்து என் தலையில் எழுதப்படவில்லை. எனது பணிவிடையால் மனங் குளிர்வதற்குத் தங்களுக்கும் பாக்கியமில்லை. இதற்கு ஜாதிப் பிரஷ்டம் என்பதே காரணமாக நிற்கிறது. இன்று என்னை மணம் புரிந்தால் நாளையதினம் உங்களை ஜாதியைவிட்டு விலக்கிவிடுவார்கள். விவேகமற்ற ஜனங்களிடம் பந்திபோஜனஞ் செய்தல் முதலிய விவகாரங்கள் எப்படியேனும் போக என்றாலும் உங்களுடன் பேசுவதையும் நிறுத்திவிடுவார்கள். இதனால் உங்களுக்குப் பலவகைத் துன்பங்கள் உண்டாகும். ஒருகால் நாம் இந்தக் கஷ்டத்தை யனுபவிக்கச் சித்தமா

யிருந்தாலும் நமது விவாகத்தினால் நம் வம்ச பரம்பரைகளும் மதவிலக்கமென்ற கஷ்டத்திற்குள்ளாகவேண்டு மல்லவா? ஆகையால் நான் இவை யெல்லாம் யோசித்து நாம் விவாகம் செய்துகொள்கிற தென்ற ஆசையை ஒழித்திருக்கிறேன். நீங்கள் என்னை மறப்பதே நலம். நீங்கள் என்னை உண்மையுடனும் முழுமனதுடனும் நேசிப்பதை நானறிவேன். நான் உங்கள் மனதை யறியாது இருந்தால் நன்றாயிருக்கும். இதனால் உங்களைப்போல் நான் நேசிக்கவில்லை என்று நினைக்கக் கூடாது. நான் தங்களை நேசிப்பது நீங்க ளறிந்த விஷயம். இவ்வுலகில் நான் விரும்பக்கூடிய பதார்த்தம் தாங்களே; சந்தோஷத்திற் கிருப்பிடம் தாங்களே; தெய்வம் ஒன்று இருப்பதை ஒப்புக்கொள்வதானால் அத்தெய்வம் எனக்குத் தாங்கள் தான். பல ஜன்ம புண்ணியத்தால் அடையக்கூடிய உத்தம புருஷர் தாங்கள்தான் என்பது உபசார வார்த்தையல்ல. இவ்விதம் ஒப்பற்ற நற்குணம் அமைந்துள்ள தங்களை நான் மணக்கமுடியாததுபற்றித் தங்கள் மனம் வருந்தக்கூடும்.

இது விஷயத்தில் உங்கள் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். இவ்வுலகில் நாம் இருவரும் தம்பதிகளாகும் பாக்கியம் செய்யவில்லை. இதை மறந்து தாங்களேனும் சுகமாயிருப்பதே எனக்கு பரம சுகம். தாங்கள் என்னை விரும்பினால் மதப்பிரஷ்ட மடைவீர்கள் என்பது நிச்சயம். ஆகையால் ஒரு விஷயம் உங்களுக்கு நான் தெரிவிப்பதுபற்றி என்னை மன்னிக்கவேண்டும். இதற்காகவே இக்கடிதமெழுதலானேன். தாங்கள் ரூபவதியாயும் குணவதியாயும் வித்தியாவதியாயுமுள்ள ஒரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளல் முக்கியம். நான் பெண்ணாய்ப்பிறந்து தங்களை நேசித்தபின் இனி மனதில் வேறொருவரை விரும்பேன். தங்களுடைய க்ஷேமலாபங்களைக் கேட்டுச் சந்தோஷித்து விவாகமில்லாமலே என் வாழ்க்கையைக் கழித்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். இதுவே எனது கோரிக்கை.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
லீலாவதி.''

விநயகுமாரன் இக்கடிதத்தை ஒருவாறு படித்து முடித்தான். ஆதிமுதல் நேசித்த கன்னிகையை விவாகம் செய்துகொள்ளாது மறப்பதென்றால் எங்ஙனம் சாத்தியமாகும்? கடிதம் கையிலிருந்தபடியே மூர்ச்சித்து விழுந்துவிட்டான்.

## இரண்டாம் அத்தியாயம்.

### பணத்தின் பெருமை.

விநயகுமாரன் லீலாவதியை விவாகம் செய்துகொள்ளமுடியாத காரணம் என்ன? நெடுநாளாய்ப் பயிரிட்டுவளர்த்துவந்த சிநேகம், வாஞ்சை என்ற கொடியை லீலாவதி வேரறச் செய்ய எவ்விதம் துணிந்தாள்? இக்காதலர்கள் யார்? இவர்கள் நேசத்திலுள்ள ரகசியமென்ன? என்ற இவ்வித சந்தேகங்கள் படிப்பவர்கள் மனதைப் பாதிக்கக்கூடுமல்லவா?

லீலாவதியின் தந்தையான விஜயகோபாலன் என்பவன் கேவலம் பரம ஏழையாயிருந்தான். அனந்தபுரத்தில் ஜீவனோபாயம் நடத்தமுடியாது அவன் ஜயநகரம் சென்றான். அப்பொழுது அவனுக்கு வயது பதினாறு. ஜயநகரத்தில் பத்து வருஷகாலம் ஒரு வேலையிலிருந்து தனது இருபத்தாறாம் வயதில் ஓர் அழகிய பெண்ணை மணந்தான். அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவளே நமது லீலாவதி.

சின்னாட்கள் சென்றதும் விஜயன் தன் மனைவி மக்களை அனந்தபுரத்திலிருக்கும் தனது வீட்டில் இருக்கச்செய்து இவர்களைக் கவனித்துக் கொள்ளும்படி தனது ஆப்த நண்பனாகிய அனந்தராமனுக்கு அறிவித்தான்.



அனந்தராமன் பணக்காரன்; பரோபகாரி. அவனுக்குப் புத்திரப்பேறு அதிகம். விநயகுமாரன் இரண்டாவது பிள்ளை. விநயனுக்கு ஒரு தம்பியும் தங்கையும் இருந்தார்கள். தங்கையின் பெயர் இந்திரா.

அனந்தராமன் விஜயகோபாலனின் மனைவி மக்களை கவனிக்க ஆரம்பித்தபொழுது லீலாவதி ஒரு வயதுள்ள குழந்தையாயிருந்தாள். விநயனுக்கு அப்பொழுது ஆறு வயது. விநயன் எப்பொழுதும் லீலாவதி வீட்டிலேயே இருந்துகொண்டிருப்பான். குழந்தையாக இருக்கும் லீலாவதியை ஒரு வினாடி பிரிந்திருக்கவும் அவன் மனம் சகிக்காது. இதற்குக் காரணம் என்னமோ யாம் அறியோம்.

விநயனுக்குப் பத்து வயது ஆனதும் படிக்கும் பொருட்டு அனந்தராமன் அவனை ஜயநகரத்திற்கு அனுப்பினான். அன்றுமுதல் விநயன் தங்கையாகிய இந்திரா லீலாவதியுடனேயே இருந்துகொண்டு விளையாடுவாள். விநயன் அடிக்கடி அனந்தபுரம் வரும் சமயம் லீலாவதியுடன் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருப்பான். தான் கண்டு கேட்ட விநோத விஷயங்களை அவளுக்குச் சொல்லுவான். லீலாவதிக்கு அவற்றை யெல்லாம் கேட்பதில் விருப்பம் அதிகம். இவ்விதம் சில வருஷங்கள் கழிந்தன.

அவ்வூரிலேயே பணக்காரனென்று பேர் படைத்த ஒரு பெரிய மனிதன் இருந்தான். அவன் பெயர் வீரநாராயணன். அக்கிராமத்திற்கு அவனே தலைவன். அவன் மனைவியின் தம்பி ஒருவன் அவ்விடமே வாழ்ந்துகொண்டிருந்தான். அவனைக் காளன் என்று அழைப்பார்கள். அவனுடைய குலம், கோத்திரம் முதலியவைகள் ஒருபக்கமிருக்கட்டும். மற்ற விஷயங்களில் காளன் ஒருவிதத்தில் ஒப்பற்றவனாகவே இருந்தான். அவன் உருவம் மெத்த விநோதமானது. அவன் சரீரத்தைக் காய்ந்த விறகு கட்டைக்கும் ஒப்பிட முடியாது. குழி விழுந்த கண்ணும், ஆத்திக்கழிபோன்ற காலும், ஏற்றச்சால் போன்ற பெருத்த வயிறும், கோரைப்பல்லும் பார்ப்பவர்களுக்கு வியப்பையும் பயத்தையும் விளைவிக்காமலிரா. இத்துடன் அவன் பள்ளிக்கூடத்தில் கால் வைத்து மறியான். வீரநாராயணன், தன் மைத்துனன் புத்திசாலியாகவேண்டுமென்று வீட்டிலேயே உபாத்தியாயர்களைக் கொண்டு அவனுக்குப் போதிப்பித்தும் சிறிதும் பயன்படவில்லை. நாம் இக்கதையை எழுத ஆரம்பிக்கும்பொழுது காளனுக்கு வயது முப்பது. சதாகாலமும் புகையிலையை மென்று உமிழ்ந்துகொண்டும், பட்டை பட்டையாய் மூக்குப்பொடியை உரிஞ்சிக்கொண்டுமிருப்பதே இவன் வேலை.

இவ்விதம் அபூர்வமான அழகு வாய்ந்த காளனுக்கு ரூபத்தில் அப்சர கன்னிகைகளைப் பழிப்பவளான லீலாவதியை விவாகம் செய்விக்க எண்ணிய வீரநாராயணன் விஜயகோபாலனுக்குத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான். தான் கிராம அதிகாரியா யிருப்பதால் தன்னை மீறி ஏழையாகிய விஜயகோபாலன் யாது செய்யக்கூடும் என்பது இவன் தீர்மானம். சுய லாபத்தைக் கருதித் தான் பெற்ற பெண்ணை அறுபது வயது மீறிய கிழவனுக்கும் தீரா நோயாளிக்கும் விவாகம் செய்து கொடுக்கத் துணியும் சில பெற்றோர்களின் வகுப்பை நமது விஜயகோபாலன் சேர்ந்தவனல்ல. தன் பெண்ணைக் காளனுக்குக் கொடுக்க முடியாதென்று தெரிவித்துவிட்டான். இதனால் வீரநாராயணனுக்குக் கோபம் பொங்கி யெழுந்தது.

விஜயகோபாலன் லீலாவதிக்குச் சீக்கிரமாக விவாகம் முடிக்கக் கருதினான். ருதுமதியான பெண்களை விவாகம் செய்தல் நன்மை என்று வாய்பேச்சால் பேசுவோரின் சங்கம் அச்சமய

மும் இருந்தபோதிலும் விஜயகோபாலனுக்கு அவ்வழக்கம் மிகவும் கெடுதலாகத் தோன்றியது. அலர்ந்த மலரின் நறுமணம் அயலாறிய வீசுவது போல் கட்டழகியான பெண் இவனுக்கு இருப்பது அறிந்து அனேகர் இவனைப் பெண்கேட்க ஆரம்பித்தனர். இவைகளைக் கவனித்து லீலாவதியைக் கூடியசீக்கிரம் விநயகுமாரனுக்கு மணம் முடிக்கவேண்டிக் தனது நண்பன் அனந்தராமனுக்குத் தெரிவித்தான். இதுகேட்டு அனந்தனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. கலியாணமும் நிச்சயமாயிற்று. அதற்குரிய பொருள்களெல்லாம் இருவர் வீட்டிலும் சேகரிக்கப்பட்டன.

இன்னும் இரண்டு தினத்தில் லீலாவதிக்கும் விநயகுமாரனுக்கும் விவாகம் நடக்கப்போகிறதென்ற பிரஸ்தாபம் ஊர் முழுவதும் பரவியது. அச்சமயம் அவ்வூரார் 'ஆயிரம் பணம் காசுகள் இருந்தாலும் குரூபியான காளனுக்கு விஜயகோபாலன் பெண் கொடுக்கச் சம்மதிப்பானா? அவனுக்குக் கொடுப்பதைப்பார்க்கிலும் ஆறு குளங்களில் அப்பெண்ணைத் தள்ளிவிடுவதே நலம். விநயகுமாரனுக்கு லீலாவதியைக் கொடுப்பது பொருத்தமாகும்' என்று பேசினார்கள். இக்கலியாண சமாசாரத்தைக் கேட்ட வீரநாராயணன் விஜயனை வரவழைத்து "உன் பெண்ணைக் காளனுக்குக் கலியாணம் செய்துகொடுக்காவிடில் உனக்கு நான் தீங்கிழைப்பேன். என்னை யாரென்று நினைத்தாய்? என் இஷ்டத்திற்கு விரோதமாய் நடந்தபிறகு நீ இவ்வூரில் வாழவும் முடியுமா? ஜாக்கிரதை!" என்று பயமுறுத்தினான். அதற்கு விஜயன் "உமக்கு இருக்கும் அதிகாரத்தையும் உமது பணப்பெருமையையும் அவைகளைக்கொண்டு நீர் எவ்வளவு தூரம் நடத்துவீரென்பதை நான் அறிவேன். ஆனால் என் பெண்ணைமட்டும் காளனுக்குக் கொடுக்கவே மாட்டேன்" என்று மறுத்துவிட்டான். இது கேட்ட வீரநாராயணன் கோபங்கொண்டவனாய்க் கிராமத்தார்களை அழைத்து விஜயகோபாலன் வீட்டிற்கு ஒருவரும் போகக்கூடாதென்றும், அவனை ஜாதிப்பிரஷ்டஞ்செய்ய வேண்டுமென்றும் கண்டிப்பாய் உத்திரவிட்டான். அவர்கள் வீரநாராயணனுக்குப் பயந்து விஜயனை ஒதுக்கிவிட்டதோடு "ஆமாம், அவன் பெரிய மனுஷன். அவனைக்காட்டிலும் விஜயனுக்குப் பணக்கார சம்பந்தி கிடைக்கப்போகிறானா? ஆண்பிள்ளைக்கு அழகு எதற்கு? இந்த மட்டும் கிடைத்ததே என்று காளனுக்குப் பெண்ணைக் கொடுக்கக்கூடாதோ?" என்று ஆரவாரம் செய்தார்கள்.

வீரநாராயணனது பணக்கட்டாலும் கிராமத்தார்களின் அவிவேகத்தாலும் விஜயகோபாலன் குடும்பத்துடன் பகிஷ்காரம் செய்யப்பட்டான். லீலாவதியின் விவாகமும் நின்றுவிட்டது. அனந்தராமன் கிராமத்தில் கண்ணியம் பெற்றவனாயிருந்தும் இவ்விஷயத்தில் அவனுடைய பிரயத்தினம் வீணாயிற்று.

இவ்விதம் சில நாட்கழிந்ததும் வீரநாராயணனால் அகாரணமாகத் தனக்கு ஏற்பட்ட அவமதிப்பைத் தாங்கமாட்டாது விஜயகோபாலன் வருந்தி மரணமடைந்தான். அவனுடைய மனைவியையும் பெண் லீலாவதியையும் அனந்தராமன் ஒரு விதத்திலும் குறைவின்றி முன்போலவே ஆதரித்துவந்தான். அனந்தராமனின் சினேகபாசத்தை எவ்வளவு விஸ்தரித்து எழுதினாலும் போதாது. விஜயன் பரலோகமடைந்த சமயம் விநயன் ஜயநகரத்தில் படித்துக்கொண்டிருந்தான். இச்சம்பவம் நடந்த ஆறு மாதத்தில் அவன் படிப்பு முழுவதும் முடிந்துவிட்டபடியால் தன் தந்தையுடன் அனந்தபுரத்திலேயே வசிக்கலானான். லீலாவதிக்கும் இவனுக்கும் ஏற்கனவே இருந்த நேசம் தளிர்த்துத்தழைத்து வேரூன்ற ஆரம்பித்தது. அனந்தராமனும் விநயகுமாரனும் லீலாவதியின்



விவாக விஷயத்தில் ஜாதிப்பிரஷ்டமில்லாது நிறைவேறுவதின் நிமித்தம் பல ஏற்பாடுகள் செய்துபார்த்தார்கள். முடிவில் லீலாவதியை விவாகம் செய்துகொள்வதென்று தந்தையிடம் யோசித்துமுடித்து லீலாவதியின் அபிப்பிராயத்தைக் கேட்கும்பொருட்டு விநயகுமாரன் விஜயன் வீடு சென்றான். விவாகவிஷயமாய் அவளுடன் பேசியபோது அவள் அனுகூலமான பதில் அளிக்காததைக்கண்டு விநயன் மனக்கவலைகொண்டிருந்த சமயமே நமது லீலாவதி மேற்கண்ட கடிதத்தைக் கொடுத்தாள்.

## மூன்றாவது அத்தியாயம்.

### தீர்மானமும் ஆபத்தும்.

இச் சம்சார வாழ்க்கையில் அவர் யார்? யாருடைய மனதில் ஜீவாதாரமாகிய நேசமில்லையோ அவர் இச் சம்சார வாழக்கையில் யாராயிருக்கலாம்! நேசமும், ஈவு, இரக்கம் முதலிய நற்குணங்களும் யாருடைய மனதில் நிலைத்திருக்கவில்லையோ அவர்களால் குடும்பத்துக்கு யாது பயன்? கந்த மூலங்களைத் தின்று, மர உரி உடுத்து, ஜடை தரித்து, ஞானமார்க்கத்தை அடைந்து, மகரிஷிகளாய் இருப்பவர்களால் இப்பிரபஞ்சத்துக்குப் பயன் என்ன? நீங்கள்மாத்திரம் நற்கதியை அடைந்தால், நீங்கள் பிறந்து, வளர்ந்து, வசித்து மெய்ஞானத்தை அடைவதற்கு ஆதாரமாயிருந்த இவ்வுலகத்திற்கு யாது கைம்மாறு செய்கின்றீர்கள்? உலக வாழ்க்கையில் ஈடுபட்டு அதைக் கொண்டே தத்துவ ஞானமடைவது சிலாக்கியம். யாரால் சம்சாரத்தின் நன்மைக்காக ஒரு நாளாவது கழிக்கப்படவில்லையோ, குடும்பிகளின் விசனத்தைக்கண்டு யாருடைய மனம் உருகவில்லையோ, அவனுடைய கவலையை நீக்குவதில் யாரால் சிறிதளவும் பிரயத்தினம் செய்யப்படவில்லையோ அவர்களுடைய மனம் கல்லிலும் கல் என்பது நிச்சயம். உலகத்திற்கு உண்மையில் நற்போதனை செய்பவர்கள் ஆத்தும ஞானிகள்தான் என்று பலர் சொன்னபோதிலும் நம்முடைய தீர்மானம் மட்டும் உலகத்திற்கு நற்போதனை செய்பவர்கள் சம்சாரிகளென்பதேயாகும். நமது கதாநாயகனாகிய விநயகுமாரன் ஆத்ம ஞானியும் அல்ல, யோகியும் அல்ல. அவன் உலக தந்திரத்திற்கு ஆதீனப்பட்டவன்தான். அவன் ஜாதிப் பிரஷ்டத்திற்குப் பயந்து லீலாவதியை மணக்க முடியாதவனாய் இருந்தான். ஆகையால் லீலாவதியின் கடிதம் அவன் மனதைப் புண்படுத்தியது. எல்லா விஷயத்தையும் ஒரு முறை நேரில் பேசுவது நன்மை எனக் கருதி லீலாவதியின் வீடு வந்தான்.

லீலாவதி தன் அறையினுள் உட்கார்ந்திருந்தாள். அவள் இவனைக் கண்டதும் கண்ணீர் விட ஆரம்பித்தாள். விநயன் சிறிதுநேரம் சும்மா இருந்து, "லீலா! நாம் நமது நன்மையைக் கோரவேண்டியவர்கள் தானே. நமது விஷயத்தில் நாம் கண் மூடித்தனமாய் இருக்கலாமா?" என்றான்.

லீலா:—நான் அவ்விதம் சொல்லவில்லை. தாங்கள் என்னைக்காட்டிலும் ஆலோசனை உள்ளவரே. ஆனால் வேட்கை ஆர்வம் என்பது மனிதனைக் குருடனாக செய்துவிடுமென்பது என் தீர்மானம்.

விநயன்:—நான் நன்மை தீமைகளை நன்றாய் ஆராய்ச்சி செய்தே உன்னைக் காதலிக்கிறேன். காமம் என்பது குருடாக்குமன்றி, காதல் என்பதுமட்டும் ஒருபொழுதும் அவ்விதம் செய்யாது. இவ்விஷயத்தில் உன் அபிப்பிராயம் என்ன? நமது உண்மை வாய்ந்த காதலை இன்றோடு அழித்து விடுவதில் உனக்கு இஷ்டந்தானா?

லீலாவதி பதில் ஒன்றும் சொல்லவில்லை.

விந :—மறு மொழி கூறுதிருப்பதும் உனது இஷ்டமாகில் அவ்விதமே ஆகட்டும். உனக்கு விரோதமாக நடக்க வேண்டுமென்பது என் எண்ணமல்ல. லீலா! இப்பொழுது மேல் நடக்கவேண்டிய விஷயம் தான் என்ன?

லீலா:—வேறு வழி இல்லை.

விந :—வழி இல்லையா? நீ இவ்விதம் சொல்வதைக்கேட்க ஆச்சரியமுண்டாகிறது. நீ இன்னும் உலகம் அறியாதவள். நாம் மணந்துகொள்வதால் நமக்கு எவ்விதக் கெடுதலும் உண்டாகாது.

லீலா :—(வருத்தத்துடன்) விநய, தாங்கள் அவ்விதம் சொல்லக்கூடாது. என்னை விவாகம் செய்து கொள்வதால் தங்களுக்கு ஆயுள் முழுவதும் கஷ்டம் விளையுமென்றே ஊகிக்கிறேன்.

விந :—கஷ்டமா? ஞான சூனியர்களாயும் சாஸ்திர ஆராய்ச்சி அற்றவர்களாயும் உள்ளவர்களின் கட்டுப்பாட்டுக்குப் பயந்து நான் எனது நன்மையை இழந்துகொள்ளலாமா? லீலா! யோசித்துப் பார். நான் எவ்வித கெட்ட காரியத்தையும் செய்யவில்லை. பிறருக்குத் தீமை விளைவிக்கவும் இல்லை. இவ்விதமிருக்க நான் யாருக்கு எதற்காகப் பயப்படவேண்டும்?

லீலா :—தர்மாதர்ம விசார மற்றும், தயவற்றும், பணத்திமிர்கொண்டும் இருக்கும் பணக்காரனின் கட்டுப்பாட்டிற்கு எல்லோரும் பயப்படவேண்டியதுதானே?

விந :—விவேகமற்றவர்களின் கட்டுப்பாட்டிற்கு நாம் நமது ஒப்பற்ற காதலை ஒப்படைத்து விடமுடியுமா?

லீலா :—ஏன் அவ்விதம் செய்துவிடக்கூடாது?

விந :—உன்னால் என்னை மறந்துவிடமுடியுமா?

லீலாவதி மௌனம் சாதித்தாள்.

விந :—லீலா! உன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து விடு. என்னைச் சகிக்கமுடியாத துன்பத்திற்கு ஆளாக்கி விடாதே.

லீலா :—(வெட்கத்துடன்) ஒருகாலும் முடியாது. வேறு வழி இருந்தால் சொல்லுங்கள்.

விந :—வழியா. நூறு விதங்களிருக்கின்றன. ஒன்றும் சாத்தியப்படாவிட்டால் நாம் இருவரும் ஒரே காலத்தில் உயிரை விட்டுவிடுவோம். கவலை ஏன்? உன்னால் மட்டும் என்னை மறக்கமுடியாதென்றால் நான் மட்டும் உன்னை எவ்விதம் மறக்கமுடியும்?

லீலா :—தாங்கள் புருஷர்.

விந :—ஆம் உண்மையே. பெண்களால் சகிக்க முடியாத சிலவற்றைப் புருஷர்கள் சகிக்கக் கூடியவர்களே. ஆனால் உயிரினின்றும் உடலினின்றும் வேறுபடாது, தசையுடனும் நரம்புகளுடனும் ஒன்றுபட்டு ஒவ்வொரு நாடியிலும் பிரவாகிக்கும் ரத்தத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் உண்மைக் காதலை மட்டும் புருஷனால் ஒருகாலும் மறக்க முடியாது. காதல் என்பது ஆயிரத்தில் ஒருவனுக்கே உண்டாகும். உண்மைக் காதல் என்பது ஸ்திரீகளின் அங்க சௌந்தரியத்தைக் கண்டு உண்டாவதன்று. காதல் என்பது ஒரு ஸ்திரீயின் நற்குணத்தால் உண்டாகக்கூடியதாகையால் காதல் இளமைப் பருவத்தையோ, தேக லட்சணத்தையோ, ஆபரண அலங்காரத்தையோ சிறிதும் அனுசரிக்க மாட்டாது. காதல் கஷ்டத்தையோ, ஆபத்தையோ, முதிர்ந்த பருவத்தையோ காரணங்கொண்டு விலகக் கூடியதல்ல. உண்மைக் காதல் என்பது உள்ளன்பைத் தனக்காதாரமாகவும் ஒற்றுமையைத் துணையாகவும் ஒருமைப்பட்டு விளங்கும் ஒரு அற்புத சக்தி படைத்திருப்பதுபற்றி அக்காதலை என்னால் எவ்விதம் கைவிட முடியும்? ஹிருதய கமல மத்தியில் பேரின்ப ரூபமாக விளங்கும் ஆன்ம சக்தியை இழப்ப தெங்ஙனம்? நான் எரியும் தீயில் விழுவேன். சமுத்திரத்திலும் குதிப்பேன். மனிதர்களுக்கதிகப் பிரியமாகிய உயிரையும் விடுவேன். உன்னையும் உன்னிடம் எனக்கேற்பட்டுள்ள உண்மைக் காதலையும் ஒருகாலும் மறக்கமுடியாது.



லீலாவதி இவ்வார்த்தையைக்கேட்டு ஆச்சரியத்தாலும் ஆழ்ந்த யோசனையாலும் நெடுநேரம் ஒன்றும் பேசவில்லை. சற்று மனம் சமாதானமடைந்ததும், "சுவாமி! நான் தங்களுக்களித்த மனதை இனிப் பிறருக்கு அளிக்க என்னாலேயே முடியாது. அவ்விதமிருந்தும் உங்களுடைய க்ஷேமத்தின்பொருட்டு இவ்விதம் நான் சொல்லநேரிட்டது. எனது அதிர்ஷ்டம் எவ்விதமிருக்கிறதோ தெரியாது. உண்மைக் காதல் என்பது விவாகமாகி நாமிருவரும் புருஷனும் மனைவியுமாக உலக இன்பம் அனுபவிப்பதே என்று நான் எண்ணியிருக்கவில்லை. ஆதலால் நமது ஒற்றுமை வெற்றியடையும் வரையில் நாம் எவ்விதம் நடந்து கொள்ளல்வேண்டுமென்பதுபற்றி நாம் கவனிப்பதே முக்கியம்" என்று சொல்லிமுடித்தாள். இதுகேட்ட விநயகுமாரன் மிகுந்த சந்தோஷத்துடன், "என் பிரியமுள்ள லீலாவதி! பசு, பட்சி, மிருகங்களும் அனுபவித்துவரும் காம இச்சையைக் காதலாக அமைத்துக் கொண்டாடும் சாமானிய ஜனங்களைப்போல் நீயும் இருந்துவிடாமல் காதலின் உண்மையை அறிந்து என்னிடம் கருணை கூர்ந்ததுபற்றி நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். நான் இனி எச்சமயம் எவ்விதம் நடந்துகொள்ளல்வேண்டுமோ அவ்விதம் மிகவும் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்வேன். நீ சற்றும் கவலைப்படாதே," என்று உரைத்து மனச்சமாதானத்துடன் தன் வீடு சென்றான்.

மறுநாள் லீலாவதி வழக்கம்போல் தன் தோழி வீடு சென்றிருந்து மாலைப் பொழுதில் தன் வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். அவளுடன் துணைக்கு வேறு ஒருவரும் செல்வதில்லை. எல்லா வீடுகளிலும் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. இச்சமயம் நடுவழியில் ஒரு சாதாரணமான வீட்டிலிருந்து, "லீலா! எங்கள் வீட்டிற்கு ஒரு முறையாவது வந்து போகக்கூடாதா? ஏழைகள் வீடென்றால் இவ்வளவு அலட்சியமா?" என்று ஒரு சப்தம் உண்டாயிற்று. இக்குரல் தனது அந்தரங்கத் தோழியான சுபத்திரை யுடையதே என்று லீலாவதியும் அதிக சந்தோஷத்துடன் அவளைக் காணும் நிமித்தம் வீட்டிற்குள் சென்றாள். வழிநடையில் ஒருவரையும் காணோம். விளக்கும் ஏற்றப்பட்டிருக்கவில்லை. லீலாவதி சிறிது பயத்துடன் "சுபத்திரா! நீ எங்கிருக்கின்றாய்?" என்று கேட்டாள்.

பதில் :—பின்புறமிருக்கும் கடைசி அறையில்.

லீலா :—இருட்டில் அவ்விடம் எங்கிருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. இந்நேரமாயும் வீட்டில் விளக்கேற்றப்படாமலிருப்பது என்ன?

பதில் :—நான் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறேன், வீட்டில் ஒன்றிருந்தால் நான் என்ன செய்வேன்?

லீலா :—நீ இப்பொழுதிருக்கும் இடம் எது?

பதில் :—இன்னம் பத்து அடி முன்னாலே வா.

லீலாவதி இருட்டில் தட்டித்தடவிக்கொண்டு ஓரறையில் சென்றதும் அங்கு ஒருவருமில்லை. "சுபத்திரா" என்று கெட்டியாகக் கூப்பிட்டாள். பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. திடீரென்று அவ்வறையின் கதவு வெளியில் பூட்டப்பட்டது.

இதுகண்டு லீலாவதி ஏதோ அபாயமென்று உரத்துக் கூவினாள். கதவைத் திறக்கப் பிரயத்தனப்பட்டாள். கதவைத் தடதடவென்று தட்டினாள். தன்னை வெளியில் விட்டுவிடும்படி கதறினாள். கேட்போரைக் காணோம். இதற்குள் அவளுடம்பு நடுநடுங்கி நிற்க மாட்டாமல் தரையில் வீழ்ந்துவிட்டாள். அவள் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் அவ்வறையை நிரப்பிற்று. தனக்கேற்பட்ட ஆபத்தைக் கண்டு மனம் தாங்காது லீலாவதி மூர்ச்சித்து விட்டாள்.

லீலாவதியின் அதிர்ஷ்டம் எவ்விதமிருக்கிறதோ, எதிர்காலத்திய நிகழ்ச்சி எவ்விதமிருக்குமோ யாருக்குத் தெரியும். மேல் நடக்கப்போவது இன்னதுதான் என்று எவன் அறிகிறனோ அவனே மனிதர்களில் சிரேஷ்டன்.

## நான்காவது அத்தியாயம்.

### உத்தமி.

வீரநாராயணன் வீட்டின் மாடித் தாழ்வாரத்தில் இருக்கும் பெரிய கடிகாரத்தில் மணி ஏழு அடித்தது. பௌர்ணமி கழிந்த பஞ்சமியாகிய அன்று தெருவில் ஒரு விளக்குமில்லாமல் இருள் சூழ்ந்திருந்தது. அச்சமயம் அதே வீட்டின் மெத்தையிலுள்ள முன் அறையில் ஒரு வாலிபன் சோபாவின்மீது உட்கார்ந்திருந்தான். அவன் வீரநாராயணனது ஏகபுத்திரன். அவன் குணம் போலவே அவன் பெயரும் உன்மத்தராகவன் என்று அமைந்திருந்தது. சோபாவிற்கு அருகில் நவயௌவனசாலியாகிய சாளகுமாரி தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தாள். இவள் உன்மத்தராகவனின் மனைவி.

லக்ஷ்மி சாஸ்வதிகளுக்குள் மாமிமருகியர்க்கு சகஜமாகிய சண்டை இல்லாமலிருக்கவில்லை. ஆனால் இவர்களில் லக்ஷ்மிக்குக் கொஞ்சம் புத்தி மந்தம். சாஸ்வதி கூர்மையான புத்தியுள்ளவள். மான அவமானத்தைச் சாஸ்வதியைப்போல் லக்ஷ்மி அறிந்தவள் அல்ல. ஆகையினாலேதான் லக்ஷ்மி இருக்குமிடம் சாஸ்வதி எட்டியும் பார்ப்பதில்லை. சாஸ்வதி இருக்குமிடம் மட்டும் லக்ஷ்மி எக்காலத்திலேனும் ஒரு சமயம் போய்ச் சேருவாள். தற்காலம் லக்ஷ்மிக்கும் சாஸ்வதிக்கும் நடுவிலிருக்கும் விரோத பாவத்தை ஆராய்ந்து அறிந்த சில உத்தமர்கள் இவர்களுக்குள்ள வைரத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று வழிதேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தீர்க்காயுளை அளித்து அவர்கள் நன்முயற்சியை நிறைவேற்றுவானாக!

உன்மத்தராகவனுக்கு லக்ஷ்மிகடாட்சக் குறைவேயில்லை. ஆனால் அவன் மிகவும் மூடனாயிருந்தான். மூர்க்கன் யார்? எவனை மூர்க்கன் என்னலாம்? மூர்க்கத்தனத்திற்குப் படிப்பின்மை காரணமா? அல்லது படித்தவன் மூர்க்கத்தனமடையாமல் இருப்பதுண்டா? உலகில் மூர்க்க குணமற்ற அறிவிலிகளும், கொடும் மூர்க்கர் எனப்பேர் படைத்த படிப்பாளிகளும் பலர் இருப்பதாக நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். அவ்விதமானால் படிப்பிற்கும் சுபாவத்திற்கும் சம்பந்தம் உண்டா? ஜனங்கள் படித்தவர்களுக்குச் செய்யும் மரியாதையைப் படிப்பற்றவர்களுக்குச் செய்வதில்லை. இதற்குக் காரணம் என்ன? பிறந்து சிலநாள் கழித்து ஏற்படும் படிப்பானது இயற்கை குணத்தை மாற்றக்கூடியதா? அது ஒருகாலும் இல்லை. படிப்பு மனிதன் சுபாவ குணத்திற்கு மெருகு கொடுக்கக்கூடிய ஒரு பொருளன்றி வேறில்லை. துர்க்குணமுள்ளவன் படிப்பிற் சிறந்து தனது துர்க்குணத்திற்கே அதை ஆதாரமாக்கிக் கொள்ளுகிறான். நற்குணமுள்ளவன் படிப்பைத் தனது உத்தம குணத்திற்கு உதவியாக்குகிறான்.



நமது உன்மத்தராகவனிடம் முற்கால வழக்கப்படி படிப்பில்லாவிட்டாலும் நவநாகரிக வழியில் படித்தவன் என்றே ஜனங்கள் சொல்லிக் கொள்வார்கள். உன்மத்தன் ஜயநகரத்தில் ஒரு வருஷகாலமிருந்து அநேகம் வித்தைகளைக் கற்றுவந்திருந்தான். நவநாகரிக வாலிபர்களிடமுள்ள எல்லா அடையாளங்களும் அவனிடம் பொருந்தியிருந்தன.

இன்று சாளகுமாரிக்கு அதிர்ஷ்டம். ஏனென்றால் உன்மத்தராகவன் அன்று தன் மனைவியின் அறையில் உட்கார்ந்திருந்தான்.

சாளகுமாரி மெதுவான [illegible]டன் கணவனை நோக்கி, “பிராணநாதா! [illegible] அடியாள்மீது ஏது தமக்கு இவ்வளவு க[illegible] ஏற்பட்டது?” என்றாள்.

உன்.:—நானொரு காரியத்திற்காக இங்கு வந்தேன்.

சாளை:—என்னிடமும் தங்களுக்கு ஒரு காரியமிருக்குமாகில் அது என் நற்காலமேயாகும்.

உன்.:—எனக்கு அதிக வேலை இருக்கிறது. நான் இங்கு நெடுநேரம் தாமதிக்கமுடியாது.

சாளை:—என் தலையில் இவ்வளவு அதிர்ஷ்டம் எழுதி இருக்கிறதென்று நான் எண்ணி இருக்கவில்லை. தாங்கள் சிறிது நேரமாவது இங்கு உட்கார்ந்து இருக்கக்கூடாதா?

உன்.:—நான் உன்னுடன் விளையாடுவதற்கு வரவில்லை.

சாளை:—அது எனக்குத் தெரியும். தாங்கள் மற[illegible]க இவ்விடம் வந்திருக்கக்கூடும்.

உன்.:—எனக்குக் கோபத்தை உண்டாக்காதே.

சாளை:—என்னைத் தாங்கள் அழச் செய்யக்கூடாது.

உன்.:—உன் அழுகை எனக்கு லட்சியமில்லை.

சாளை:—என் அழுகையைத் தாங்களே கவனியாவிடில் எனக்கு வேறு கதி உண்டா?

உன்:—வயிற்றுக்கில்லாமல் எங்கேயோ கிடந்த பெண்பிசாசை நான் தாலிகட்டி அன்ன வஸ்திரமளித்துக் காப்பாற்றி வருவதால் நீ அழுகிறாய்.

சாளகுமாரி தன் புருஷனின் கொடுஞ்சொல்லைக் கேட்டு அழ ஆரம்பித்தாள். இதுகண்டு உன்மத்தன், உன்மத்தனைப்போலவே அவளைக் காலால் உதைத்துத் தள்ளினான். சாளையும் புருஷனிடம் எதிர்த்து வாயாடாமல் பின்னும் எழுந்து நின்றாள். உன்மத்தன் அவளை நோக்கி “கேடுகெட்ட பிணமே! நீ இருக்கும் லட்சணத்திற்கு ஆபரணங்களும் வேண்டுமோ? எனக்கு உற்ற வேளையில் இவைகளனைத்தையும் என்னிடம் கொடாவிடில் உன்னை எட்டி உதைத்துத் தெருவில் தள்ளிவிடுவேன்” என்றான்.

“தங்களுக்கே என்மேல் அன்பும் அபிமானமும் இல்லாது போய்விட்டபின் இவ்வுடைமைகளால் பயன் என்ன? எல்லாவற்றையும் தாங்களே எடுத்துக்கொள்ளலாம்” என்று தனதுடம்பிலுள்ள சகல ஆபரணங்களையும் அவள் கழற்றிக் கொடுக்கப் புருஷன் என்று ஏற்பட்டிருக்கும் தான் அம்முறைமையில் அக்கினி சாட்சியாகக் கலியாணம் செய்துகொண்ட மனைவியை இஷ்டம்போல் துன்பப்படுத்தத் தனக்குச் சர்வ அதிகாரம் உண்டென்று நினைக்கும் புத்திமான்களில் ஒருவனாகிய உன்மத்தராகவன் அவைகளை எல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வெளியிற் சென்றுவிட்டான்.

சாளகுமாரி! உன்னைப்போல் பெண்ணாய்ப் பிறந்தவர்களில் அனேகமாய் இக்காலத்தில் உன்னைப்போலவே கஷ்டப்படுகிறவர்கள் அதிகமன்றிச் சுகமாக வாழ்வோரைக் காண்பதரிது.

நாகரிகத்தின் முதிர்ச்சியால் சிறகு இல்லாமல் ஆகாய வீதியில் பறக்க நினைக்கும் ஆடவர்களுக்கெதிராக ஆகாயத்தில் நாம் ஏன் கால் நடையாய்ச் சஞ்சரிக்கக்கூடாது என்று எண்ண வேண்டியவர்களாகிய பெண்பாலர், வாவாத் தமது விவாக முறையை வெறுப்பதும் நியாயமே என்று உனக்குத் தோன்றக்கூடும். ஆனால் பெண்களுக்கு இகபர சாதகமாயும், க்ஷேமலாபங்களுக்கு ஆதாரமாயும் இருக்கும் விவாகமே இவ்வளவு துன்பத்திற்கு ஆளாக்குமாயின், விவாகத்தை வெறுப்பதால் ஏற்படக்கூடிய கஷ்டம் அளவற்றதாய் இருக்குமென்பதை நீ நிதானித்தல் அவசியம். வருமுன் தடுக்கக்கூடிய விபத்துக்களென்றும், வந்தபின் நீக்கக்கூடிய ஆபத்துக்களென்றும் பேதமிருப்பதுபோலவே, நன்மைக்கென்று தீர்மானிக்கப்படும் விஷயங்களும் நமது தலைவிதியையும் கால தேச வர்த்தமானங்களையும் அனுசரித்துத் தீமையாகவே முடிவதும் உண்டு. அவற்றில் ஒன்றாய் விவாகம் நன்மைக் காரம்பித்து தீமையை விளைவிக்குமானால் சகல சௌக்கியங்களுக்கும் காரணமாகிய மனச்சாந்தியை நாமடைவதே பரிகாரமாகும். ஆனால் தன்னைக் கடுமையாய்ப் பேசியதைச் சகித்துக்கொண்டிருந்ததோடு ஸ்திரீகளுக்கு முக்கிய விருப்பமாகிய ஆபரணங்களை நீ உன் புருஷனிடம் கொடுத்துவிட்டதை யோசிக்கும்பொழுது, மனச்சாந்தியுள்ள உன்னைப்போன்ற உத்தமிகளைக் காண்பதும் பாக்கியமேயாகும்.

ஐந்தாவது அத்தியாயம்.

## ஆபத்தின்மேல் ஆபத்து.

மூன்று தினங்களாய் லீலாவதியைப் பற்றித் துப்பு ஒன்றும் தெரியவில்லை. லீலாவதி இவ்விதம் திடீரெனக் காணாது மாயமாய்ப்போய் விட்டதைப்பற்றி அனந்தபுரத்திலுள்ள ஜனங்கள் இஷ்டம்போல் பேசிக் காலம் கழித்தார்கள். லாப நஷ்டத்திற்குக் கட்டுப்படாது பொழுதுபோக்கின் நிமித்தம் வம்புபேசுவோரின் பேச்சிற்கு அர்த்தம் ஆதிசேஷனாலும் சொல்ல முடியாது. லீலாவதியின் அன்னை யடைந்த விசனத்திற்கு முடிவென்பதில்லாமலிருந்தது. லீலாவதியை நன்கறிந்த உத்தமர்கள் அவளைப் பற்றியும், அவள் தாய் படும் துயரத்தைப்பற்றியும் வருந்தியதோடு இவ்வனர்த்தத்திற்கு வீரநாராயணன் மூலகாரணமாயிருக்கக்கூடு மென்று தமக்குள் சந்தேகித்தார்கள். கிராமாதிகாரியைப்பற்றி வாய்திறக்க முடியுமா?

ஒருநாள் விடியற்காலையில் விநயகுமாரன் லீலாவதியைப்பற்றி ஏதேனும் சமாச்சாரம் கிடைக்குமா என்ற உத்தேசத்துடன் தெருக்களில் சுற்றித் திரிந்தான். லீலாவதி காணாமற் போனதிலிருந்து விநயனுக்கு ஊண் உறக்கமில்லை. நன்னடக்கை வாய்ந்த லீலாவதிக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தைக்காட்டிலும் தியர் மகாசபையின் வசைச்சொற்களுக்கு அவள் ஆளாகியிருப்பதை நினைத்து நினைத்துத் தவித்தான். அதிகம் சொல்வதேன். விநயகுமாரன் சித்த சுவாதீன மற்றவனாகவே பெரும்பாலும் காணப்பட்டான் என்பது உண்மை. இச்சமயத்தில் வீரநாராயணன் மைத்துனனாகிய காளன் விநயன்முன் தோன்றி, "விநயகுமாரா! இஃதென்ன? இவ்வளவு காலையில் எங்கு சென்றுகொண்டிருக்கிறாய்?" என்றான்.

விநயன் :—பிரபுவே! தாங்கள் எது வரையில்?

காளன் :—போக்கிடமெங்கே? உன்னிடமே வந்தேன்.

விநயன் :—என்னாலாகவேண்டிய தென்ன?

காளன் :—விசேஷ மொன்றுமில்லை. வீரநாராயணரின் குமாரர் உன்னைக் காண விரும்புகிறார். என்னுடன் கூடவே நீ வரவேண்டிய தவசியம்.



விநயன் :—தங்களுடன்கூட இப்பொழுதே வரமுடியாது. சிறிது நேரங் கழித்து வருவதாய்க் கூறும்.

காளன் :—நீ இப்பொழுதே ஏன் வரக்கூடாது? உனக்கென்ன உத்தியோகமா? அந்தஸ்து ஏதேனும் ஏற்பட்டிருக்கிறதா? பெரிய மனிதர்களிடம் எளியவர்கள் நடந்துகொள்ளும் விதத்தை நீ ஏன் அறியவில்லை?

இச்சொல் செவியில் வீழ்ந்ததும் விநயகுமாரனுக்கு உண்டாகிய கோபம் கொஞ்சமல்ல. புருவத்தைச் சுளித்து, "அய்யா நவீனப் பிரபுவே! இவ்வூருக்குத் தாங்கள் ஒரு பெரிய மனிதர்தான். அதிகமாய் இனி பேசுவீராயின் தக்க மரியாதை பெற நேரிடும், போய்வாரும்" என்று கர்ச்சித்தான். காளன் நடுநடுங்கி வந்த வழி திரும்பினான்.

விநயன் அதிகாலையில் காளன் முகத்தில் விழித்ததற்கு மனம் வருந்தியவனாக வழி நடந்தான். நடுவழியில் ஒரு சிறு பெண்குழந்தை ஒரு கடிதத்தைத் தன் கையில் கொடுப்பதை விநயன் பெற்றுக்கொண்டு அச் சிறுமி யாரென்று கவனிப்பதற்குள் எதிரில் ஒருவரையும் காணோம். மிகத் திகைப்புடன் கையிற்கிடைத்த கடிதத்தைப் படிக்கலானான். அதில் "உன் மத்தாகவனின் ஏவுதலால் லீலாவதி சிறைப்படுத்தப்பட்டிருக்கிறாள். அவளை வைத்திருக்குமிடம் தெரியவில்லை. உங்கள் மனவேதனையைக் கண்டு எனக்குத் தெரிந்ததைத் தங்களுக்குத் தெரிவிக்க முன்வந்தேன். நன்றாய்த் தேடிப் பார்த்தால் லீலாவதியைக் கண்டுபிடித்துவிடலாம். இக்கொடிய செயலுக்குக் காரணம் யாரென்பதைத் தெரிவித்திருக்கிறேன். தாங்கள் அம்மனிதனுக்கு ஒரு விதத்திலும் கெடுதல் செய்யக்கூடாதென்பது எனது கோரிக்கை. நான் யார் என்பது உங்களுக்குத் தெரியாது. முன்பின் அறியாத பெண்பால் ஒருத்தி நமக்கு இவ்விதம் எழுதக் காரணமென்னவென்று தாங்கள் எண்ணக்கூடாது. உலகிலுள்ள ஆன்மராசிகளில் இருபாலரில் ஒரு வகுப்பினராகிய பெண் மக்களுக்கும் பூததயை, பச்சாத்தாபம், பரிசுத்தத் தன்மை, பரோபகாரம் முதலியவை பிறவிக் குணமாகையாலும், பெண் மக்களின் அபிவிர்த்தியில் வாய்மொழி நடவடிக்கை இருவழியிலும் தாங்கள் சிறப்புற்றிருப்பதாலும், நான் எனக்குள்ள பல நிர்ப்பந்தங்களுக்கிடையில் இக்கடித மெழுதியிருக்கிறேன். இக்கடிதத்தைப் படித்ததும் நெருப்பிலிட்டுவிடவும். இல்லையாகில் நான் பெரிதும் துன்பத்திற்காளாவேன் என்பதை கவனிக்கவும். இங்ஙனம், ஒரு ஏழை சகோதரி" என்று எழுதப்பட்டிருந்தது.

கடிதத்தில் எழுதியவர் பெயருமில்லை, தேதியுமில்லை. இதைப் படித்ததும் விநயனுக்குண்டான கவலையும் விசனமும் சொல்லிமுடியாது. தன் வீடுவந்து தந்தையாகிய அனந்தராமனிடம் இது விஷயத்தைத் தெரிவித்தான். இது கேட்டு அனந்தராமன், "குழந்தாய்! லீலாவதியை இவ்வூரில் வைத்திருக்கமாட்டார்கள். வீரநாராயணனுக்குச் சொந்தமான வேறு கிராமம் ஒன்றில் வைத்திருப்பானென்பது நிச்சயம். பிரயத்தனித்தால் லீலாவதி அகப்படுவளாயினும் இதற்கிடையில் உனக்கு ஆபத்து நேரிடக்கூடும்" என்றான்.

விநயன், "தந்தையே! தாங்கள் கவலையுற வேண்டாம். நானிப்பொழுதே தேவபுரம் சென்று, போலீசாரின் உதவியால் லீலாவதியைக் கண்டுபிடிக்கத் தீர்மானித் திருக்கிறேன்" என்றுரைத்துப் பல்லக்கில் ஏறி தேவபுரம் சென்றான்.

அனந்தபுரத்திற்கும் தேவபுரத்திற்கும் நடுவில் ஒரு பெரிய சரோவரம் இருக்கிறது. பல்லக்கை போகிகள் ஒரு மரத்தடியிலிறக்கி

வைத்து நதிக்கருகாக நீர் அருந்தச் சென்றார்கள். மாலைப்பொழுது சமீபிக்கும் தறுவாயிலிருந்தது. விநயகுமாரனும் பல்லக்கைவிட்டு வெளிவந்து மாலை நேரத்தால் பயங்கரமாயும் இயற்கையற்புதத்தால் மனோகரமாயுமிருக்கும் கண்காட்சியை யுற்று நோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தான். இச்சமயம் யமகிங்கரன்போல் கறுத்துப் பெருத்த உடலுள்ள ஒருவன் பின்புறமாக மெல்லென வந்து தன் கையிலிருந்த பெருந் தடிகொண்டு விநயகுமாரன் தலைமீது ஓங்கி அடித்தான். அடிபட்டதுதான் தாமதம், விநயன் உணர்ச்சி இழந்து தரையில் வீழ்ந்துவிட்டான். மரணத்தறுவாயிலேற்படக்கூடிய அடையாளங்கள் விநயனிடம் ஏற்படுவதைக்கண்டு அவன் இறந்துவிட்டதாகவே மதித்து அவன் கையிலிருந்த கடிதத்தையும் பறித்துக்கொண்டு கொலையாளி மாயமானான். பல்லக்குச் சுமக்கும் ஆட்களுக்கு இது விஷயம் தெரிய இடமில்லை.

காலத்தின் மகிமையை வெல்ல யாரால் முடியும்? மானிடனே! நீ எதைக்கண்டு கர்வப்படுகிறாய்? உனது தற்புகழ்ச்சிக்கும் அகங்காரத்திற்கும் மூலகாரணமாயிருக்கும் உயிருள்ள இச்சரீரம் நிலையற்றதென்பதை நீ அறியவேண்டாமா? நீ ஆசை என்ற சுழலில் அகப்பட்டுக்கொள்ளும் சமயம் எதைத்தான் செய்யத் துணியாய்? ஐயோ! நீரிற் குமிழிபோன்ற நிலையற்ற காயம் படைத்த நீ உனது உற்சாகம், மனப்போக்கு, தீர்மானம் இவைகளில் ஒரு சிறு பங்காவது உனது தேசத்திற்கும் அதன்கண்ணுள்ள சகோதரர்களின் க்ஷேமத்திற்கும் உதவக்கூடாதா?

முற்றுந் துறந்த முனிவர்களும் பிறர் நலத்திற்குப் பாடுபட்டிருக்கச் சுய நலத்தையே முக்கியமாய்க் கொண்ட உன்னால் பிறர் நலம் சற்றும் கவனிக்கப்படவில்லையே. உயர்ந்த மாடியில் உலாவும் நீ அதற்கும் மேல்மாடி கட்ட விரும்புகிறாயன்றித் தங்க நிழலின்றிக் கடும் வெய்யிலில் கஷ்டப்படும் எளியவர்களை நீ சிந்தித்தாயா?

சம்பத்தின்மிகுதியால் அதிகம் உண்டு, நோய்கொண்டு பரிகாரத்திற்கு வைத்திய சாஸ்திர விற்பன்னரைத் தேடி யலைவதன்றி ஒருவேளை உணவும் வயிறாரக் கிடைக்காது பட்டினியால் பரிதபிக்கும் ஏழைகளைக் கவனித்தாயா? பொது நல ஊழியம் ஒன்றே இகபரசாதகமாயுள்ளதென்பதை நீ யறிந்தாயா? மாதா பூர்வ ரூபமென்ற முதுமொழியைக் கவனித்துத் தேசமாதாவின் கைங்கரியத்தை நீ சிரமேற்கொள்ள வேண்டுவது உன் கடமையல்லவா? "தேசத்தோடொத்து வாழ்," "நாடொன்று வாழக் கேடொன்றுமில்லை" என்ற நீதிமொழிகளின் கருத்து என்னவென்பதை ஊகித்தாயா? துக்கமயமாகிய இப்பிரபஞ்ச வாழ்க்கையில் உனது ஆன்மா தெளிவுற்று நிர்விகாரமா யிருப்பதற்குத் தேச ஊழியமே சிறந்த தர்மம் என்பதை உறுதியாய் நம்பு.

நம் இதிகாச புராணங்களிலுள்ள சூட்சமார்த்தங்களை உற்றுப் பார். ஆனால் மனிதப்பிறவியைக் கட்டி வைத்தாட்டும் மாயை என்பதொன்று இல்லாவிடில் பொறாமை ஏது? சண்டை சச்சரவுகளெங்கே? மாயை என்பது சம்சார காரிய விசித்திரங்களை ஒருங்கே கோர்க்கப்பெற்றிருக்கும் ஒரு கயிறுபோன்றதாகும். இதினின்றும் முழுதும் விலகிக்கொள்வதற்குத் தேசாபிமானிகளின் நல் உபதேசமும் சகவாசமுமே முக்கிய சாதகம் என்பதில் ஆட்சேபமுமுண்டோ?

விநயகுமாரன் உயிரற்ற பிணம்போல் தரையிற் கிடக்கிறான். யாருக்காக இவ்வாபத்தையடைந்தானோ அந்த லீலாவதி எங்கே? அவன் பரோபகாரத்திற்கு விமோசன மெங்கே? அபி



மானம் மிக்க தந்தை எங்கே? பரம விரோதியான் உன்மத்தாராகவனெங்கே? இந்நிலைமை ஆச்சரியப்படக்கூடியதே. இந்த அவஸ்தையில் சத்துரு மித்துரு இல்லை, வஞ்சனை மோசம் கிடையாது. கர்வமும் கபடமுமில்லை. உலக வாழ்க்கையில் பிரவிர்த்தி நிவர்த்தி இரண்டுமில்லை. யோக மார்க்கத்தில் ஆழ்ந்திருக்கும் யோகீசுவரரின் நிலைமையானது மூர்ச்சையடைந்திருக்கும் விநயனிடம் காணப்படுகிறது. இக்கொடிய காட்சியைக் கண்டு கண்ணீர் விடுவார் யாருமில்லை. நெடுநேரஞ்சென்று ஆற்றோரம் சென்றிருந்த பல்லக்காட்கள் திரும்பி வந்து பயங்கரமான இக்காட்சி கண்டு நடுநடுங்கினார்கள். தங்களுக்கும் இந்த ஆபத்து நேர்ந்துவிடுமென்ற பயத்தால் விநயகுமாரனை விட்டு மூலைக்கு மூலை ஓட்டம் பிடித்தார்கள். மனிதனுக்குப் பிராண பயத்தைக்காட்டிலும் வேறு பயமில்லை என்பது உண்மை.

## ஆறுவது அத்தியாயம்.

### நூதன தம்பதிகள்.

காத்யாயினீ என்ற நதி அழகாய் ஓடிக்கொண்டிருக்கிறது. அதனிடையிலிருக்கும் ஓடம் பிரயாணத்திற்குச் சித்தமாயிருப்பதைக் கவனித்தால் அவசர காரியமாக ஆற்றைக் கடந்து செல்லவேண்டிய பிரயாணிகள் ஆற்றோரத்திலிருப்பதாகவும் ஊகிக்கலாம். அந்தகாரமாயிருக்கும் இரவில் ஒரு யுவ புருஷனும் அழகிய பெண்பால் ஒருத்தியுமாக இவ்வோடத்தினருகில் வந்து நின்றார்கள். ஆடவன் பிரயாண சாமான்களுடன் முன்னதாக ஓடத்திலேறிப் பிறகு பெண்மணியை ஓடத்திலுட்காரச்செய்தான். கரையோரமிருந்து ஓடம் நகரவாரம்பித்ததும் சமீபத்திலுள்ள தனது கிராமம் கண்ணுக்கு மறைவுபட்டுவருவது கண்டு மாதவன் மனங்கலங்கி அருகிலுள்ள அங்கனாமணியை நோக்கி, "அன்பார்ந்தவளே! ஜனன பூமியை விட்டுச்செல்லும்போது உண்டாகும் வியாகூலமே இத்தகையதாகில் தான் பிறந்த தேசத்திற்கே தீங்கிழைக்கவும் சிலர் முற்படுகிறாரென்பதை எவ்விதம் நம்ப முடியும்?" என்றான்.

நங்கை :—நாதா! தாம் செய்வது தீங்காயினும் தேசசேவைக்காகவே பாடுபடுவதாக நினைக்கும் உத்தமர்கள்போல் தங்களுடைய கஷ்டங்களுக்குக் காரணமாயிருக்கும் நான் தங்களுடைய பத்தினி என்ற ஸ்தானத்தையடைந்தது கண்டு மகிழ்வடைகின்றேன். நான் பரிசுத்தமடைந்தேன், தங்களுக்கு மட்டும் என்னால் துன்பமென்பதில் சந்தேகமே இல்லை.

மாதவன் :—ராதே! நீ இவ்வாறுரைப்பது கண்டு என் மனம் பதறுகிறது. உன்னை மனைவியா யடைந்ததால் நான் பாக்கியமுள்ளவனானேன். உன்னையின்றி வேறு ஒருத்தியை விவாகம் செய்துகொண்டிருப்பேனாகில் பரோபகாரம், தேச சேவை போன்ற ஆன்மார்த்த விஷயங்களில் ஊக்கமேற்பட்டிராது. இச்சம்சார வாழ்க்கையிலேயே எனது உடல், பொருள், ஆவி மூன்றும் ஈடுபட்டிருக்குமல்லவா? இவ்விதமிருக்க உன்னால் எனக்குக் கஷ்டமென்றாலென்ன?

ராதை :—தாங்கள் என் விஷயத்தில் இவ்விதம் நினைத்திருப்பது தங்கள் குண விசேஷத்திற்குப் பொருத்தமானதே. ஆனால் என்னை விவாகஞ் செய்ததால் தாங்களடைந்த நஷ்டமும் கேட்ட வசைமொழியும் கொஞ்சமா? ருதுமதி விவாகம் அவசியமென்று வாய்ப்பறை சாற்றிய புண்ணிய புருஷர்கள் நமக்குச் செய்த அவமதிப்பை நினைக்குந்தோறும் மனம் திடுக்கிடுகிறதே. ஊரார்கள் தாம் நமது விவாகத்திற்கு ஒப்பவில்லை என்றால் ஆசார சீர்திருத்தக்காரர்களென்று பெயர்

வகித்தவர்களாவது முன் நின்று நமக்குரிய அநுகூலங்களைச் செய்துகொடுக்க முன் வரவில்லையே. ஊரார்களுக்கு முன் இவர்களே நமது சமபந்திபோஜனத்தையும் கூட்டுறவையும் தவிர்த்ததை எவ்விதம் மறக்க முடியும்? காரிய பாகத்தில் அனுசரிக்காமல் வாய்மொழியில் ஆடம்பரம் செய்வதே ஆசார சீர்திருத்தம் போலும்! நமது விவாகச் சடங்கு முடிந்து போஜனம் செய்யுந்தருணத்தில் அங்கு நிமிஷமும் தரிக்கமுடியாத சந்தர்ப்பம் எல்லோருக்கும் ஏககாலத்தில் ஏற்பட்டதுபோலும். மற்றவர்களைப் போல் ஆசார சீர்திருத்தப் பிரமுகர்களும் ஒதுங்கியிருந்தால் போஜனபதார்த்தம் சேகரித்ததிலுண்டான செலவாவது லாபமாயிருந்திருக்கும். இவர்களைக்காட்டிலும் வைதிகர்கள் நல்லவர்கள். சற்று அதிக தட்சணையைக் கண்டாவது விவாககாலத்திய வைதிகச் சடங்குகளைச் சரிவர நிறைவேற்றினார்களல்லவா. நமது வாத்தியார் புரந்தர சாஸ்திரிகள் கூறியதை நினைக்க எல்லாம் உண்மையாகவே இருக்கின்றன. மங்கிலியதாரணமானதும் அவரை நமஸ்கரித்தேன். அவர் ஆசீர்வதித்து, "அம்மா ராதே! நீ சௌக்கியமாய் நெடு நாள் உன் புருஷனுடன் வாழ்ந்துகொண்டிருப்பாய். இவ்வித விவாகம் நம் முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததே. இதில் நவநாகரிகமொன்றுமில்லை. பெற்றோர்களால் பாலியப் பருவத்திலிருந்து விவாகத்திற்குரியவளாகவே வளர்க்கப்படும் பெண் தனது யௌவன பருவத்தில் தனக்குரிய நாயகனைத் தனது செவிகளின் ஆராய்ச்சியினாலேயே தேர்ந்தெடுப்பதில் கெடுதலென்ன இருக்கிறது? அதிலும் வரதட்சணை என்ற கொடிய பழக்கமுள்ள இக்காலத்தில் பாலிய விவாகம் ஒப்புக்கொள்ளக்கூடியதாயுமில்லை. பிறப்பிலிருந்து இருக்கும் சில வியாதிகளைப் பிறர் அறிந்துகொள்ளும் முன்னதாகவே தக்க முதலை வரதட்சணையாய் வாங்கிக்கொள்ள முற்படும் பலரை நான் கண்டிருக்கிறேன். கலியாணப்பிள்ளை பால் மண மாறாத சிறுவனாயிருப்பதுபற்றி மணப்பெண்ணாயிருக்கும் சிறிய குழந்தையின் கழுத்தில் யானே (உபாத்தியாயர்) தாலிகட்டும் சந்தர்ப்பம் ஆயிரக்கணக்காய் என் வாழ் நாளில் ஏற்பட்டிருக்கிறது. விவாக மந்திரங்களிலுள்ள சிரத்தையால் புருஷன் மனைவி இருவருக்கும் ஒப்புயர்வற்ற நேசம் ஏற்படுவதுபோலவே தற்காலம் தனது வரம்பிற்குட்பட்ட ஆராய்ச்சியால் மணந்துகொள்ளும் தம்பதிகளும் சுகமாய் வாழ்ந்துவரத் தடை இல்லை" என்றார்.

மாதவன்:—பேதாய்! உன் குலம் கோத்திரம் இவைகளின் உயர்வை நானறிந்திருக்கிறேன். தன்னலத்தில் விருப்பும், பிறநலத்தில் வெறுப்பும் கொண்ட ஜனங்கள் வாய்க்கு வந்ததைப் பிதற்றித் திரிக. இதைப்பற்றி நான் சிறிதும் அஞ்சவில்லை. துஷ்ட சகவாசம் விட்டு விலகிவந்ததே இனி நமக்கு நற்காலமென்பது என் நம்பிக்கை. தேசோபகாரத்திற்கு ஆதாரமாகிய பரோபகாரத்தை நாம் கைக்கொண்டு நடக்க நிச்சயித்தபின் இனி நமக்குத் துணை கடவுள்தான். வீண் கவலை எதற்கு?

இவ்விதம் தம்பதிகள் தங்கள் விஷயங்களைப் பேசி முடிப்பதற்குள் அருணோதயமாயிற்று. ஓடமும் இக்கரை சேர்ந்தது. ஓடக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய வாடகைப்பணமளித்துவிட்டு ஜாக்கிரதையாய் ஓடம்விட்டிறங்கி ராதை, மாதவன் இருவரும் பாதையோரமாகக் கால்நடையாய்ச் செல்ல வாரம்பித்தனர். பத்தடி தூரம் நடப்பதற்குள்ளாகவே,



ராதை 'கீச்' என்று அலறி விழுந்தாள். மாதவன் அவளுக்கு உபசாரம் செய்து அலறி விழுந்த காரணம் என்னவென்று வினவியதும் ராதையால் பதில் சொல்ல முடியவில்லை. உடல் பதறிற்று. ஒரு மரத்தின் சமீபத்தை விரலால் சுட்டிக் காட்டினாள். அம்மரத்தடியில் ஒருவன் அடிபட்ட வண்ணமாய்க் கீழ்விழுந்து கிடப்பது கண்டு ராதையைச் சமாதானப்படுத்திக் கூட அழைத்துக்கொண்டு விநயகுமாரன் வீழ்ந்து கிடக்குமிடம் வந்து அவனைப் பரீட்சித்துப் பார்த்து உயிரிருப்பதையறிந்து சந்தோஷித்தான். ராதை ஓடோடியும் சென்று ஆற்றுத் தண்ணீரில் துணியை நனைத்து வந்து விநயனின் ரத்தக் காயங்களைத் துடைத்து உபசரித்தான். மாதவன் சிரித்துக்கொண்டு "ஆரம்பத்தில் பயந்து அலறிவிட்டாயே. என்னவிருந்தாலும் ஸ்திரீ ஜாதிதானே" என்றான்.

இது கேட்ட ராதை, "சுவாமி! ஒரு மனிதன் அநியாயமாய் இறந்து கிடக்கிறானே. சந்தர்ப்பங்களை நோக்க இது கொலையாயிருக்கும் போலிருக்கிறதே. இந்நாகரிக காலத்திலுமா இவ்வநீதம் என்ற பதட்டத்தினால் என்னையறியாமல் கூச்சலிட்டேன்" என்றாள்.

(தொடரும்)

# மாயா—ஜோதி.

சிறு கதை.

(பம்பாய் ஸ்ரீமான் நா. கு. கோபாலய்யங்கார்.)

"ஆரூர், அம்பி ஆறுமுகத்திற்கு ஓய்வொழிச்சலே கிடையாது: அவனைப் படைத்தவன் அவ்வாறு செய்து விட்டான்" என்று சிங்காரவல்லி தன் தனயனைக்குறித்து மிகவும் வருத்தப்படுவதுண்டு.

இளமையில் வறுமை யதிகம்: தந்தையோ தள்ளாத கிழவனார்: மேலும் நீடித்த பிணியால் அல்லும் பகலும் அவதியுறுவதினிமித்தம் மெலிந்த தேகத்தினையுடையவர்: இவனோ ஒருதாய்க்கொரே மகன்: ஆக சமுசாரச் சிக்கல்களிலீடுபட்டுப் புரண்டு எஞ்சிய நேரத்தே எஞ்சினீயர் பரீட்சை தேறி உத்தியோக தோரணையில் சமீபகாலத்தே யமர்ந்திருந்தும் வருமானமற்ற சிறுமானமே கூடிவரவும் ஓயாத் தொல்லைகள் ஓங்கி வளர்ந்ததினிமித்தம் மனம் மாறுதலடைய, கவலை சூழ்ந்த சிந்தனைகள் மறைந்து சாந்தியு மனவமைதிபெற சமுத்திரகரையிலுள்ள சிந்தாபுரம் சென்றான். அந்நகரபரிபாலன சபையினங்கத்தினர்களிலொருவரான சிவப்பிரகாசமுதலியார் தனது தமக்கை மகன் வெகுகாலத்திற்குப் பின் விடுமுறைபெற்றுத் தனதில்லம் வருவதைக் கண்டு பேருவகைபூண்டு, ஓடோடியும் சென்று நல்வரவு கூறி உள்ளேயழைத்துச் சென்றனர்.

கூடத்தே முதலியாரின் தவப்புதல்வி ரமா வீணையை வாசிப்பதையும் விட்டுத் தன் தாயினிடம் பரிந்து சென்று அத்தான் வருகையை வெளிப்படுத்தினாள். எற்கனவே இவன் வருகை எதிர் பார்த்திருந்த அனைவரும் ஆரூர் க்ஷேம சமாசாரங்களை விசாரித்த பின்னர் சொல்லொணாக் குதூகலமடைந்திருந்தனர். விடடங்கிய கேளிக்கைகளில் ரமா கொண்ட பேருவகையுள் யாவுங் கலந்திருந்தது.

இயற்கையிலே மகாசங்கோசப்பேர்வழியான ஆறுமுகம் தனது தாய் மாமன் வீட்டிலே வேற்றுமுகம் கொண்டான். எங்கும் பெண்ணினத்தைக் கண்டால் பேயென அஞ்சி ஓடிடுவானாதலால் இங்கும் அவனுக்கு அவ்வழக்கமே குடிகொண்டிருந்தது. சிறுமி ரமாவுக்குத்

தன்னைக் காணவும் பேசவும் இருந்த தைரியம் தனக்கில்லையே என்று வருந்துவான்.

அருமையாயிருக்கும் மருமகன் வந்திருந்த தன் பயனாக விருந்துகளும் பாட்டுக் கச்சேரிகளும் நடாத்திய சிவப்பிரகாசமுதலியார் ஒரு நாள் மாலை தனது மனைவி, ரமா, ஆறுமுகம் முதலானவர்களுடன் சமுத்திரத்தில் சிறிது தூரம் சுற்றிவரப் படகின்மீது சென்றனர்.

(Jolly boat) என்னும் அப்படகு தண்ணீரைப் பிளந்து நெடுதூரம் சென்று மறுபக்கமாக வந்துகொண்டிருந்தது. இதையடுத்தாற் போல சிறிது தூரத்திலே வேறு சிலர் இதர படகுகளில் வந்துகொண்டிருந்தனர். சமுத்திர நீர்நிலை ஒருவாறு எப்பொழுதுமிருப்பதில்லையாதலால் கொந்தளிப்பும் போலையும் வெகு வேகத்துடன் உண்டாக, இவர்களின் படகு மேலும் கீழுமாக ஊசலாடத் தொடங்கியது. உள்ளிருந்த நால்வருள்ளமும் பெரிதும் திகிலடைந்திருந்தது. படகோட்டியின் தைரியம் புகட்டும் வசனங்களால் சிறிது தூரமே கடக்கலாயிற்று. ஆளுயரமெழும்பிய அலைகள்படகுள் நீரை நிறப்பியது. சிவப்பிரகாச முதலியாரும் அவர் மனைவியும் இவ்வெதிர்பாராத விபத்துள் தாம் சிக்கியதை நினைத்துருகிப் பரமனின் பாதுகாப்பிற்காகத் தோத்தரித்து நிற்க, சிறுமி ரமா மட்டும் ஆறுமுகம் உள்ளடங்கிய நீரை வெளியே வாரிக்கொட்டி வந்ததைக்கண்டு ஆபத்து அருகிலிருந்தமையால் தானும் சகாயம் செய்யத் தொடங்கினாள். படகோட்டி அந்தகைய அபாயத்தில் படகைச் செலுத்தாது நிலையில் நிறுத்திவிட்டான். இதற்குள் சிறு துளிகளாகப் பெய்த மழை பெரிய துளிகளைப் போடவே நெஞ்சம் கலங்கிய பெரியோரிருவரும் கண்களைத் திறவாமல் கிடக்க, அச் சிறுபெண்ணோ தன்னிலைமையைக் கவனியாது, ஓய்வு கருதித் தன்னில்லமடைந்த அருமையுறவினன்—கடவுள் நியமிக்கவிருந்த கணவன்—தனது பெற்றோருக்

குதவாது இவ்வாறு மரிக்கச் சகிக்காதவளாய்
சமுத்திரத்துள்ளே துள்ளிக் குதிக்க எண்ணி
னாள். கடைசிமுறை ஆறுமுகத்தையும் பெற்
றோரையும் நோக்கிக் கடவுளை தியானம்செய்து
விட்டுக் கண்ணைத் திறந்தாள்.

"ஐயோ! அத்தானைக் காணோம்!" எ
அலறிய ரமாவின் கூக்குரலே முதலியாரி...
யுடலைத் தட்டி எழுப்பியது. ஆனால் அவ... "
குழந்தாய்! உனக்கு என்ன விபத்து?" ...
சுருண்டு கீழே சாய்ந்த பெண்ணின் த...
மேலே தூக்கிப் பிடித்த பின்னரே அ...
தாய்க்கு நடந்த விபரீதங்கள் தெரிய...
இதனடுவில் 'நெருப்பு மழை யவிந்தது போ...
விபத்துகள் முடியுமுன் தெய்வாதீனமாகக்...
டுத்தமாறி சமுத்திரம் பூராவாக சாந்தமடை...
முன் கரையில் வந்து சேர்ந்தனர். ஆறுமு...
கின் வரலாற்றைக் கண்டுபிடிக்க நண்பர்...
ஏவிவிட்டுமுதலியாரில்லமடைந்தார். வைத்தி...
கள் உடனே வரவழைக்கப்பட்டார்கள். ...
முகத்திற்குண்டான ஆபத்து அறிவிக்கப்...
முன் எல்லோரும் சிறுமி ரமாவின் ஆச்ச...
மரணத்திற்காக அழுது புரண்டார்கள். வீட்...
அல்லோலகல்லோலமாயிற்று. 'இரட்டை...
சாவு' என்றும் ஆச்சரிய மரணம் என்...ம்
வொருவரும் தமக்குத் தோன்றியவாறு அ...
பிராயப்படுவதைக்கண்டு "பொருமைப்...
உலகம், என்னை மரித்தவனாக்கிற்...;
கோட்டியின் உதவியால் தப்பினவன்நா...
இறந்தது யார்?" என்றுள்ளே...
போர்த்த ஒருவன் சென்றான். பேய், ...
கண்டார் போல் திடுக்கிட்டுச் சமீபி... ...
லோரும் "ஆறுமுகன் ...தான்" என் ...
விட்ட பொழுதே "நானும் பிழை... ...
என்னும் பதங்கள் ...த்துயிர் ப்பேழ்வாலை...
கொண்ட ரமா வாயிலிருந்து வெளிப்பே...
எங்கும் தங்கும் மங்களம் இங்கும் த...

207625

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |